பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 மாசி 07 வியாழக்கிழமை (19-02-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:85

'உதயசூரியன்' அஸ்தமனமாகிறது

# 'வீடு' சின்னத்தில் கூட்டமைப்பு போட்டி

# நேற்றுக் கூடி ஒருமனதாக முடிவு!

கொழும்பு,பெப்ரவரி19

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த தேர்தலில்போல் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் அல்லாமல் இம்முறை தமிழரசுக் கட்சியின் 'வீடு' சின்னத்தில் போட்டியிடுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றுக் கொழும்பில் கூடி இந்த முடிவை ஒருமனதாக மேற்கொண்டிருக்கிறது.**

தமிழர் விடுதலைக் கூட்டணியில் எழுந்துள்ள தலைமைப் பிரச்சினையின் விளைவு இது. 23 வருடப் பழைமை வாய்ந்த 'உதயசூரியன்' அஸ்தமனமாகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 'உதயசூரியன்' சின்னத்தைக் கைவிடுவது ஒருபுறமிருக்க தமிழர் விடுதலைக் கூட்டணிக்காரர்களில் எவரும் கூட இந்தத் தேர்தலில் தமது சொந்த 'உதயசூரியன்' சின்னத்தைப் பயன்படுத்தமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க்காங்கிரஸ், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய நான்கு கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்றுக் கொழும்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நண்பகல் 12.30 மணியளவில் கூடி, தாம் 'வீடு' சின்னத்தில் போட்டியிடுவது என்று ஒருமனதாக முடிவு செய்தனர். தமிழர் விடுதலைக் கூட்டணி

(16ஆம் பக்கம் பார்க்க)

தென்மராட்சி தெற்கில்

## மூன்று ஆலயங்களில் தினமும் பூஜை நடத்த படையினர் அனுமதி

தென்மராட்சி,பெப்.19

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருக்கின்ற மூன்று இந்து ஆலயங்களில் சிவராத்திரி தினமான நேற்றுத் தொடக்கம் நித்திய பூஜைகளை நடத்த இராணுவத்தினர் அனுமதி வழங்கியிருக்கின்றனர்.

கைதடி - நாவற்குழி பிரிவில் அமைந்துள்ள முருகன் கோவில், ஸ்ரீவள்ளியம்மன் கோவில், மறவன்புலோ பிரிவில் உள்ள தோப்பு பிள்ளையார் கோவில் ஆகிய மூன்று ஆலயங்களிலுமே பூஜை நடத்த அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

இந்த மூன்று ஆலயங்களிலும் புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்கவும் அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது.

இராணுவத்தினரால் நேற்று இந்தப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்ட செய்தியாளர்கள் அந்த ஆலயங்களையும், வயல் வெளி

(16ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் வேட்பாளர்களை நிறுத்தட்டும் அவர்களை வெற்றி பெறச் செய்வோம்

கூட்டத்தில் இருந்து வெளியேறியபோது ஆனந்தசங்கரி கூறினார்



கொழும்பு,பெப்.19

நேற்றுத் தமது தலைமையில் நடைபெற்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் நியமனக் குழுக் கூட்டத்திலிருந்து கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி வெளியேறினார். வேட்பாளர்களின் விண்ணப்பங்கள் தாம் கோரியபடி தம்மிடம் முழுமையாக ஒப்படைக்கப்படவில்லை என்று ஆத்திரமடைந்த ஆனந்தசங்கரி கூட்டத்தில் இருந்து வெளியேறிய போது பின்வருமாறு கூறினார்.

"புலிகள் திறமைவாய்ந்த வேட்பாளர்களை நிறுத்தட்டும், அவர்களை நாம் வெற்றிபெறச் செய்வோம்.

"கூட்ட ஆரம்பத்தில், பல்வேறு மாவட்டங்களிலும் இருந்து கிடைத்த வேட்பாளர்களின் விண்ணப்பங்கள் பற்றி நான் வினா எழுப்பினேன். சில மாவட்டங்களில் இருந்து வந்த ஒரு சில விண்ணப்பங்கள் மட்டும் இருக்கின்றன எனக் கூறி செயலாளர் நாயகம் விண்ணப்பங்களைக் கொடுத்தார். அவற்றில் எமது கட்சியின் தீவிர ஆதரவாளர்கள், கடந்த தேர்தல்களில் பல இன்னல்களுக்கு மத்தியில் முன்நின்று உழைத்தவர்களின் விண்ணப்பங்கள் இருக்கவில்லை.

"ஆகவே, குறுகிய கால அவகாசம் கொடுத்தாவது விண்ணப்பங்களைக் கோரி நாளைமறுநாள் மீண்டும் கூடி வேட்பாளர்களைத் தெரிவுசெய்யலாம் என்று யோசனை கூறினேன். எனது

(16ஆம் பக்கம் பார்க்க)

## புதிய கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்ததும் பிரபாகரன் கைது செய்யப்படுவாராம்!

ஜே.வி.பி. பிரமுகர்கள் கூறுகின்றனர்

கொழும்பு,பெப்.19

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆட்சிக்கு வந்ததும் வே.பிரபாகரனைக் கைதுசெய்வோம். ஆனால், இத்தனை நாள்களில் இதைச் செய்வோமெனக் காலவரையறை கூற முடியாது என்று கூட்டமைப்பின் உதவச் செயலாளர்களுள் ஒருவரான ஜே.வி.பியைச் சேர்ந்த விமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியொன்றில் நேற்றுமுன்தினம் இரவு அரசியல் கலந்துரையாடல் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலின் போது தொலைக்காட்சி நேயர் ஒருவர் தொலைபேசி மூலம் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும்போதே ஜே.வி.பி. உறுப்பினர் விமல் ரத்நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேயரின் கேள்வி வருமாறு:-

மத்திய வங்கிக் குண்டுவெடிப்புச்

(16ஆம் பக்கம் பார்க்க)

யாழ். சிறையில் உண்ணாவிரதம் இருந்த

## இந்திய மீனவர்கள் ஐவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ். சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்த இந்திய மீனவர்களில் 5 பேர் நேற்று மயங்கிய நிலையில் யாழ். ஆஸ்பத்திரியின் அவசர சிகிச்சைப்பிரிவில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த எம். முனுசாமி, கோட்டைப்பட்டினத்தைச் சேர்ந்தவர்களான அன்பரசன், அன்ரனி, நாகபட்டினத்தைச் சேர்ந்தவர்களான பரமசாமி வீரமணி, விஜயபாலன் ஆகிய ஐவருமே யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சிறைப்பிடிக்கப்பட்டு 7 மாதங்களாகியும் இதுவரை தமது விடுதலை தொடர்பான நடவடிக்கைகள் இழுத்தடிக்கப்படுவதை அடுத்தே தாம் கடந்த 16ஆம் திகதி திங்கட்கிழமை

(16ஆம் பக்கம் பார்க்க)

சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ள மீனவர்கள்.



## மலையகத்தின் சில பகுதிகளில் தனித்துப் போட்டி; வேறு சில பகுதிகளில் கூட்டமைப்புடன் கூட்டு

தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பை அடுத்து சந்திரசேகரன் தகவல்

கிளிநொச்சி,பெப்.19

சிறுபான்மைத் தமிழர்கள் எல்லோரையும் ஒன்றிணைத்து அவர்களின் பலத்தை வெளிப்படுத்துகின்ற தேர்தலாக எதிர்வரும் தேர்தல் அமையவேண்டும் என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் உடன்பாடு கண்டுள்ளோம். மலையகத்தில் சில பிரதேசங்களில் எமது கட்சி தனித்தும், சில பிரதேசங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்தும், வேறு சில பிரதேசங்களில் வாய்ப்புக்கு ஏற்றவிதத்தில் போட்டியிடவிருக்கின்றோம்.

இப்படிக் கூறினார் மலையக மக்கள் முன்னணித் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பெ.சந்திரசேகரன்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு விடுதலைப் புலிகளின் அரசியலதுறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து ஒரு மணி நேரம் அவர் பேச்சு நடத்தினார்.

அதன்பின் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

எதிர்வரும் தேர்தலில் தமிழ் மக்களின் அரசியல் பலத்தை ஒன்று திரட்டுவது தொடர்பாக ஆலோசனை நடத்தினோம். ஆக்கபூர்வமான, முன்னேற்றகரமான பல கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டோம்.

எதிர்வரும் தேர்தல் இலங்கை வரலாற்றில் சிறுபான்மை மக்கள் மத்தியில் ஓர் அரசியல் திருப்புமுனையாக அமையவேண்டும் என்பதில் உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது. அதை நிச்சயமாக நிறைவேற்றுவோம்.

ஏற்கனவே இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். அதன்மூலம் ஜனநாயக ரீதியாக சிறுபான்மை மக்

(16ஆம் பக்கம் பார்க்க)

### ஏ-9 பயணிகள் ஏமாற்றம்!

யாழ்ப்பாணம்,பெப்.19

ஏ-9 வீதியில் உள்ள படையினரின் முகமாலை சோதனை நிலையம் இன்று மாலை 6.30 மணிவரை மட்டுமே போக்குவரத்துக்கு திறக்கப்பட்டிருக்கும் என்று யாழ். பாதுகாப்பு படைத்தலைமையகம் அறிவித்திருக்கின்றது.

இந்தச் சோதனை நிலையம் நேற்றுமுன்தினமும் நேற்றும் இன்றும் இரவு 9.00 மணிவரை திறக்கப்பட்டிருக்கும் என்று படைத்தலைமையகம் முன்னர் அறிவித்திருந்தது தெரிந்ததே.

சோதனைச்சாவடிகளில் கண்காணிப்பில் ஈடுபடும் பொறுப்பு தமக்கு இல்லை என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்ததை அடுத்தே சோதனை நிலையத்தை இரவு 9.00 மணிவரை திறக்கும் ஏற்

(16ஆம் பக்கம் பார்க்க)

### வேட்பாளர் பட்டியலில் சீ.வி.கே. பெயரும்!

கிளிநொச்சி,பெப்.19

எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடவுள்ள கட்சிகளின் பட்டியலில் முன்னாள் யாழ். மாநகர ஆணையாளர் சீ.வி.கே.சிவஞானத்தின் பெயரும் இடம்பெற்றுள்ளது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் கஜேந்திரகுமாரும் சீ.வி.கே.சிவஞானமும் யாழ்ப்பாணத்தில் போட்டியிடுவார்கள் என்று நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறியவந்தது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அ.விநாயகமூர்த்தி வவுனியா மாவட்டத்தில் வேட்பாளராகப் போட்டியிடுவார் என்று

## தென்மராட்சி தெற்கில்...



இராணுவத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவுக்கு வெளிநாடுகளில் இருந்து கிடைத்துள்ள நவீன உபகரணங்கள் நேற்று தென்மராட்சி தெற்கில் வைத்துச் செய்தியாளர்களுக்குக் காண்பிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.



பலத்த சேதமடைந்துள்ள கைதடி - நாவற்குழி முருகன் ஆலயத்தின் தோற்றம்



சேதமடைந்து காணப்படும் கைதடி - நாவற்குழி ஸ்ரீ வள்ளி அம்மன் ஆலயம்



தென்மராட்சி தெற்கில் கண்ணிவெடி அகற்றப்பட்ட இடங்களை இராணுவத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினருடன் யாழ். செயலகத்தில் இயங்கும் கண்ணி அகற்றும் பிரிவின் இணைப்பாளர் எல்மோ ஆனந்தராஜா பார்வையிடுகிறார்.



மறவன்புலோவில் மிதிவெடிகள் அகற்றப்பட்டதாகப் படையினர் கூறும் வயல் பிரதேசம் ஒன்றின் காட்சி.

*(படங்கள் : தென்மராட்சி, சாவகச்சேரி செய்தியாளர்கள்)*

# தேர்தல் சுதந்திரமாக, அமைதியாக நடைபெறுவதை உறுதிப்படுத்துங்கள்!

## இலங்கைத் தலைவர்களிடம் வாஷிங்ரன் கூட்டத்தில் கோரிக்கை

வாஷிங்ரன்,பெப்.19

எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதி இலங்கையில் நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தல்கள் சுதந்திரமானதாகவும், நேர்மையானதாகவும், அமைதியானதாகவும் அரசியல் வன்முறைகளற்றதாகவும் நடைபெறுவதை அரசியல் தலைவர்கள் உறுதிப்படுத்த வேண்டுமென்று இலங்கைக்கு உதவும் வாஷிங்ரன் கூட்டத்தில் நேற்று சர்வதேச நாடுகள் கோரிக்கை விடுத்தன. சமாதானப் பேச்சுக்களால் அடையப்பட்ட முக்கிய பெறுபேறுகளைச் சீர்குலைப்பதற்கு தேர்தல் பிரசாரம் எவ்வகையிலும் பயன்படுத்தப்படக் கூடாது எனவும் அந்த நாடுகள் வலியுறுத்தியிருக்கின்றன.

தேர்தல்கள் முடிவடைந்ததும், பொறுப்புக்கள் பற்றிய தெளிவான நிலையை ஏற்படுத்த சகல அரசியல் கட்சிகளும் விரைந்து செயற்படவேண்டும் என்றும், மீண்டும் கூடிய விரைவில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்றும் அந்த நாடுகள் கோரியிருக்கின்றன.

இலங்கையின் புனரமைப்பு, அபிவிருத்தி பற்றிய டோக்கியோ மாநாட்டின் இணைத் தலைமை நாடுகளான அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான், நோர்வே ஆகியவையே இக் கோரிக்கைகளை விடுத்திருக்கின்றன.

இந்த நாடுகள் நேற்று வாஷிங்ரனில் கூடி இலங்கையின் சமாதான முயற்சிக்கு வழங்கப்படும் சர்வதேச சமூகத்தின் ஆதரவு குறித்து ஆராய்ந்தன.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஒத்துழைப்புடன் கடந்த இரண்டு வருடங்களாக இலங்கையில் போர்நிறுத்தம் கடைப்பிடிக்கப்படுவது குறித்து திருப்தி தெரிவித்திருக்கும் இந்த நாடுகள் இலங்கையிலுள்ள சகல சமூகத்தவர்களினதும் நன்மைக்காக சமாதான நடைமுறையை நிலைபெறச் செய்ய பேச்சு மேசைக்குத் திரும்பிச் செல்வது அவசியமானதாகும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளன.

ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான 'சகவாழ்வு' முயற்சிகள் முறிந்துவிட்டது குறித்து இந்நாடுகள் அதிருப்தி தெரிவித்திருக்கின்றன.

கூட்டத்தின் பின்னர் அமெரிக்க ராஜாங்க அமைச்சு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. இலங்கையில் தேர்தல்கள் முடிவடைந்த பின்னர் கூடிய விரைவில் கூட்டம் கூட்டப்படுமென அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

போர்நிறுத்தத்திலும், சமாதானப் பேச்சிலும் தமக்குள்ள கடப்பாட்டைத் தெரிவித்து விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கைகளை வரவேற்ற இந்நாடுகள், தேர்தலின்போதும், பின்னரும் புலிகள் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டுமெனக் கேட்டுள்ளன.

டோக்கியோ பிரகடனத்தின்படி உறுதியளிக்கப்பட்ட நிதியுதவிகளை வழங்குவதிலுள்ள உறுதிப்பாட்டை அந்நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இதற்கிடையே, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் ஏனைய இடங்களிலுமுள்ள மக்களுக்கு உதவும் அவசர தேவைகளை இந்நாடுகள் ஏற்றுக்கொண்டிருப்பதோடு, மனிதாபிமான - புனர்வாழ்வு உதவிகளை வழங்கும்படியும் உதவி வழங்கும் நாடுகளைக் கேட்டுள்ளன.

# 'தேசிய ஹெல உறுமய' சார்பில் பௌத்த பிக்குகள் மட்டும் போட்டி!

## தலைவரோ, வேறு நிர்வாகிகளோ போட்டியில்லை

கொழும்பு,பெப்.19

எதிர்வரும் பொதுத்தேர்தலில் 22 தேர்தல் மாவட்டங்களுக்கும் பௌத்த பிக்குகளை மட்டும் வேட்பாளர்களாக நிறுத்துவதென தேசிய ஹெல உறுமய (முன்னர் சிஹல உறுமய) தீர்மானித்திருக்கிறது.

இவ்வாறு நிறுத்தப்பட்டால், இலங்கையின் அரசியல் கட்சி ஒன்றினால் பௌத்த பிக்குகள் மட்டுமே தேர்தலில் போட்டியிடும் முதல்சந்தர்ப்பமாகும்

கட்சித் தலைவரான திலக கருணாரத்ன உட்பட எந்த ஒரு நிர்வாகியும் இத்தேர்தலில் போட்டியிடமாட்டார்கள்.

தேசிய சங்க சம்மேளனத்தின் தலைவரான எல்லாவல மேதானந்த, செயலாளரான அதரலியே ரத்ன, ஓமல்பே சோபித, கொட்பொல அமரகீர்த்தி, கொலன்னாவே சிறிசுமங்கல, உடுவே தம்மாலோக்க ஆகியோர் தேர்தலில் போட்டியிடவிருக்கும் பிக்குகளில் சிலராவர்.

வேட்பாளர்கள் குழுவுக்கு எல்லாவெல மேதானந்த தலைமைதாங்குவார். அவர் பெரும்பாலும் தேசியப் பட்டியலில் போட்டியிடுவார் என்று கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

நாட்டையும் சிங்கள இனத்தையும் பாதுகாப்பதற்காக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக மேற்குறிப்பிட்ட ஐந்து பிக்குகளும் கையெழுத்திட்டு ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளனர். (ஐ)

### சமய சந்நிதிகளில்

குடத்தனை,பெப்.19

துன்னாலை கோயிற்கடவை பிள்ளையார் ஆலய தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. நாளை தீர்த்தோற்சவம் இடம்பெறும். (எ-10-ரி)

★ ★ ★

குடத்தனை,பெப்.19

பருத்தித்துறை சித்திவிநாயகர் ஆலய தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. நாளை தீர்த்தோற்சவம் இடம்பெறும். (எ-10-ரி)

### திறப்பு விழா

அரியாலை,பெப்.19

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று காலை 10 மணிக்கு இடம்பெறும்.

விழாவில் யாழ் அரச அதிபர் செ. பத்மநாதன் பிரதம விருந்தினராகவும், ஜி.ரி.இசற் நிறுவனத்தின் பொறியியலாளர் யோ.தயாபரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.(எ-17)

# வன்னிக்கு ஒரு முஸ்லிம் உட்பட கூட்டமைப்பு வேட்பாளர்கள் தெரிவு

## திருமலை, மட்டு, அம்பாறை பட்டியல்கள் பூர்த்தி

கிளிநொச்சி,பெப்.19

வன்னி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் கூட்டமைப்புத் தலைவர்கள், விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நடத்திய பேச்சுக்களின் போதே இத்தெரிவு நடைபெற்றது.

முன்னாள் எம்.பிக்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், எம்.கிஷோர், ராஜகுகனேஸ்வரன், ஸ்ரீகாந்தா, சிற்றம்பலம், சரவணபவான் ஆகியோரும் முஸ்லிம் மக்கள் சார்பில் ஷகானி என்பவரும் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றனர்.

இதேவேளை, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கான வேட்பாளர்கள் பட்டியல்களும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன, சில திருத்தங்களுடன் இப்பட்டியல்கள் பேச்சுக்களின்போது ஏற்றுக்கொள்ளப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கைப் பிரகடனத்தைத் தயாரிக்க ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கின்றது. கொள்கைப் பிரகடனம் எதிர்வரும் 25ஆம் திகதி வெளியிடப்படவிருக்கின்றது.

# காரைதீவில் கறுப்புக்கொடி கட்ட புலிகளுக்குப் படையினர் அனுமதி மறுப்பு

## பொலீஸார் தலையிட்டு முறுகல்நிலையைத் தணித்தனர்

அம்பாறை மாவட்டத்தில் இன்று அனுஷ்டிக்கப்படுகின்ற 'தமிழின உயிர்ப் படுகொலைத் தினத்தை' முன்னிட்டு காரைதீவு முச்சந்தியில் கறுப்புக் கொடிகளைக் கட்டுவதற்கு எடுத்த முயற்சியை விசேட அதிரடிப்படையினர் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இதனால், காரைதீவு விசேட அதிரடிப்படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முறுகல்நிலை ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து சம்மாந்துறைப் பொலீஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி தனபால காரைதீவுச் சந்திக்கு விரைந்து வந்து முறுகல்நிலையைத் தணித்தார்.

விடுதலைப் புலிகளின் காரைதீவு அரசியல்துறைப் பொறுப்பாளர் ஈழமன்னன் தலைமையில் புலிகள் இயக்கத்தினரும், பொதுமக்களும் நேற்றுக் காலை பத்து மணியளவில் காரைதீவு பிரதான முச்சந்தியில் கறுப்புக் கொடிக்ளைக் கட்டுவதற்கு முற்பட்டனர். அப்போது அருகில் உள்ள படைமுகாமைச் சேர்ந்த படையினர் அங்கு வந்து அதற்கு அனுமதி மறுத்தனர்.

படையினர் - புலிகள் முறுகல் நிலையை அடுத்து காரைதீவில் சில மணிநேரம் பதற்றம் நிலவியது. அம்பாறை சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகரும் அங்கு வந்து புலிகளுடன் பேசி, கலைந்துசெல்லுமாறு கேட்டுக் கொண்டார்.

பின்னர், காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய முன்றிலில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டன.

இதேவேளை, கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, திருக்கோயில் உட்பட அம்பாறை கரையோரப் பிரதேச தமிழ்ப்பகுதிகள் எங்கும் இடையூறுகள் எதுவுமின்றி கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருக்கின்றன.

# முஸ்லிம் தலைவர்கள் தேர்தல் கூட்டுக்கு முன்வராவிட்டால் தனித்துப் போட்டி

## ஐ.மு.ம. கூட்டமைப்புக் கூறுகிறது


கொழும்பு,பெப்.19

ஐககிய மக்கள் கூட்டமைப்பு முன்வைத்துள்ள வேலைத்திட்டத்தை ஏற்று, தேர்தல் கூட்டு ஒன்றை அமைப்பதற்கு முஸ்லிம் தலைமைகள் முன்வராத பட்சத்தில் கூட்டமைப்பு தனித்து நின்று பொதுத் தேர்தலைச் சந்திக்கும் என்று அதன் அரசியல் துறைச் செயலாளர் எம்பௌஸ் தெரிவித்தார்.

முஸ்லிம் சமூகத்தின் உரிமைகள், அபிலாஷைகள் மற்றும் பாதுகாப்பு போன்ற அம்சங்களை முன்னிலைப் படுத்தி பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தேர்தல் கூட்டணியை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய முஸ்லீம் மக்கள் கூட்டமைப்பு ஏனைய முஸ்லிம் அரசியல் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்திவருகிறது எனவும் அவர் கூறினார்.

இம்முயற்சிகள் தோல்வி அடையுமாயின் ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பு தனது "இரட்டைக்..." சின்னத்தில் வடக்கு - கிழக்கு மாகாணத்திலும், கொழும்பு, புத்தளம், கண்டி ஆகிய மாவட்டங்களிலும் தனித்துப் போட்டியிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# ஈரானில் தடம்புரண்ட ரயில் திடீரென வெடித்துச் சிதறியதில் 200 பேர் பலி!



பற்றி எரியும் ரயில்

தெஹ்ரான்,பெப்.19

ஈரானில் பாதையைவிட்டு விலகி விபத்துக்குள்ளான ரயில் ஒன்று திடீரென வெடித்துச்சிதறியதில் இருநூறுக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். மேலும் 350 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தக் கோரச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் ஈரானின் கோரஸ்ஸன் மாகாணத்தில் நெஷாபப் என்ற நகருக்கு அருகில் நிகழ்ந்திருக்கிறது.

சல்பர் (கந்தகம்), பெற்றோல் மற்றும் உரம் ஆகியவற்றை ஏற்றி வந்த ரயிலே தடம் புரண்டு தீப்பிடித்தது. ரயில பெட்டிகளில் தீ பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக தீயணைப்புப்படை வீரர்கள் மும்முரமாக முயன்று கொண்டிருந்த சமயமே, தடம் புரண்டுகிடந்த ரயிலின் பெட்டிகள், அதில் இருந்த பொருள்கள் காரணமாக வெடித்துச் சிதறின எனக் கூறப்படுகின்றது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்களில் பலர் தீயணைப்புப்படை வீரர்கள் என்றும் கூறப்படுகின்றது. 17 பெட்டிகள் நிறைய சல்பர் பொருள்கள், ஆறு பாரிய பெற்றோல் கொள்கலன்கள், 7 பெட்டிகள் நிறைய உரம், 10 பெட்டிகள் நிறைய பருத்திப் பொருள்கள் ஆகியவற்றுடன் வந்த ரயிலே அதன் தண்டவாளங்கள் நில அதிர்வினால் விலகியிருந்த காரணத்தால் தடம் புரண்டது என்றும் கூறப்படுகிறது.

திடீரென ஏற்பட்ட பெரும் வெடிப்பினால் ரயில் தடம்புரண்ட இடத்தைச் சூழவிருந்த ஐந்து கிராமங்கள் முற்றாக அழிந்தன என்று முன்பு கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

காயமுற்றோரை மீட்டு நெஷாபரிலும் பிரதேசத் தலைநகர் மஷாட்டிலும உள்ள வைத்தியசாலைகளுக்கு எடுத்துச்செல்லும் பணியில் பொது மக்கள் ஈடுபட்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த டிசெம்பர் 26ஆம் திகதி ஈரானின் தென்கிழக்கு நகரமான பாமில ஏற்பட்ட மோசமான பூகம்பத்தில் 40 ஆயிரம் பேர் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே.

# பறவைக் காய்ச்சல் நோயால் தாய்லாந்துச் சிறுவன் மரணம்!

தாய்லாந்தில் பறவைக் காய்ச்சல் நோய் தாக்கி 4 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். சமீபகாலமாகப் பரவிவரும் பறவைக் காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்டு தாய்லாநதில் உயிரிழந்த 7ஆவது நபர் இந்தச் சிறுவனாவான்.

இந்தச் சிறுவன் பறவைக் காய்ச்சல் நோய் காரணமாகவே உயிரிழந்தமை பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தாய்லாந்து அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாய்லாந்தில் பறவைக் காய்ச்சல் நோய் பரவிவரும் இடமாக அடையாளங்காணப்பட்டுள்ள கோன் கெய்ன் மாகாணத்தைச் சேர்ந்த சிறுவனே உயிரிழந்தவனாவான்.

தாய்லாந்தில் இதுவரை பறவைக் காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்டவர்கள் என்று சந்தேகிக்கப்படும் 20பேர் அடையாளம்காணப்பட்டு இருந்தனர். இவர்களில் 9 பேருக்கு பறவைக் காய்ச்சல் நோய் தாக்கியிருந்தமை உறுதிசெய்யப்பட்டது. அவர்களில் 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

சீனா உட்படப் பல அசிய நாடுகளில் பறவைக் காய்ச்சல் நோய் கோழிகளைக் கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் தாக்கத் தொடங்கியது. இந்த நாடுகளில் வியட்நாம் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளில் மட்டுமே கோழிகளில் இருந்து இந்த நோய் மனிதருக்குழ் பரவியுள்ளது. வியட்நாமில் 14 பேர் பறவைக் காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்டவர்கள் என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.(ஓ)

# பறவைக் காய்ச்சலைத் தொடர்ந்து பீதியை ஏற்படுத்தியுள்ள டெங்கு!

ஜகார்த்தா,பெப்.19

இந்தோனேஷியாவில் பறவைக் காய்ச்சல் பீதியைத் தொடர்ந்து டெங்குக் காய்ச்சலுக்கு நடபபாண்டில் 91 பேர் பலியாகியுள்ளனர். அதிகளவில் ஜாவா தீவு மக்களை இக்காய்ச்சல் காவுகொண்டுள்ளது.

இந்தோனேஷியாவில் இக்காய்ச்சலுக்கு ஒவ்வோர் ஆண்டும் பலர் பலியாகி வருகின்றனர். கடந்த ஆண்டில் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டில் பலியானவர்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகவுள்ளது.

இதுகுறித்து சுகாதாரத்துறை அமைச்சக செய்தித் தொடர்பாளர் மரியானி ரெக்சொபுரோட்ஜோ கூறுகையில்:-

இந்தோனேஷியாவில் நடப்பாண்டில் இதுவரை மொத்தம் 4 ஆயிரத்து 500 பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். நேற்றுடன் இக் காய்ச்சலுக்கு 91 பேர் பலியாகியுள்ளனர். அதிகளவில் பாதிப்புக்குள்ளான ஜாவா தீவில் இருந்து இதுவரை பலியானவர்களின் எண்ணிக்கை தெரியவரவில்லை - என்றார்.

இக்காய்ச்சலுக்குக் காரணமாக இருககும் நுளம்புகளை ஒழிக்கும் வகையில் குடிசைப் பகுதிகள் அடங்கிய மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு ஜகார்த்தா சுகாதாரத்துறை ஊழியர்கள் சென்று நுளம்பு ஒழிப்பு மருந்துகளைத் தெளித்துவருகின்றனர். அதிபர் வீட்டிற்கு வெளியேயும் மருந்து தெளிக்கப்பட்டது.

# பேச்சுக்கான கால வரம்பு குறித்து பாக்., இந்தியா இடையே உடன்பாடு



இந்தியா, பாகிஸ்தான் இடையே ஒருங்கிணைந்த பேச்சுக்கான வழிமுறைகள், காலவரம்பு குறித்து இரு நாடுகளிடையே நடைபெற்ற பேச்சுகளில் விரிவான உடன்பாடு ஏற்பட்டது. காஷ்மீர் உள்ளிட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண ஒருங்கிணைந்த பேச்சுக்களைத் தொடங்குவதற்காக மூன்று நாள் பூர்வாங்க பேச்சு கடந்த திங்கட்கிழமை இஸ்லாமாபாத்தில் தொடங்கியது.


நேற்று நடைபெறும் பேச்சில் இரு நாடுகளின் வெளிவிவகார அமைச்சுச செயலர்கள் பங்கேற்றனர்.

இந்தியாவின் மத்திய வெளியுறவுத்துறை செயலர் கசாங்க் பாகிஸ்தான் வெளியுறவுத்துறை செயலர் ரியாஸ் கோகர் அகியோர் நேற்று இஸ்லாமாபாத்தில் பேச்சு நடத்தினர். பேச்சுக்கள் குறித்து டில்லியிலும், இஸ்லாமாபாத்திலும் ஒரே நேரத்தில் அறிக்கைகள் வெளியிடப்பட்டன.

பரிமாறிக் கொள்ளப்பட்ட பிரேரணைகள் குறித்த தங்கள் தரப்புக் கருத்துக்களை இருநாடுகளின் பிரதிநிதிகளும் பகிர்ந்துகொண்டனர்.

அணு ஆயுதம் தொடர்பாக நம்பிக்கையை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபடுவது குறித்து விவாதிக்க இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன. (ஓ)

# ஜேர்மன், பிரிட்டன், பிரான்ஸ் இடையே பேச்சு மற்றைய ஐரோப்பிய நாடுகள் ஆத்திரம்!



பேர்லின்,பெப்.19

ஐரோப்பிய ஒன்றியத்தின் சக்தி வாய்ந்த மூன்று நாடுகளின் தலைவர்கள் நேற்று ஜேர்மனியின் பேர்லின் நகரில் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இந்தப் பேச்சு ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் மற்றைய நாடுகளுக்கு ஆத்திரமூட்டியுள்ளது.

பிரான்ஸ் அதிபர் ஜக்சிராக், ஜேர்மனி அதிபர் ஸ்குரூடர், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் ஆகியோரே பொலினில் சந்தித்துப் பேசினர். ஐரோப்பியப் பொருளாதரம் குறித்தே இவர்கள் பேசினார்கள் என்று கூறப்படுகினறது. தலைவர்களிடையேயான சாதரண சந்திப்பே என்று மூன்று நாடுகளின அதிகாரிகளும் வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், இதனை ஏற்க மறுக்கும் மற்றைய நாடுகள், இத்தகைய சந்திப்புகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் முரண்பாடுகளை ஏற்படுத்துமென எச்சரித்துள்ளன.

ஜேர்மன், பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கும், மற்றைய ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையே இந்தச் சந்திப்பு விரிசலை ஏற்படுத்தும் என்றும் - இத்தகைய சந்திப்புக்கள் தொடர்பாகச், சந்பந்தப்பட்ட நாடுகளைத் தவிர மற்றைய நாடுகளுக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்றும் -

இத்தாலியப் பிரதமர் சில்வியோ பெர்லுஸ் கொனி தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒனறியத்தில் மூன்று நாடுகளும் ஆதிக்கம் செலுத்த முயறசிப்பதாகவும் விமர்சனங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஆனால், இவை எல்லாம் 'அர்த்தமற்ற அச்சங்கள்' என்று ஜேர்மனிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது ஐரோப்பிய ஒன்றியத்தைக் கட்டுப்படுத்த எடுக்கப்படும் முயற்சி அல்ல என்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் விளக்கமளித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் பங்கேற்கும் மூன்று நாடுகளின் தலைவர்களுடன், அந்தநத நாடுகளின் பிரதான அமைச்சர்கள் நாலைந்து பேரும் கலந்து கொள்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அ.தி.மு.க.-பாரதிய ஜனதா இடையே தொகுதிப் பங்கீட்டில் உடன்பாடு

சென்னை,பெப்.19

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் நாட்டில் அ.தி.மு.க. -பாரதிய ஜனதாக் கட்சி என்பன கூட்டணி அமைத்துப்போட்டியிடுகின்றன.

இரு கட்சிகள் சார்பில் குழு அமைக்கப்பட்டு தொகுதிப்பங்கீடு குறித்துப் பேச்சு நடந்தது. மொத்தம் 3 தடவை இரு கட்சிகளின் தலைவர்களும் சந்தித்துப் பேசினார்கள்.

நேற்றுமுன்தினம் பாரதிய ஜனதாவின் மூத்த தலைவர்களில் ஒருவரான சுஷ்மா சுவராஜ் தமிழக முதல்வர் ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேசினார்.

இதனையடுத்து அ.தி.மு.க. - பாரதிய ஜனதா இடையே தொகுதிப் பங்கீட்டில் உடன்பாடு ஏற்பட்டது. இரு கட்சிகளும் போட்டியிடும் தொகுதிகள் விவரம் நேற்று அதிகாரபூர்வமாக வெளியிடப்பட்டது.

நேற்றுக்காலை 10 மணியளவில் பாரதிய ஜனதா தலைவர்கள் இல. கணேசன், சி.பி.ராதாகிருஸ்ணன், சுகுமாரன் நம்பியார் ஆகியோர் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை நிலையத்துக்கு வந்தார்கள். அ.தி.மு.க. தேர்தல் குழுவினரான அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம், பொன்னையன், ஜெயக்குமார் ஆகியோருடன் இறுதிக்கட்டப்பேச்சு நடத்தினார்கள்.

பிறகு தொகுதிப் பங்கீடு உடன்பாட்டில் இருகட்சித் தலைவர்களும் கையெழுத்திட்டனர். இதைத் தொடர்ந்து அ.தி.மு.க. - பாரதிய ஜனதாக்கட்சிகள் போட்டியிடும் தொகுதிகள் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டன.

இதன்படி 33 தொகுதிகளிலும், பாரதிய ஜனதாக் கட்சி 7 தொகுதிகளிலும் போட்டியிட உள்ளன.

தொகுதிப்பங்கீடு குறித்து பாரதிய ஜனதா அகிலபாரதச் செயலாளர் இல. கணேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

தமிழகத்தில் பாரதிய ஜனதா கட்சிக்கும் அ.இ.அ.தி.மு.கவுக்கும் இடையே சுமூகமான உடன்பாடு ஏற்பட்டுள்ளது மகிழ்ச்சியளிக்கின்றது.

அகில பாரதத் தலைமை கலந்து பேசி எடுத்தமுடிவின் காரணமாக அமைந்துள்ள இந்த உடன்பாடு வெற்றி பெறவும், தமிழக மற்றும் புதுவையின் 40 தொகுதிகளிலும் நமது கூட்டணி வெற்றி பெறவும் தீவிரமாகப் பாடுபட வேண்டியது கட்சியின் ஒவ்வொரு தொண்டரதும் கடமை என்பது வலியுறுத்துகிறேன்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் இல.கணேசன் கூறியுள்ளார்.



அ.தி.மு.க. - பாரதிய ஜனதா இடையே நேற்றுத் தொகுதி உடன்பாடு ஏற்பட்டது. அதற்கான ஒப்பந்தத்தை அ.தி.மு.க. குழுவில் உள்ள அமைச்சர்களான ஓ.பன்னீர்செல்வம், பொன்னையன், ஜெயக்குமார் மற்றும் பாரதிய ஜனதா குழுவில் உள்ள இல. கணேசன், சி.இராதாகிருஷ்ணன், சுகுமாரன் நம்பியார் ஆகியோர் வெளியிட்டபோது எடுக்கப்பட்ட படம்.

# பெங்களூர் திரையரங்கில் தமிழ்ப்படப் பதாகைகள் எரிப்பு!

பெங்களூர்,பெப்.19

இந்தியாவின் கர்நாடக மாநிலம் பெங்களூரில் நடிகர் விஜயகாந்த் நடித்த படம் திரையிடப்பட்ட திரையரங்கில் கட்டப்பட்டிருந்த பதாகைகள் எரிக்கப்பட்டன.

பெங்களூர் சிவாஜிநகர் பேருந்து நிலையம் அருகே 'சங்கீத்' திரையரங்கு உள்ளது. இங்கு நடிகர் விஜயகாந்த் நடித்த 'எங்கள் அண்ணா' தமிழ்த் திரைப்படம் திரையிடப்பட்டிருந்தது.

இதற்காகத் தமிழில் எழுதப்பட்ட பதாகைகள் மற்றும் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன. இவற்றைக் கிழித்தெறிந்த கும்பல் பின்னர் தீயிட்டுக் கொளுத்திவிட்டுத் தப்பிச்சென்றது.

இச்செயலுக்கு கர்நாடக மாநில விஜயகாந்த் ரசிகர்கள் மன்ற மாநிலத் தலைவர் எஸ்.கோவர்தன் கண்டனம தெரிவித்துள்ளார். வன்முறையில் ஈடுபட்டோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக கொண்டுள்ளார்.

(ஓ)

# ரணிலுக்கு எங்கே தவறு நேர்ந்தது?

**நீதிச்சேவையில் நிலவும் ஊழல்களுக்கு இடமளித்து வாழாவிருந்த பாவத்திற்காக இறுதியில் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளவர் ரணில் விக்கிரமசிங்கவே என்கிறது 'ராவய' வார இதழில் வெளியான அரசியல் ஆய்வுக்கட்டுரை. அதன் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதிலிருந்து ஐ.தே.முன்னணிக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கும்போது நாடாளுமன்றம் கலைககப்பட்டது வரை ஜனாதிபதியால் மேற கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஜனநாயக விரோதமானவை மட்டுமல்ல தான்தோன்றித்தனமானவையாகும். இருப்பினும், இந்தப் பிரச்சினையின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அதை எதிர்கொண்ட விதத்தை வலுவான ஒன்றாகவோ, போற்றத்தக்க ஒன்றாகவோ கூறமுடியாது.

ஒரு தலைவன் தனது திறமைகளை பிரச்சினைகளற்ற வேளைகளை விட பிரச்சினையான வேளைகளிலேயே காட்டவேண்டும். ஆனால், பிரச்சினை நிறைந்த வேளையில் தான் ஆற்றல் நிறைந்த தலைவன் என்பதை நிரூபிக்க ரணில் தவறிவிட்டார்.

உருவான பிரச்சினை இரு பிரதான கட்சிகளிடையே அதிகாரம் தொடர்பாக ஏற்பட்டது போல் வெளிப்படையாகத் தோன்றினாலும், அதன் உணமையான காரணம் வேறு இடத்தில் உள்ளது.

ஜனாதிபதி தனது எதிர்கால அரசியல் செயற்பாடுகளைப் பாதுகாபபதற்காக தனது அணுகுமுறைகளை மாற்றுவதற்கான தேவை ஏற்படும் போது அந்த அணுகுமுறைகளைப் பாதுகாப்பதன் மூலம் ஜனாதிபதியை அரசியலில் இருந்து ஓரங்கட்ட இடமளித்து தான் ஜனாதிபதியாக வருவதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணமாக இருந்தது. அணுகுமுறைகளை மாற்ற ஜனாதிபதி எடுத்த முயற்சியில் ஆத்மதிருப்தி இருந்தது போலவே அணுகுமுறைகளைப் பாதுகாக்க ரணில் விக்கிரமசிங்க எடுத்த முயற்சிகளிலும் ஆத்மதிருப்தி இருநதது. இந்த இருவரின் இவ்வாறான பரஸ்பர தேவைகளுக்கு இடையேயான மோதல்களே இந்தப்பிரச்சினைக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.

ரணில் விக்கிரமசிங்க தனது ஒட்டுமொத்த அரசியல் தோற்றத்திலும் செயற்பாடுகளிலும் மாற்றங்கள் ஏற்படாதிருப்பதையே தனது அபிலாஷையாகக் கொண்டிருந்தார். இதுவே அரசின் அணுகு முறைகளிலும் செயற்பாடுகளிலும் தோல்விகளைச் சந்திகக் காரணமாக அமைந்தது.

12ஆண்டுகள் (இரு பதவிக் காலஙகள்) நாட்டின் சர்வாதிகாரியாக ஜனாதிபதி விளங்கக்கூடியவிதத்தில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்த்தன அரசமைப்பை அறிமுகப்படுத்தியிருந்தார். அந்த அரசமைப்பின்படி ஜனாதிபதிக்குக் கிடைககும் அளப்பரிய அதிகாரங்கள் காரணமாக நாடாளுமன்ற அதிகாரத்தைப் பெற்ற எதிர்க்கட்சிக்கு சுதந்திரமாக நாட்டை நிர்வகிக்க முடியாத நிலை ஏற்பட்டது. தனக்குக் கிடைத்த நாடாளுமன்ற அதிகாரத்தை ரணில் விக்கிரமசிங்க பாதுகாப்பதாயின் எதிர்கட்சியைச் சேர்ந்த நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி தான்தோன்றித்தனமாக தனது அதிகாரங்களைப் பயன்படுத்த இடமளிககாத விதத்தில் வியூகத்தை அமைதது்ச் செயற்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், ரணிலின் தெரிவு அப்படியாக அமையவில்லை. நிறைவேற்று ஜனாதிபதி முறையை மறுசீரமைப்பதற்குப் பதிலாக தனது மாமனால் உருவாக்கப்பட்ட எதேச்சாதிகார நிறைவேற்று ஜனாதிபதி முறையைப் பாதுகாக்க வேண்டிய நிலைமை உருவானது. ஜனாதிபதி முறையில் எதுவித மாற்றங்களையும் மேற்கொள்ளாது அந்தமுறை அவ்வாறே அனுசரிக்கப்படுவதைக் காண அவர் விரும்பினார். அவ்வாறான தேவையும் அவருக்கு இருந்தது. எனவேதான், ஜனாதிபதியால அரசுக்கு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டபோது தான் விரும்பும் முறைக்கு (ஜனாதிபதி முறைக்கு) பாதிப்பு ஏற்படாத விதத்தில் போராட நேர்ந்தது. எனவேதான், அனைத்துப் போராட்டஙகளின் போதும் ரணில் விக்கிரமசிங்கவை மட்டம் தட்டும் ஆற்றல் ஜனாதிபதிக்கு இருந்தது.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக அரசை மீள்தயாரிப்புக்குட்படுத்துவது தொடர்பான விடயத்தை அவர் பொதுமக்கள் முன் எடுத்துச் செல்லவில்லை. தான் விரும்பும் ஜனாதிபதி பதவி பலவீனமடையக் கூடும் என்ற அச்சத்தால் அவர் அவ்வாறு நடந்திருக்கக்கூடும். அரசை மீள் ஒழுங்கு செய்யும் தேவை குறித்து நடவடிக்கை எடுப்பதனால் அரசு அனைவரது நம்பிக்கைக்கும் கௌரவத்திற்கும் உட்படும் விதத்தில் எவ்வாறு மீளொழுங்கு செய்யலாம் என்ற கேள்வி சகல சமூக மட்டங்களின் கவனத்தையும் ஈர்க்கும வாதமாக அமைந்து தெற்கில் எழுப்பப்படும் இனவாத கோஷங்களுக்குக கிடைக்கும் ஆதரவு சிதைந்து போக வாய்ப்பு இருந்தது.

மறுபுறத்தில் ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள் நாட்டுக்குத் தேவையான சீர்திருத்தங்கள் செயல் வடிவம் பெறுவதைத் தடுத்துள்ளன. அரசமைப்பிற்கான 17ஆவது திருத்தத்தின் நோக்கம் முக்கியமான பொறுப்பான பதவிகளுக்கு தான் நினைத்தவாறு ஆள்களைத் தேர்ந்தெடுத்து நியமிப்பது தொடர்பாக ஜனாதிபதிக்கு இருந்த அதிகாரத்தை வலுவற்றதாக்குவதாகும். அது தனக்குள்ள அதிகாரங்களைப் பலவீனமாக்கும் என நினைத்த ஜனாதிபதி, அதற்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தியபோது தான் எதிர்பார்க்கும் பதவிக்கு (ஜனாதிபதி) பங்கம் ஏற்படுத்தும் செயலெனக் கருதிய ரணில் அந்த விடயம் தொடர்பாக ஏனோ தானோ என்ற போக்கைக் கடைப்பிடித்தார்.

தான் ஜனாதிபதியாக இல்லாவிடினும் அப்பதவி மீது கொண்ட ஆர்வம காரணமாக ஜனாதிபதியால் வரையறையின்றி அதிகாரங்கள் பிரயோகிக்கப்பட்ட வேளையிலும் கூட அவற்றிற்கு எதிராகச் செயற்படாது தவிர்க்கும் போக்கைக் கடைப்பிடித்தார். ஜனாதிபதிப் பதவி வகிப்போர் ஜனாதிபதி என்ற காரணத்தினால் மாத்திரமே நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்தலாம் அவர் அமைச்சர் என்ற வகையில் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்த முடியாது. இருப்பினும், நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தில் உரையாற்ற இடமளித்து அதைப் பார்த்துக்கொண்டிருக்கும் முறையை ரணில் அனுசரித்தார்.

ஜனாதிபதியால் ஜனாதிபதித் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் பதில் தேர்தல் ஆணையாளர் நியமிக்கப்பட்ட வேளையிற்கூட அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காது வாழாவிருந்தார். பிரதம நீதியரசர் தொடர்பாகவும கடும்போக்கை மேற்கொள்ளாது ரணில இவ்வாறே தவிர்த்துக் கொணடார்.

நீதிச் சேவையில் குழறுபடிகள் இடம்பெறுவதைப் பார்த்துக் கொண்டிருந்த பாவத்தினை முடிவில் அவரே அனுபவிக்க நேர்ந்தது. சுதந்திரமான நீதிமன்றங்கள் நாட்டில் இருக்குமேயாயின் நாடாளுமன்றத்தைக் கலைககும் வரையான ஜனாதிபதியின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் முறையிடலாம். சுதந்திரமான நீதிச்சேவை தொடர்பாக நடவடிக்கை எடுக்காத காரணத்தால் நடக்கும் அநியாயங்கள தொடர்பாகக் கடவுளிடம் முறையிடுவதைத் தவிர வேறுவழியில்லை என்ற நிலைமையை அவரே உருவாக்கிக் கொண்டார்.

நிறைவேற்று ஜனாதிபதிப் பதவி மீது அவருக்கு அந்தரங்க ஆசை ஏற்பட்டிருக்காவிடின் மக்களிடமிருந்து கிடைத்த மக்கள் ஆணையை உரிய விதத்தில் பாதுகாத்து மக்களின் நம்பிக்கைக்கும் கௌரவத்திற்கும் பாத்திரமான சீர்திருத்தங்களை மேற்கொள்ள ரணிலுக்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.

பிரதமர் ரணிலின் ஒட்டுமொத்த செயற்பாடுகள் தீய நடவடிக்கைகளைக கொண்டன எனக் கூறமுடியாது. அவர் பல நல்ல விடயங்களையும் மேற்கொண்டுள்ளார்; மேலும் பல நல்ல முயற்சிகளை மேற்கொள்ளவும் முயன்றுள்ளார். அவர் மேற்கொண்ட நல்ல நடவடிக்கைகளில் மிகச்சிறந்த நடவடிக்கையாக இனப்பிரச்சினைக்குச் சமாதா[illegible] தீர்வுகாணும் விடயத்தில் அவர் [illegible]மற்கொண்ட துணிச்சலான முயற்[illegible]களைக் குறிப்பிடலாம். மிகச் சிறந்த செயற்பாடு எனக் கூறமுடியாவிடினும் உலக வங்கியின் பணிப்புரைகளை அச்சொட்டாகப் பின்பற்றி பொருளாதார நடவடிக்கைகளுக்குப் புத்துயிரளித்தார்; ஊடகங்களுக்கு மறுவாழ்வளித்தார்.

எதேச்சாதிகார அணுகுமுறைகளுககுப் பக்கச்சார்பாகச் செயற்பட்டால் நாட்டிற்கு அழிவே ஏற்படும்; சுபீட்சம் ஏற்படமாட்டாது. நாடாளுமன்றத்தின் ஆயுள்காலத்தில் அரைப்பங்கு கூட முடிவடையாத வேளையில் மீண்டும் தேர்தலைச் சந்திக்க நேர்ந்துள்ள இந்தத் துன்பமான நிகழ்வானது நிறைவேற்று ஜனாதிபதி முறைக்குப் பாதுகாப்பு வழங்க முற்பட்டதன் பிரதிபலனேயாகும் எனவே, நடைபெறவுள்ள தேர்தலில் வேறு ஒருபோதும் இல்லாத அளவிற்கு ஜனாதிபதி முறை குறிதது பிரதமரும் அரசும் என்ன போக்கை அனுசரிக்கப் போகின்றனர் என்ற கேள்வி எழுகிறது.

**தமிழில்: கஜனி**

சந்திரிகா குமாரதுங்கவின் கைகளில் நிறைவேற்று அதிகாரங்கள் இருக்கும் நிலையிலேயே இந்தத் தேர்தல் நடைபெறவுள்ளது.

தேர்தலில் மக்கள் மீண்டும் ஐ.தே. முன்னணிக்கு ஆட்சி அதிகாரங்களை வழங்கினால் அவ்வாறு உருவாகும் அரசும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனேயே செயற்பட வேண்டும்.

அவ்வாறு உருவாகும் அரசுக்கு முட்டுக்கட்டைகள் போடப்படுமானால ரணில் என்ன நடவடிக்கைகளை மேற கொள்வார் என்பதே இத்தேர்தல வேளையில் எழும் கேள்வியாகும்.

அந்தக் கேள்விக்கு ரணில் என்ன பதிலையளிக்கப் போகிறார்?

சண்டித்தனத்தின் மூலம் அவரை (ஜனாதிபதியை) பதவியிலிருந்து விரட்டுவதா? அல்லது இந்த முட்டாள்தனமான முறையை (ஜனாதிபதி முறையை) ஒழித்து சீர்திருத்தங்களை மேற்கொள்வாரா? இதில் ரணில எதை மேற்கொள்ளப்போகிறார். ★


உ

## பாராட்டி வாழ்த்துகின்றேன்



*கலைவளரும் உயிர் ஓவியக் கரத்தான்*
*கலாபூஷணம் சண்முகராசா என்னும்*
*நிலைவளரும் நெறியாளன் சைவசீலன்*
*நிறைவளரும் ஆசிரியன், சிவன் விளங்கும்*
*மலைவரும் தெய்வ சித்திரம் படைக்கும்*
*மயன் போன்ற வல்லாளன் கதிரவன் போல்*
*தலைவளரும் சித்திரத்தின் சுரபியாகி*
*தனம் வளரும் சுகம் சிறந்து வாழி, வாழி.*

**-அருட்கவி சீ.விநாசித்தம்பி.**

*நாகவரத நாராயண தேவஸ்தானம்,*
*அளவெட்டி.* (28608) (11-19-21)

## நல்லூர் வணிகர் கழக 2004 ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்ட அறிவித்தல்

*அன்புடையீர்!*

நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட அனைத்து வர்த்தகர்களுக்கான நல்லூர் வணிகர் கழகத்தின் 2004 ஆம் ஆண்டுப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும், 2004.03.07 ஆம் திகதி பு.நே.மு.ப. 10.30 மணிக்குக் கல்வியங்காடு மார்க்கட்டில் அமைந்திருக்கும் வன்னியசிங்கம் படிப்பக மேல்மாடியிலுள்ள சங்கப் பணிமனையில் நடைபெறவிருப்பதால் தயவுசெய்து அனைத்து வர்த்தகர்களும் தவறாது சமுகம் தரும்படி அன்புடன கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

*ச.கிருஸ்ணானந்தமூர்த்தி*
*தலைவர், நல்லூர் வணிகர் கழகம்.*

(28654)(34-21-14)

## விற்பனைக்கு உண்டு

எமது சொந்தப் பாவனையிலுள்ள சக்தி லாண்ட் மாஸ்ரர் (பெட்டியுடன்) விற்பனைக்கு உண்டு.

பார்வையிட விரும்புவோர் திங்கள் முதல் வெள்ளி வரை பணிமனை நேரத்தில் சமுகந்தரவும்.

விவரங்களுக்கு:

**NVDAG**
அறவழிப் போராட்டக்குழு,
29, கைதடி நுணாவில்,
சாவகச்சேரி.
T.P.- 0777 111494 (28650) (21-11-19)

## நெஞ்சம் உருக்கும் ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில் : 10-04-1992
விண்ணில் : 16-02-2003
திதி : 19-02-2004

இசைக் குன்றுகளின் மதலையாய் உதித்தாய்
இசையால் குறும்பால் எமனையும் கவர்ந்தாய்
கலைகள் நிறைதவழ் கல்விச் சாலையாம்
சுண்டுக்குளியும் சயன்ஸ் அக்கடமியும்
கலையால் பண்பால் உயர்த்தின உனையே
நீரிற் குமிழியாம் நிலையில்லா வாழ்வின்
எல்லை பதினொன்று அல்லது பதினாறென்றாய்
ஆஞ்சநேயர் என்னுடலில் புகுந்து
உண்மையெல்லாம் கூற வைக்கிறார் என்றாய்
ஒல்லையில் வருவேன் மீண்டும் என்றாய்
உன் திருவாக்கையே நம்பி நாமும்
ஆண்டவனை வேண்டி நிற்கின்றோம் அம்மா!

செல்வி
**சாரங்கி ரஜீந்திரன்**
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி)

"சாரங்கம்"
393, கோயில் வீதி,
நல்லூர். (28644) (41-14-19)

தகவல் :P.ரஜீவன், (நாதஸ்வர வித்துவான்)

*உன் சிந்தனையில் இருக்கும்:*
அப்பா, அம்மா, அண்ணா.
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

ஆனைக்குட்டி மதவடி, தெல்லிப்பழையைச் சேர்ந்த

**திருமதி மலைமகள் இராமநாதர்**



அவர்களின் மறைவு எமக்குப் பெரும் வேதனையையும் அதிர்ச்சியையும் அளித்துள்ளது. இவரது மறைவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கின்ற அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக கொள்வதுடன், எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாகச் சமர்ப்பித்து, ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

- கூல் ஏயர் நிறுவனம்,
காங்கேசன்துறை.

(28657)(12-40)

## கண்ணீர் அஞ்சலி

*சமூக முன்னேற்றக்கழகங்களின் சமாசத்தின் ஆரம்பகால உறுப்பினரும், தீவகப்பகுதி கழகத்தின் முன்னாள் தலைவரும், வலி. வடக்கு. வலி. தெற்கு. வலி. மேற்கு. வலி. தென்மேற்கு (மானிப்பாய்) பிராந்திய சபையின் முன்னாள் பொருளாளருமாகிய*

**சோ.ஞானப்பிரகாசம்**

(முன்னாள் ஊழியர் இந்திரா நகையகம், யாழ்ப்பாணம்)

அவர்களின் மரணச் செய்தி அறிந்து பேரதிர்ச்சியடைந்தோம். அவரின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

சமூக முன்னேற்றக்கழக
பிராந்திய சபையினர்,
மானிப்பாய்.

(28648)(35-21-19)

பொதுசன

# உதயன்

## ஜனநாயகம் பிழைக்குமா?

"தமது அபிலாஷைகளைக் கொள்கை ரீதியாக வெளிப்படுத்துகின்ற ஒரு தேர்தலாக இந்தப் பொதுத தேர்தலை மாற்றியமைப்பதற்குத் தமிழர்கள் விரும்புகின்றார்கள். எந்த இலட்சியத்துக்காக - எந்தக் கொளகைக்காக - ஒன்றுபட்டு, ஒருமித்து, ஒரு தலைமைததுவத்தின் கீழ் தாங்கள் ஐக்கியப்பட்டு நிற்கின்றார்களோ அதை இம்முறை தேர்தலில் சர்வதேச சமூகத்துக்கு நிலைநிறுத்தி, நிரூபிக்கும் ஆயத்தப்பாட்டுடன் அவர்கள் இருக்கின்றார்கள்." - என்று கூறியிருக்கின்றார் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

இந்தத் தேர்தலில் விடுதலைப் புலிகள் நேரடியாகப் பங்குபற்றாவிட்டாலும் கூட, ஐக்கியப்பட்ட தமிழர் அணி என்ற முறையில் கூட்டமைப்பு ஊடாகத் தேர்தலில் தங்கள் பங்களிப்பையும் ஆதரவையும் வழங்குவதற்கு அவர்கள் முன்வந்திருக்கின்றார்கள் என்பது புலனாகின்றது.

இது நல்லதோர் மாற்றம். தீவிரவாதப் போராட்டம் நடத்திய தமிழர் தரப்பு, ஆயுதங்களுக்கு ஓய்வு கொடுத்துவிட்டுக் கடந்த இரண்டு ஆண்டுகளாக அமைதி பேணியது. இப்போது ஜனநாயகத் தேர்தலிலும் தனது பங்களிப்பை வழங்குவதற்கு அது முன்வந்திருக்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி, தமிழர் தரப்பின் முழுச்சிரத்தையையும் ஜனநாயகத்தின் பக்கமே முழுமையாகத் திரும்ப வைப்பது பெரும்பான்மைச் சிங்களத் தரப்பின் கைகளில்தான் இப்போது தங்கியுள்ளது.

அரச அதிகாரத்தையும், பொலீஸ் மற்றும் படைப்பல வலுவையும் வைத்துக்கொண்டு முன்னைய சந்தர்ப்பங்களில் நடத்துகொண்டது போன்று ஜனநாயக விரோத குளறுபடிகளில் ஈடுபட முயன்றால், தீவிரவாதப் போக்குடைய தமிழர் தரப்புக்கு ஜனநாயகப் பாதை மீதிருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் அடிப்பட்டுப் போய்விடும்; அயுத வழியும் தீவிரவாதப் போக்குமே சிறந்தபலனை - நியாயமான தீர்வை - தங்களுக்குத் தர முடியும் என்ற அவர்களின் நம்பிக்கை உறுதிப்பட்டதாகிவிடும்; மேலும் உரமூட்டுவதாக அமையும்.

1994 பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்திலிருந்து பத்து எம்.பிக்கள் எப்படித் தெரிவானார்கள், அப்போது ஜனநாயகம் எவ்வாறு கேலிக் கூத்தாகியது என்பதெல்லாம் தமிழர்களுக்குள்ள அனுபவங்கள்.

கடந்த பொதுத் தேர்தலில் கூட இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் வாக்களிக்க விடாமல் தடுக்கப்பட்டனர். பொதுத் தேர்தலின்போது நடத்தப்பட்ட அந்த ஜனநாயகப் படுகொலைக்கு அப்போதைய ஆளும் தரப்பில் கூறப்பட்ட நொண்டிச் சாட்டுக்களை உயர்நீதிமன்றமே நிராகரித்துவிட்டது.

- இவ்வாறு காலங்காலமாக இடம்பெற்று வந்த ஜனநாயக விரோதத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு மத்தியிலும், இம்முறை பொதுத் தேர்தல் ஓரளவேனும் நியாயமாக நடக்கும் என்று நம்பி அபபாதையில் தமது கவனத்தைத் திருப்பியிருக்கின்றார்கள் தமிழர்கள்.

சமாதானத்தின் பெயரால் போர் நடத்தும் விரோதக் கொள்கையை நடைமுறைப்படுத்தியவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதங்க. தேர்தலோடு நேரடியாகத் தொடர்புபட்ட பாதுகாப்புத்துறையும், உள்துறையும், ஊடகத்துறையும் இப்போது அவரின் கைகளில்.

ஏற்கனவே குடாநாட்டுத் தேர்தல்களில் குளறுபடி செய்து, சாதனை படைத்த - ஜனாதிபதிக்கு மிக நெருக்கமான - அணியினரும் மீண்டும் களத்துக்கு வந்துள்ளனர்.

தேர்தல் நடவடிக்கைகளோடு தொடர்புபட மாட்டோம் எனக் கண்காணிப்புக் குழுவினர் அறுதியிட்டுக் கூறியுள்ள இந்நிலையில் - ஜனாதிபதியின் செல்வாக்கோடு வரக்கூடிய மாற்றுக் கட்சிகள், படையினரின் பலத்தை பின்புலமாக வைத்துக் கொண்டு வழமைபோல இம்முறையும் நீதியான - நேர்மையான - தேர்தலுக்கும் ஜனநாயக விழுமியங்களுக்கும் வேட்டு வைக்க முயலலாம் - நிறையவே வாய்ப்பு உண்டு.

அப்படி நேர்ந்தால், மீண்டும் தமிழர் பகுதியில் முழு அளவில் ஜனநாயகம் மலர்வதற்குக் கிடைத்த சந்தர்ப்பம் முற்றாகக் கருகிப் போய்விடும். அதன் விளைவை முழு நாடுமே எதிர்கொள்ள வேண்டி நேரும்.

ஜனநாயமுறைகளில் தங்களின் அபிலாஷைகளை எதிர்பார்ப்பை - விருப்பை - அவாவை - வெளியிட வாஞ்சை கொண்டிருக்கும் தமிழர் தரப்புக்கு அதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவது அமைதிப் பாதையில் மற்றுமோர் ஆக்கபூர்வமான நகர்வுக்கு வழி செய்யும். அதைக் குழப்புவது ஜனநாயகத்துக்கு மட்டுமல்ல. அமைதி முயற்சிகளுக்கே குழி வெட்டுவதாகவே போய்முடியும்.

அனைத்துத் தரப்பினரும் இதனால் நாட்டுக்கு ஏற்படக்கூடிய பலவகைப்பட்ட ஆபத்துக்களையும் உணர்ந்துகொள்வது மெத்தவும் நல்லது.

---

### திறப்பு விழாக்கள் ஏதுமின்றி

# யாழ். நூலகத்தை அடுத்த வாரம் மக்கள் பாவனைக்கு விட முயற்சி

யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ். பொதுநூலகத்தை அடுத்தவாரம் மக்கள் பாவனைக்குத் திறந்துவிடுவதற்கான நடவடிக்கைகளை யாழ்.மாநகரசபை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர் என்று தெரியவருகிறது.

வேலைகள் அனைத்தும் பூர்த்தியாகிக் கடந்த சில மாதங்களாகவே நூலகம் திறப்பதற்குத் தயாரான நிலையில் உள்ளது. அரசியல் இழுபறி நிலை காரணமாக அதனைத் திறப்பதில் தொடர்ந்தும் தாமதங்கள் ஏற்பட்டு வந்தது. இந்த நிலையில் பொதுநூலகத்தைத் திறப்பதற்குப் பெருமெடுப்பிலான எந்த விழாவையும் எடுக்காமலேயே அதனை மக்கள் சேவைக்கு அர்ப்பணிப்பதென யாழ். மாநகரசபை அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர் என்று அறியவருகின்றது.

இரண்டு தசாப்த காலத்துக்கு முன்னர் இனவாதக் காடையர்களால் பொதுநூலகம் எரித்து அழிக்கப்பட்டது.

இந்த நூலகத்தின் புனரமைப்புக் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது. முழுமையாகப் புனரமைப்புச் செய்யப்படாத நிலையிலேயே நூலகத்தைத் திறந்துவிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இறுதியில் அரசியல் இழுபறி காரணமாகத் திறப்புவிழா ஒத்திவைக்கப்பட்டது.

புனரமைப்புப் பணிகள் பூர்த்தியான நிலையில் நூலகத்தைத்திறந்து விடும்படி யாழ். ஆயர் வண.பிதா தோமஸ் சௌந்தரநாயகம் மற்றும் யாழ். மாநகரசபை முன்னாள் ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் நூலகத்தை மக்களின் பாவனைக்கு அடுத்த வாரம் திறந்துவிட யாழ். மாநகரசபை உத்தேசித்துள்ளது.

இதுதொடர்பாக வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ம-7-6)

# திருவடிநிலை பாடசாலையை மீளத் திறக்கக் கோரிக்கை

கொக்குவில்,பெப்.19

திருவடிநிலை சைவத்தமிழ கலவன் பாடசாலையை மீளத் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி மக்கள் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். அமைச்சுச் செயலருக்கு இது தொடர்பாகக் கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்துள்ளனர்.

அப்பகுதி மக்கள் சார்பில் சனசமூக நிலையங்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தின் விவரம்வருமாறு:-

சிறப்பாக இயங்கிவந்த திருவடிநிலை சைவத் தமிழ்கலவன் பாடசாலை 1995ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்தமையினால் தொடர்ந்து இயங்க முடியாமலுள்ளது.

தற்போது நாட்டு நிலைமை ஓரளவு சீரடைந்து உள்ளமையால் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் இப்பகுதியில சுமார் 80 குடும்பங்கள் மீண்டும் குடியேறியுள்ளன.

வறுத்தோலை, குடாக்கனை, நீத்துவன், இறாத்தலடி, கல்விளான் போன்ற பிரதேசத்தில் உள்ள எமது பிள்ளைகள் கல்வி கற்று வந்த இப்பாடசாலை தொடர்ந்து மூடப்பட்டுள்ளதனால் பல இன்னல்களின் மத்தியில் 5 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள சுழிபுரம் ஐக்கிய சங்க சைவவித்தியாசாலைக்குக் கல்வி கற்பதற்கு அனுப்புகின்றோம்.

நாளாந்தம் கூலிவேலை செய்து வாழ்க்கையை ஓட்டிவரும் நாம் எம் பிள்ளைகளை இப்பாடசாலைக்கு அனுப்புவதில் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றோம். பாடசாலைக்கு நேரத்துடன செல்வதிலும், ஒழுங்காகச் செல்வதிலும் எமது மாணவர்கள் பல துன்பங்களைச் சந்திக்க நேரிடுவதனால் கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளார்கள். எமது பிள்ளைகளின் கல்வி தொடர்பாக எழுந்துள்ள நெருக்கடிகளை நீக்குவதற்கு திருவடிநிலை சைவத்தமிழ் கலவன் பாடசாலையை சொந்த இடத்தில் இயங்க வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

# மக்கள் ஆணையைக் காலால் தூக்கி எறிந்தார் ஜனாதிபதி பெரும்பான்மை கொண்டிருந்த அரசைக் கலைத்தது தவறு!

### தொலைக் காட்சி உரையில் பிரதமர் கண்டனம்

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருந்த அரசொன்றை உலக வரலாற்றில் முதல் முறையாக அந்த அரசின் அனுமதியின்றிக் கலைத்தது பெருந்தவறு. மக்கள ஆணையைக் காலால் தூக்கி எறிந்துவிட்டார் ஜனாதிபதி.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் தனியார் தொலைக்காட்சி ஊடாக நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்தார்.

பிரதமர் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

கடந்த 20 வருட காலமாகச் சமாதானத்திற்கு எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்றன. இன்று சில பிரச்சினைகள் இருக்கலாம். ஆனால், யுத்தம் இல்லை. நிரந்தர சமாதானத்திற்காக சிக்கல் மிக்க கடினமான நீண்ட ஆபத்தான பயணத்தில் இவ்வளவு தூரத்தைக் கடந்த இருவருட காலததில் கடந்துள்ளோம். இது இந்த நாட்டு மக்களாகிய நீங்கள் பெற்ற பெரிய வெற்றியாகும். அர்ப்பணிப்பு ஆகியவற்றினால் சர்வதேச சமூகத்திற்கு ஏற்பட்ட நம்பிக்கை மற்றும் அபிமானம் காரணமாக டோக்கியோ நன்கொடை மாநாட்டில் வரலாற்றில் முன்னர் எப்போதும் இல்லாத விதத்தில் 45,000 கோடி ரூபாவை நிதி உதவியாக எம்மால் பெறமுடிந்தது.

புதிய நாடாளுமன்றத் தேர்தலை ஏப்ரல் 2 ஆம் திகதி நடத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கெல்லாம் தீர்ப்பளிப்பதற்கான சந்தர்ப்பம் அன்றையதினம் உங்களுக்குக் கிடைக்கும். கடந்த இரண்டு வருடகாலத்தில் எமது அரசாட்சியின் போது சில தவறுகள் நடந்தன. அததகைய குறைபாடுகள் மற்றும் தவறுகளினால் உங்களில் சிலருக்குக் கஷ்டங்களும் மனவேதனைகளும் ஏற்பட்டன. அத்தகைய தவறுகள் யாரால செய்யப்பட்டிருப்பினும் உங்கள் அரசின் பிரதம மந்திரி என்ற வகையில் அவற்றின் தார்மீகப்பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கின்றேன். அவற்றுக்காக நான் எனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இருபது வருடகால யுத்தத்தால் அழிக்கப்பட்ட நாட்டில் இரண்டு வருடத்துக்குள் சமாதானத்தை ஏற்படுத்தவும், பாதாளத்தில் வீழ்ந்திருந்த நாட்டை மீட்டெடுத்து, துரித அபிவிருத்தியை நோக்கிய பாதையில் அதனை இட்டுச் செல்வதற்கும் உங்கள் ஆதரவு எமக்கு இருந்தது. அந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நற்பணியைச் செய்வதற்கான வாய்ப்பை நீங்கள் எமக்கு வழங்கினீர்கள். அந்த முயற்சியின்போது பல இன்னல்களைத் தாங்கிப் பொறுமையுடனும், அர்ப்பணிப்புடனும் நீங்கள் எங்களுடன் இணைந்திருந்தீர்கள். நானும், அரசும் இவற்றுக்காக உங்களுக்கு நன்றியையும், மரியாதையையும் செலுத்துகின்றோம்.

- இவ்வாறு பிரதமர் தனது உரையில் குறிப்பிட்டார். (ம)

# பாவனைக்கு உதவாத பொருள்கள் பருத்தித்துறை நகரில் அழிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.19

பருத்தித்துறை நகரப்பகுதி மற்றும அதனை அண்டிய பகுதிகளில் உள்ள வியாபார நிலையங்களில் தமிழீழ சுகாதார சேவையினரும் பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களும் இணைந்து அண்மையில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது மக்கள் பாவனைக்குதவாத உணவுப்பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

சுகாதாரமுறைப்படி தயாரிக்கப்படாத மற்றும் முன் அனுமதி பெறாதவகையில் விற்பனைக்கு வைக்கப்படடிருந்த ஐஸ் பைக்கற்றுகள், ஜூஸ் பைக்கற்றுகள் என்பனவே அழிக்கப்பட்டன.

உணவகங்கள், பேக்கரிகள், குளிர்பான விற்பனை நிலையங்கள், சந்தைகள், கொல்களங்கள் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட இந்தச்சோதனையின்போது தொற்றுநோய்களுக்கு உள்ளாகிச் சிகிச்சை பெற்றவர்களும உறபத்திகளில் ஈடுபட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

இவ்வாறான பொருள்களைப் பொதுமக்கள் வாங்கவேண்டாமெனவும விற்பனை நிலையங்களில இவற்றை விற்க வேண்டாமெனவும தமிழீழ சுகாதார சேவையினர் அறிவித்துள்ளனர். (ம-10)

### நாளை

மாசி 08

வெள்ளிக்கிழமை

(20.02.2004)

திதி : அமாவாசை

பி.பகல் 3.41 வரை

நட்சத்திரம்:அவிட்டம்

பி.பகல் 2.43 வரை

அமாவாசை விரதம்

சுபநேரம்: 6.32 - 8.02

ராகுகாலம்: 11.02-12.32

(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உலகை அறிந்தவன் வெட்கப்பட மாட்டான். தன்னை அறிந்தவன் அகம் பாவமடையமாட்டான்.

### நுணாவில் மினிபஸ் விபத்து:

# தலைமறைவாகி இருந்த சாரதி பொலீஸில் சரண்!

தென்மராட்சி,பெப்.19

கைதடி, நுணாவில் பகுதியில் கடந்த 12ஆம் திகதி விபத்துக்குள்ளான மினிபஸ்ஸின் சாரதி சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் சட்டத்தரணியின் உதவியுடன் சரணடைந்துள்ளார்.

கோப்பாய் மத்தியைச் சேர்ந்த கந்தசாமி ரகுநாதன் என்பவரே பொலீஸ் நிலையத்தில் சரணடைந்தவராவார்.

சாவகச்சேரி பொலீஸார் நேற்று முன்தினம் மாலை அவரைச் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

சாரதியை அடுத்த மாதம் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மினிபஸ் விபத்தில் இருவர் பலியானதும் 24 பேர் படுகாயமடைந்ததும் தெரிந்ததே. (ம-117)

### கிளிநொச்சி மாவட்டத்தில்

# பதில் கடமையாற்றும் தபால் சிற்றூழியர் பகிஷ்கரிப்பில் ஈடுபட முஸ்தீபு!

கிளிநொச்சி மாவட்டத்தில் பதில் கடமையாற்றும் தபால் சிற்றூழியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து பகிஷ்கரிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இதுதொடர்பாகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்கு அவர்கள கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

நீண்டகாலமாகத் தாம் சிற்றூழியர்களாகப் பதில் கடமையாற்றி வருகின்றபோதும் தமது நிரந்தர நியமனம தொடர்பாக எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை என்றும் -

1989ஆம் ஆண்டிலிருந்து கடமையாற்றிவரும் தமக்கு நாளாந்த சம்பளமே வழங்கப்பட்டு வருவதாகவும் -

இது விடயத்தில் உரிய கவனம எடுக்கவேண்டும் என்றும் அரச அதிபருககு அவர்களால் அனுப்பிவைக்கபபட்டுள்ள கடிதததில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-10-164)

# 'ஏசியன் பெயின்ற்ஸ்' அறிமுகப்படுத்தும் 'டெக்கோரா' எமல்சன் வர்ணப்பூச்சு

போரால் பாதிக்கப்பட்ட குடாநாட்டில் தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கட்டடக் கட்டுமானப் பணிகளும் புதிய வர்த்தக நடவடிக்கைகளும் அதிகளவில் மேற்கொள்ளப்படுகின்றன. இவற்றுக்கு வர்ணப்பூச்சுகளின் தேவை முக்கியமானதாகும்.

இலங்கையில் நீண்டகாலமாக வர்ணப் பூச்சு உற்பத்தியில் தனக்கெனத் தனியிடத்தைப் பெற்றுள்ளது 'ஏசியன் பெயின்ற்ஸ்' நிறுவனம். இந்த நிறுவனம் சமீபத்தில் புதியரக 'எமல்சன்' வர்ணப்பூச்சை அறிமுகப்படுத்தியுள்ளது. 'டெக்கோரா' என்ற பெயரில் இந்த 'எமல்சன்' வர்ணப்பூச்சு விற்பனைக்கு வந்துள்ளது.

குடாநாட்டில் 'டெக்கோரா' அறிமுக விழா அண்மையில் யாழ். பலநோக்குக்கூட்டுறவுச் சங்க மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் குடாநாட்டின் முன்னணி விநியோகஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் 'ஏசியன் பெயின்ற்ஸ்' நிறுவனத்தின் தொழில் நுட்ப முகாமையாளரான ஆனந்த அபேரத்தின கூறியதாவது.

புதிய உயர் தரம் மிக்க 'எமல்சன்' வர்ணப்பூச்சுக்களை அறிமுகம் செய்வதன் மூலம் 'ஏசியன் பெயின்ற்ஸ்' நிறுவனம் உள்ளூர்ச் சந்தையில் அதற்குரிய இடத்தை மீண்டும் தக்க வைத்துள்ளது. 'டெக்கோரா'' என்ற பெயரில் இந்தப் புதிய எமல்சன் தயாராகியுள்ளது. உள்ளூர்ச் சந்தையின் முன்னுரிமைத் தேவையை மனதிற்கொண்டு ஆரம்பகட்டமாக 19 வர்ணங்கள் இதில் அடங்கியுள்ளன. 'ஏசியன் பெயின்ற்ஸ்' நிறுவனத்தின் உற்பத்தி வரிசையில் அதிசயிக்கத்தக்க புதிய நட்சத்திரமாக இது இருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஏசியன் பெயின்றற்' நிறுவனத்தின் அண்மைக்கால ஆய்வு, அபிவிருத்தியின் பிரதிலிப்பாக இந்த உற்பத்தி அமைந்துள்ளது. ஒளிப் பாதிப்புக்கு ஈடுகொடுக்கக் கூடிய விசேட தன்மையும் மேற்பரப்பில் நன்றாக ஒட்டிக் கொள்ளும் பண்பும் நன்றாக கழுவிவிடக் கூடிய தன்மையும் இதற்குண்டு.

இது நியாயமான விலையில் கிடைக்கும் - உயர் தரமாக தயாரிக்கப்படும் - கொடுக்கும் பணத்துக்குப் பெறுமதி உள்ள எமல்சனாகும். உள்ளூர் சந்தையில் இது உறுதியான ஒரு போட்டியாக அமையும் விலையை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது 'டெக்கோரா' நாட்டின் 'எமல்சன்' வகைகளுள் மிகவும் உன்னதமான தயாரிப்பாக இருக்கும் - என்றார் அவர். (ஒ)



'டெக்கோரா எமல்சன்' அறிமுகவிழாவில் 'யாழ். இரும்பகம்' உரிமையாளர் ப.ஸ்ரீமுகுந்தன் 'ஏசியன் பெயின்ற்ஸ்' நிறுவனத்தேசிய முகாமையாளர் அசோகஜெயசிங்க மற்றும் அலுவலர்கள்.

தொழில் வளம்


கிளிநொச்சி மக்கள் வங்கி நடத்திய 'சிசு உதான' கணக்கு பேணும் சிறுவர்களுக்கான பரிசளிப்பு விழாவில் கிளிநொச்சி நகர வர்த்தக சங்கத் தலைவர் கு.இராமசந்திரன் சிறுமி ஒருவருக்குப் பரிசளிக்கிறார். அருகில் வங்கி முகாமையாளர் செ.பால்ராஜ் காணப்படுகிறார். படம்: தெல்லிப்பழை செய்தியாளர்.

# கணனிப் பயிற்சிச் சேவையில் புதிய அறிமுகமான ஈ-ரச்

யாழ்.மருதனார் மடத்தில் ஈ-ரச் கணனி நிறுவனம் (E-TOUCH Computer System) தனது சேவையை ஆரம்பித்துள்ளது. இதன் ஆரம்ப நிகழ்வில், உடுவில் பிரதேச செயலர் எஸ்.திருவாகரன், உடுவில் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன், நிறுவன இயக்குநர் க.மதுரா கணேசன் உட்பட்ட பலரும் கலந்து கொண்டனர்.

'ஈ-ரச்' கணனி நிறுவனம் பாடசாலை மாணவர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள் போன்றவர்களின் வசதிகருதி மாலை மற்றும் இரவு நேரவகுப்புகளை விசேடமாக நடத்துகிறது. கணனியைச் சொந்தமாக வைத்திருப்பவர்கள், அலுவலக ஊழியர்கள் அதிகாரிகள், பொறியியல்துறையினர், மாணவர்கள், அச்சகத்துறையினர், தகவல் தொழில்நுட்பவியலாளர்கள், கணனித்தொழில் நுட்பவியலாளர்கள் எனப் பலதரப்பட்டவர்களுக்கும் அவரவர்க்கு ஏற்ற டிப்ளோமா கற்கை நெறிகளை இந்த நிறுவனம் நடத்திவருகிறது.

ஏற்கனவே கணனிக்கற்கை நெறிகளை முடித்தவர்கள், கணனிகளைப் பயன்படுத்தும் வசதியையும் இந்த நிறுவனம் ஏற்படுத்தித்தருகிறது. இலங்கை அரசால் வழங்கப்படும் சான்றிதழ்களுக்கான கற்கை நெறிகளையும் ஈ-டச் கணனிப் பயிற்சி நிறுவனம் நடத்திவருகிறது. (ஒ)

# ஒதுக்கப்பட்ட நிதி வளங்களை கட்டுப்பாட்டுடன் பயன்படுத்துங்கள்

## நிர்வாக அதிகாரிகளுக்கு அரச அதிபர் வேண்டுகோள்

கொக்குவில்,பெப்.19

இவ்வருடத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் வரவு செலவுத்திட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே, நிதியைக் கட்டுப்பாட்டுடன் பயன்படுத்துமாறு பிரதேச செயலர்கள் மற றும் உதவி அரச அதிபர்களை அரச அதிபர் கேட்டுள்ளார்.

பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரச அதிபர்கள் கலந்து கொண்ட கூட்டம் அரச அதிபர் செ. பத்மநாதன் தலைமையில் யாழ். செயலகத்தில் அண்மையில் இடம் பெற்றது.

கடந்த வருடத்திலும் பார்க்க மட்டுப்பத்தப்பட்ட அளவிலேயே இந்த வருடத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

அதற்கமைய வழங்கப்படும் நிதிகளைக் கட்டுப்பாட்டுடன் தேவையான செலவுகளுக்கு மட்டும் பயன்படுத்துமாறு சகல பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரச அதிபர்கள் ஆகியோரைக் கூட்டத்தில் யாழ் அரச அதிபர் கேட்டுக்கொண்டார்.

குறைந்த அளவில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள காரணத்தினால் மத்திய அரசிற்கு உள்ளீர்க்கப்படாத உத்தியோகத்தர்களுக்கும், மாகாண சபையால் நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும், மாகாண சபையால் நியமனம் செய்யப்பட்ட அதிசிறப்புத்தர நிர்வாக உத்தியோகத்தர்களுக்கும் இந்த நிதியிலிருந்து சம்பளக் கொடுப்பனவு செய்ய முடியாதுள்ளது என்று கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

இதனால், மாகாண சபை உத்தியோகத்தர்களில் அதிசிறப்புத்தர நிர்வாக உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனைய உத்தியோகத்தர்களின் சேவையைப் பெறுவது தவிர்க்கப்பட வேண்டுமெனவும் -

இவர்களைப் பிரதேச செயலகங்களிலிருந்து வேறு மாகாண சபை அலுவலகங்களுக்கு இடமாற்றம் செய்வதெனவும் - கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இது விடயமாக மகாண பொது நிர்வாக அமைச்சுச் செயலருக்கு ஏற்கனவே கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

மேலதிக நேரக்கொடுப்பனவு, பொது விடுமுறைக் கொடுப்பனவு என்பன தவிர்க்கப்பட வேண்டும். எனினும் அவசியத் தேவைகளின் நிமிர்த்தம் இந்தக் கொடுப்பனவுகள் வழங்க வேண்டிய தேவையேற்படின் மேலதிக மாவட்டச் செயலரின் (நிதி) நிதிநிலை அறிக்கையினைப் பெற்று, அரச அதிபரின் முன் அனுமதியுடன் மேற்படி கொடுப்பனவுகள் வழங்கப் படலாம்.

மீள் நியமனம் பெற்றுக்கடமையாற்றிய கிராம அலுவலர்களுக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைக்கும் வரை தொடர்ந்தும் அவர்களை கடமையில் ஈடுபடுத்தாதிருத்தல்.

இதுவரை தற்காலிக நடைமுறையாய்ச் செயற்பட்டுவந்த அரச அதிபரின் சிபார்சின் அடிப்படையில் மதுபான விற்பனை நிலைய அனுமதிப்பத்திரம் வழங்கும் நடைமுறையை பிரதேச செயலகங்களிடம் கையளித்தல்.

சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மாவட்டத்தில் திட்டங்களைச் செயற்படுத்தும்போது பிரதேச செயலின் சிபார்சுடன் அரச அதிபரின் அனுமதியைப் பெறும் நடைமுறையைக் கொண்டுவருதல்.

உள்ளூராட்சி அமைப்புக்களுக்குக் குறிப்பிட்ட தேவையின் பொருட்டு பாராதீனப்படுத்தப்பட்ட அரச காணிகள் அத்தேவைக்காக பயன்படுத்தப்படாதவிடத்து அதனை மீளப்பெறுதல்.

சமுர்த்திக் கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தாத விதத்தில் சமுர்த்தி உத்தியோகஸ்தர்களை துரித அபிவிருத்தித் திட்டச்செயறபாடுகளில் ஈடுபடுத்தல் ஆகிய முடிவுகளும் எடுக்கப்பட்டன. (ஒ-76)

# கலைஞர்களிடமிருந்தே விவரம் பெற்று அவர்களைக் கௌரவிப்பது முறையல்ல

## திருமறைக்கலாமன்றப் பிரதி இயக்குநர் உரை

குருநகர்.பெப்.19

மாகாணக் கலாசார அலுவல்கள் திணைக்களம, கலைஞர்களிடமிருந்தே விவரங்களைக் கேட்டு அவர்களைக் கௌரவிப்பது வேதனையான விடயமாகும். - இவ்வாறு கூறினார் யாழ். திருமறைக்கலாமன்றத்தின் பிரதி இயக்குநர்களில் ஒருவரான சாம். பிரதீபன்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் அண்மையில் "கலாபூஷணம் விருது வழங்கப்பட்ட திருமறைக் கலா மன்ற மூத்த உறுப்பினர் ஜி.பி. பேர் மினசை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் சிறப்புரையாற்றியபோதே சாம் பிரதீபன் தனது கவலையை வெளியிட்டார்.

யாழ்.திருமறைக் கலாமன்ற அரங்கில் திருமறைக் கலாமன்றப் பிரதி இயக்குநரில் ஒருவரான ஜோண்சன் ராஜ்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சாம்.பிரதீபன் உரையாற்றியபோது தெரிவித்ததாவது:-

கலைஞர்களை மரியாதைக்குரிய முறையில் தேர்ந்தெடுத்து அரசு கௌரவிக்காதது இந்த மண்ணின் துரதிர்ஷ்டமாகும். கலைஞர்களைத் தாமே இனம் காணாமல், கலைஞர்களிடமிருந்தே படிவங்கள் மூலம் விரைங்களைக் கேட்டுப் பெற்று அதன் மூலம் அவர்களைக் கௌரவிப்புக் குத் தெரிசெய்வது கலைஞர்களை அகௌரவப்படுத்துவதாகும். இது வேதனைக்குரிய விடயம். கௌரவிக்கப்பட வேண்டிய கலைஞர்களில் பலர் இன்னமும் கௌரவிக்கப்படவில்லை. விருதுகள் தகுதியான பலருக்கு வழங்கபடவில்லை.

கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாகத் தன்னுடைய ஆத்மாவினுள நாடகத்தைப் புகுத்தி கலைப் பணியாற்றி வரும் ஜி.பி.பேர்மினசிற்கு கலாபூஷணம் விருது வழக்கப்பட்டமை பொருத்தமானதாகும். இவர் சிறைச்சாலை அதிகாரியாகச் சேவை புரிந்த 1970ஆம் ஆண்டுகாலப்பகுதியில் சிறைக் கைதினை ஒன்றுதிரட்டி 'மனமாறிய கைதி' எனும் நாடகத்தை உருவாக்கி அதனை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் மேடையேற்றினார். நாடக உலகில் பல்வேறு புதுமைகளைப் புகுத்தியவர் பல கலைஞர்களையும் உருவாக்கியவர்.

'அரங்கவாரிதி' கலைஞான கேசரி' 'யாழ்.ரத்னா' போன்ற விருதுகளைப் பெற்ற இவர் நல்ல கலைஞர் மட்டுமல்ல நல்ல மனிதரும் ஆவார் - என்றார். (ஒ-51)

# வலி.வடக்குக் கிரிக்கெட் போட்டி: அளவெட்டி ச.ச.நிலைய அணிவெற்றி

வலி.வடக்குப் பிரதேச செயலகம் நடத்திய வலி.வடக்கிலுள்ள பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் அளவெட்டி சனசமூக நிலைய அணி கிண்ணத்தை வென்றது.

கடந்த சனிக்கிழமை பி.ப.4.00 மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டரங்கில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அளவெட்டி சனசமூக நிலைய அணியும் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க அணியும் மோதின.

மட்டுப்படுத்தப்பட்ட 5 ஓவர்களைக் கொண்ட இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி சனசமூக நிலைய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க அணி 4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்றுகளையும் இழந்து 17 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.மாவட்ட விளையாட்டு அதிகாரி றொகான் ராஜசிங்கம் வெற்றிபெற்ற அணிக்கு வெற்றிக்கிண்ணத்தினை வழங்கினார். (ஒ-150)

# யாழ்.மாவட்டச் சதுரங்கஅணிதெரிவு

யாழ்ப்பாணம்,பெப்.19

அகில இலங்கை ரீதியில் மாவட்டங்களுக்கு இடையே நடத்தப்பட்ட சதுரங்கச்சுற்றுப்போட்டியில் பங்கு பற்றுவதற்கான யாழ்.மாவட்ட சதுரங்க அணி தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சதுரங்கச்சம்மேளனத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட சதுரங்கச்சுற்றுப்போட்டியில் முதல் எட்டு இடங்களைப்பிடித்தவர்கள் யாழ்.மாவட்டச் சதுரங்க அணிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்று சம்மேளனச் செயலாளர் வி.ரி.எஸ். வித்தியாதரன் தெரிவித்துள்ளார்.

மாவட்ட அணிக்குத் தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் வருமாறு:-

வி.ரி.எஸ் வித்தியாதரன் (யாழ்ப்பாணம்), என்.சோதிநாதன் (பருத்தித்துறை), எஸ்.இராதாகிருஸ்ணன் (பருத்தித்துறை), எஸ்.ஸ்ரீபிரசன்னா (யாழ். பல்கலைக்கழகம்), ரி.இராஜசிங்கம் (தொண்டமனாறு), ஏ.கோகுலராஜன் (பருத்தித்துறை), ஏ.மோகன் (யாழ்ப்பாணம்), எஸ்.திருச்செல்வம் (பருத்தித்துறை). (ஒ-5)



யாழ்ப்பாணம் சதுரங்கச் சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட சுற்றுப் போட்டியின பரிசளிப்பு விழாவில் யாழ். சதுரங்கச் சம்மேளனத்தலைவர் பேராசிரியர் என்.ஞானக்குமாரன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். வி.எஸ்.வித்தியாதரன், சம்மேளனச் செயலாளரும், முன்னாள் பிரதேச செயலாளருமான செ.இரத்தினம் மற்றும் எஸ்.ஞானசீலன், எஸ். இராஜசிங்கம், என்.ரமணன் ஆகியோரும் படத்தில் உள்ளனர். (ஒ-5)

# அடிக்கடி தேர்தல் நடக்கின்ற நாடாக மாறுகின்ற இலங்கை

**இந்நாட்டின் அரசியல் அட்டவணையின்படி ஆறு ஆண்டுகளுக்கு ஒரு தடவையே பொதுத் தேர்தல் நடைபெறவேண்டும். ஆனால், 2000 - 2004 கால இடைவெளிக்குள் மூன்று பொதுத் தேர்தல்கள். இவற்றைவிட, மாகாண சபைகள், உள்ளூராட்சிச் சபைகள் ஆகியவற்றிற்கான தேர்தல்கள். இதன்படி, உலகில் அதிக தேர்தல்கள் நடைபெறும் நாடுகளின் பட்டியலில் ஸ்ரீலங்கா முதலிடத்தைப் பெறுகிறது என்கிறார் கட்டுரையாளர் ரன்ஜித் ஆனந்த ஜயசிங்கா. 'லங்கா தீப' நாளிதழில் வெளியான அவரது கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

ஸ்ரீலங்காவின் 13ஆவது நாடாளுமன்றம் கடந்த 07ஆம் திகதி நள்ளிரவுடன் கலைக்கப்பட்டு 14ஆவது நாடாளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 02ஆம் திகதி நடத்தப்படுமெனவும், ஏப்ரல் மாதம் 22ஆம் திகதி புதிய நாடாளுமன்றம் கூட்டப்படுமெனவும் ஜனாதிபதி சந்திரிகா பிரகடனப்படுத்தியுள்ளார். இதன்படி, எதிர்வரும் புத்தாண்டுக் கொண்டாட்டங்களைத் தொடர்ந்து நாட்டில் 14 ஆவது நாடாளுமன்றம் தனது நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளது.

சாதாரணமாக ஒரு நாட்டில் அரசியல் சிக்கலகள் நிலவும் சந்தர்ப்பத்திலேயே நாட்டின் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டுப் புதிதாகப் பொதுத்தேர்தலை நடத்துவது வழக்கமாகும். நம் நாட்டின் அரசியல் வரலாற்றில் பதவிக்காலம் முடிவடையு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட சகல சந்தர்ப்பங்களிலும், பதவியிலிருந்த அரசுகள் தமது பெரும்பான்மையை இழந்த காரணத்தினாலேயே அவ்வித நாடாளுமன்றக் கலைப்புகள் இடம்பெற்றுள்ளன.






அரசு பெரும்பான்மை கொண்டிருந்தும நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட சம்பவம் முதன்முதலில் இப்போதுதான இடம்பெற்றுள்ளது. ஐ.தே.கட்சியிலிருந்த சிறந்ததொரு புத்திசாலியென வர்ணிக்கப்பட்ட சேர் ஒலிவர் குணதிலக நாட்டின் மகாதேசாதிபதியாகப் பதவி வகித்த வேளையில, கலாநிதி டபிள்யு தகநாயக்கா பிரதமராக இருந்த காலகட்டமொன்றில் நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை சீர்குலைந்து சிக்கல்கள் நிலவிய சமயத்தில்கூட, பிரதமர் தகநாயக்கா நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுமாறு சிபார்சு செய்யும் வரையிலும் மகாதேசாதிபதி சேர் ஒலிவர் குணதிலக நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுவது குறித்துச சிந்தித்தும் பார்த்ததில்லை. பொதுமக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசொன்றைக் கலைப்பது தொடர்பாக அன்று பின்பற்றப்பட்டு வந்த அரசியல் நாகரிகம் அதுவாகும்.

நடைமுறையிலுள்ள அரசமைப்பினபடி, நிறைவேற்று ஜனாதிபதிக்கு, அரசொன்று நிறுவப்பட்டு ஓராண்டு காலம் கடந்த பின்னர், தான் விரும்பும் எந்தவொரு சமயத்திலும் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அந்தவகையில, தற்போது ஜனாதிபதி சந்திரிகா தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார். ஆனால், நாடாளுமன்றம் கலைக்கப்பட்டவேளையில் ரணிலின் தலைமையிலான ஐ.தே. முன்னணி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் கொண்டிருந்தது. உதாரணமாக, கடந்த டிசெம்பரில் தற்போது கலைக்கப்பட்ட ஐ.தே. முன்னணி அரசினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம் 38 அதிகப்படியான வாக்குகளால் நிறைவேற்றப்பட்டமையைக் குறிப்பிடமுடியும். இதிலிருந்து எந்தவொரு நீதிமன்றத்திலும் முறையிடமுடியாத வகையில் அரசமைப்பு மூலம் வழங்கப்பட்டுள்ள நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி மேற்கொள்ளும் எத்தகைய தீர்மானத்தையும் ஏற்றுக்கொண்டாக வேண்டிய நிலை நாட்டின் பொதுமகளுக்கு ஏற்பட்டுள்ளது என்பதை உணர முடிகிறது. அதே சமயம், மறுறொரு புறம் நாடாளுமன்றம் இவ்விதம் கலைக்கப்படாது, தொடர்ந்து நிர்வாகத்தை முன்னெடுத்துச் செல்லப் பிரதமர் ரணில் விரும்பியிருந்தால் அவ்வித பாதுகாப்பு நடவடிக்கையொன்றை மேற்கொள்வதற்கு அரசமைப்பில் பிரதமருக்கு வழிவகையொன்று வகுக்கப்பட்டிருந்தது. பிரதமர் விரும்பும் பட்சததில் ஜனாதிபதிக்கெதிராகக் குற்ற விசாரணைப் பிரேரணையொன்றை நாடாளுமன்றத்தின் சபாநாயகரிடம் கையளிப்பதன்மூலம் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைத்துவிடும் நடவடிக்கையைத் தடுத்துநிறுத்துவதறகான வாய்ப்பு அரசமைப்பின்மூலம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், உருவாகியுள்ள பிரச்சினையை இரு தலைமைப்பீடங்களிடையே பேச்சுமூலம் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள முடியாதுபோனால, பொதுத்தேர்தலொன்றைச் சந்திப்பதே சிறந்தவழியாகுமெனப் பிரதமர் இப்பிரச்சினை உருவான நேரத்திலிருந்தே கூறிவந்துள்ளார். ஆயினும், அரசில் அங்கம் வகித்த பெரும்பாலான அமைச்சர்கள் மட்டுமன்றி, எதிர்க்கட்சியைச் சேர்ந்த பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் பொதுத்தேர்தலொன்றைச் சந்திப்பதில் ஆர்வம் காட்டவில்லை.

இதில் நாம் இலேசில் மறக்க முடியாத வரலாறு ஒன்று உள்ளது. முன்னர் அதிகாரத்திலிருந்த பொ.ஐ. முன்னணி அரசின் ஆட்சிக் காலம் முடிவடைந்ததையடுத்து 2000ஆம் ஆண்டு ஒக்ரோபரில் இடம்பெற்ற 11ஆவது பொதுத்தேர்தலில் பொ.ஐ. முன்னணிக்கு 107 ஆசனங்களும் ஐ.தே.கட்சிக்கு 89 ஆசனங்களும் கிடைத்தன. இதனையடுத்து ஜனாதிபதி தேசிய ஐக்கிய முன்னணி மற்றும ஈ.பி.டி.பி. ஆகிய சிறிய கட்சிகள் உட்பட வேறு சில குழுக்களையும் ஒன்றிணைத்து பொ.ஐ.முன்னணி அரசை நிறுவினார். ஆனால், ஒரு சில மாதங்களுக்கிடையில் அரசில் அங்கம் வகித்த கட்சிகளுக்கிடையில் கொள்கை வேறுபாடுகள் தலைதூக்கியதன் காரணமாக அவை ஒன்றுடன் ஒன்று முரண்பட்டுக்கொண்டன. விசேடமாக அரசுடன் இணைந்து அமைச்சர் பதவியையும் வகித்த முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்த ரவூப ஹக்கீம் ஐ.தே.கட்சியுடன் நெருக்கமான தொடர்புகளைப்பேணுவதன் மூலம் பொ.ஐ. முன்னணி அரசின் உறுதியைக் குலைக்க முயல்வதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு 2001ஜூலை மாதத்தில் அமைச்சர் பதவியிலிருந்து அகற்றப்பட்டார். அச்சம்பவத்தைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் முஸ்லிம் காங்கிரஸையும், தேசிய ஐக்கிய முன்னணியையும் பிரதிநிதித்துவப்படுத்திய உறுப்பினர்களும் ரவூப் ஹக்கீமுடன் சேர்ந்து அரசிலிருந்து வெளியேறி எதிர்க்கட்சியில் இணைந்தனர். அதன் காரணமாக பொ.ஐ. முன்னணி அரசின் பெரும்பான்மை 109 நாடாளுமன்ற ஆசனங்களாகக் குறைந்தது.

இந்நிலையில், 2001ஜூலை 10ஆம திகதி பொ.ஐ.முன்னணி அரசுக்கெதிராக ஐ.தே.கட்சி நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்தது. அரசு வீழ்ச்சியடையும் ஆபத்தைத் தடுக்கும் நோக்கில் ஜனாதிபதி அந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுமுன்னர் நாடாளுமன்றக் கூட்டத்தொடரை ஒத்திவைத்தார். இதனிடையே, புதிய அரசமைப்பு தொடர்பான சர்வஜன அபிப்பிராய வாக்கெடுப்பொன்று 2001 ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதி நடத்தப்படுமெனவும் ஜனாதிபதி தெரிவித்தார். அத்தோடு, ஜே.வி.பியுடன் பேச்சு மேற்கொண்டு தகுதிகாண் அரசொன்றை உருவாக்குவதற்கும் தீர்மானித்தார். அதன் பிரகாரம் இருபது பேராக மட்டுப்படுத்தப்பட்ட அமைச்சரவை 2001 செப்ரெம்பர் மாதம் 14ஆம் திகதி தகுதிகாண் அரசொன்றாகச்செயற்பட ஆரம்பித்தது. அத்தோடு, பொ.ஐ.முன்னணிக்குள் சிக்கலகள் அதிகரித்ததன் பலனாக அதுவரையில் ஸ்ரீல.சு.கட்சியின் பொதுச் செயலாளராக விருந்த எஸ்.பி.திஸநாயகா அப்பதவியிலிருந்து அகற்றப்பட்டு அப்பதவிக்கு மைத்திரிபால ஸ்ரீசேன நியமிக்கப்பட்டார். இதற்குச் சிலநாள்களுக்குப் பின்னர் எஸ்.பி.திஸநாயக, மஹிந்த விஜேசேகர, பந்துல குணவர்த்தனா மற்றும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உட்பட்ட கோஷ்டியினர் அரச தரப்பினின்றும் விலகிச் சென்று எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியில் இணைந்து கொண்டனர். இதன் காரணமாக தகுதிகாண் அரசு பாரதூரமான சிக்கலை எதிர்நோக்க நேரிட்டது. இதனைத் தொடர்ந்து பொ.ஐ. முன்னணியில் அமைச்சர் பதவியை வகித்துவந்த ஆறுமுகம் தொண்டமானும் அரசிலிருந்து விலகிக் கொண்டார். இதனால், பொ.ஐ.முன்னணியும் ஜே.வி.பி யும் இணைந்து நடத்திச் சென்ற தகுதிகாண் அரசு வீழ்ச்சியடைய நேர்ந்தது. கோடிக்கணக்கான பணத்தைக் கையூட்டாக வழங்கித் தமது தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை அரச தரப்பினின்றும் விலகவைத்ததன் மூலம் ஐ.தே.கட்சி தமது அரசைப் பதவியினின்றும் அகற்றிவிட்டதாகப் பொ.ஐ.முன்னணி குற்றஞ்சாட்டியது. இவ்விதம் லஞ்சம் வழங்கித் தமது அரசைக் கவிழ்த்த போதிலும், தொடர்ந்தும் தானே நாட்டின் ஜனாதிபதியாகச் செயற்படுவதாகத் தெரிவித்த ஜனாதிபதி, 2006ஆம் ஆண்டுவரை பதவி வகிக்கக் கூடியதான அரசொன்றை இவ்விதம் வஞ்சகமாகப் பதவியிலிருந்து இறக்கிய ஐ.தே.கட்சியைப் பழிக்குப் பழி வாங்குவதற்கான பொருத்தமான தருணத்துக்காக இதுவரையில் காத்திருந்தாரெனக் கருதமுடியும்.

அவ்விதம் பழிதீர்த்துக் கொள்ளவதற்கான திட்டங்களை அவர் படிப்படியாக வகுத்து வந்தார். 2003ஆம் ஆண்டில் அபிவிருத்தி லொத்தர் சபையைத் தனது கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்வதற்கு ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி மேற்கூறிய திட்டத்தின் முதற்படியாகும். அதன்பின்னர், 2003 நவம்பர் மாதம் 04ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று முக்கிய அமைச்சுக்களின் பொறுப்புக்களை ஜனாதிபதி தன்வசம் எடுத்துக் கொண்டார். இதன்காரணமாக, ரணிலின் அரசுடன் மோத ஆரம்பித்த ஜனாதிபதி, ஒரு தடவை நல்லிணக்க அரசொன்றை அமைக்கும் யோசனையை முன்வைத்தார். மற்றொரு சந்தர்ப்பத்தில் பாதுகாப்பு அமைச்சின் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்வது குறித்த யோசனையை முன்வைத்தார். அமைச்சுப் பதவிகள் சிலவற்றைத் தமது கட்சிக்காகப் பெற்று, ஜனாதிபதி கூட்டு அரசொன்றை நடைமுறைப்படுத்தும் ஆலோசனையை முன்வைததென்னவோ உண்மைதான். ஆனால், பிரதமர் ரணிலோ, ஜனாதிபதியின் ஆலோசனைகளில் எதனையும் ஏற்க மறுத்துவிட்டார். பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்புக்கள் இல்லாது தம்மால் சமாதான நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாதென்ற பிடிகொடுக்காத நிலைப்பாட்டை ரணில் உறுதியாகக் கைக்கொண்டார். அதன்பின்னர், பாதுகாப்பு அமைச்சின் ஒருசில பொறுப்புக்களைத் தமக்கு வழங்கி அந்த அமைச்சின் ஏனைய பொறுப்புக்களை ஜனாதிபதி தம்வசம் வைத்துக்கொள்வது குறித்து தாம் ஆட்சேபம் தெரிவிக்கப்போவதில்லை என மனோ - மலிக குழுவினூடாக ஜனாதிபதிக்கு ரணில தெரிவித்தார். ஆனால், அந்தவேளையில் ஜனாதிபதி ஜே.வி.பியுடன் கூட்டு உடன்படிக்கையொன்றை உருவாக்கிக்கொண்டுவிட்டார். பிரதமர் உரிய வேளையில் பொருத்தமான முடிவு மேற்கொள்ளாமையால்தான் இவ்வித முடிவுக்கு வர நேர்ந்ததாக ஜனாதிபதி காரணம் கற்பித்தார்.

## சர்வதேச அழுத்தம்

இதேவேளை, அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் கொலின் பவல் தொடக்கம் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் வரையான சர்வதேச உயர் மட்டத் தலைவர்கள் இவ்விரு அதிகார தரப்புக்களும் தம்மிடையேயான சிக்கல்களைப் பேச்சுமூலம் தீர்த்துக் கொள்ள முன்வரவேண்டுமென இரு தரப்பினர் மீதும் அழுத்தம் பிரயோகித்தனர். ஆனால், அவ்வித அழுத்தங்கள் யாவும் பயனளிக்கவில்லையெனத் தற்போது வெளிப்படையாகவே தெரிந்துவிட்டது.

இவ்வித அரசியல் குழப்பநிலையால் இவ்வாண்டு, நாட்டில் பொருளாதாரச் சிக்கல் மேன்மேலும் உயர்வடைய இடமேற்பட்டுள்ளது. சர்வதேச உதவி நிதி மூலம் நாட்டின் வறுமைநிலையை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட ஆயிரத்து 800 கோடி நிதி இடைநிறுத்தப்பட்டுள்ளது. இது ஒரு புறமிருக்க உதவிவழங்கும் நாடுகளால் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் தொடரும் மூன்றாண்டு காலத்துக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட 45 ஆயிரம் கோடிரூபா பெறுமதியான கடன் உதவி மற்றும் உதவி நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்கும் இயலாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

## தேர்தல் செலவு

நமது நாட்டில் நடைமுறையிலுள்ள அரசமைப்பு விதிகளின்படி ஆறு ஆண்டுகளுக்கு ஒருமுறையே பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால், 2000ஆம் ஆண்டிலிருந்து 2004 ஆம் ஆண்டின் ஆரம்பம் வரை நாடு மூன்று பொதுத்தேர்தல்களைச் சந்திக்க நேர்ந்துள்ளது. அவை தவிர மாகாண சபைத் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் என்பவையும் நடத்தப்படவேண்டியுள்ளன. இதன்மூலம் வருடாவருடம் தேர்தல் இடம்பெறும் நாடுகள் பட்டியலில் நம்நாடு முதலிடம் வகிக்க நேர்ந்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் நாட்டின் பிரதான அரசியல் கட்சிகளிரண்டும் ஜே.வி.பி. மற்றும் சிறுபான்மைக் கட்சிகளும் கூட தேசிய அரசியல் நோக்கைக் கைவிட்டுத் தம் குறுகிய அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் செயறபட விளைவதாகும். ஆனால், பொதுத் தேர்தலொன்றை நடத்தி முடிக்க சுமார் 70 கோடிரூபா வரை செலவாகிறது. இவ்வித பெரும் தொகை நிதியைச் செலவிடுவதால் நமது நாட்டின் பொருளாதார நிலை யில் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது.

கடைசியாகப் பதவியிலிருந்த ஐ.தே.முன்னணி அரசு நாட்டில் திறந்த பொருளாதாரகொள்கையை சிறப்பாக அமுல்படுத்துவதன் மூலம் நாட்டின் பொதுமக்களுக்கு உதவும் நோக்குடன் செயற்படமுனைந்தது. ஆனால், இதற்காக அரசு நீண்ட கால விரயத்தை மேற்கொண்டுள்ளதாகக் கருதஇயலும். நாட்டில் வேலை வாய்ப்பின்மை, வாழ்க்கைச் செலவு உயர்ச்சி ஆகிய பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு தவறிவிட்டது. திறைசேரி அதிகாரிகளின் கொள்ளை வகுப்புக்களால் நாட்டின் பொதுமக்கள் துன்பப்படநேர்ந்தது. புள்ளிவிவரங்கள் குறித்த வாதப் பிரதிவாதங்கள், பங்குச்சந்தை நிலைவரம், வட்டிவிகித வீழ்ச்சி, பணவீக்கம் ஆகிய விடயங்கள் எவை பற்றியும் நாட்டின் ஏழைப் பொதுமக்களுக்கு எவ்விதத் திலும் விளக்கிக்கூற இயலாது. பெறுமதிசேர் வரி விதிப்பு மூலம் பொருள்களின் விலை குறைவடையுமென அரசு கூறிவந்த போதிலும், அவை பற்றிய விரிவான விளக்கம் பெறமுடியவில்லை. கடந்த பொ.ஐ. முன்னணி அரசின் நிர்வாகத்தில் திறைசேரியின் தவறான அணுகுமுறை காரணமாக நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தை நோக்கிச் செல்வதாக விமர்சிக்கப்பட்டது. சிறப்பான நிர்வாகத்தின் மூலம் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதாக வாக்குறுதி வழங்கிப்பதவிக்கு வந்த ஐ.தே.முன்னணி அரசின் நிர்வாகத்திலும் பொதுமக்களின் சிரமங்களுக்கு திறைசேரியின் நலிவுற்ற நிர்வாகத் திறனே காரணமாகக் காட்டபபடுகிறது. அரசினால் பொறுப்பான பதவிகளுக்குத் தகுதியானவர்கள் நியமிக்கப்படாமைக்கான பாவத்தை பொதுமக்கள் தம்தலையில் சுமக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

## நியாயமா?

ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கான பூரண அதிகாரம் அரசமைப்பின் மூலம் கிட்டியிருப்பதால் அவர் நாடாளுமன்றத்தைக் கலைத்துள்ளார். அவரது அந்த நடவடிக்கை சட்டபூர்வமானதே. எந்த

**வியெஸ்ரி**

வொரு நீதிமன்றமும் அது குறித்துக் கேள்வி எழுப்ப முடியாது. மேற்கூறிய வாதம் பேச்சளவில் சரியேயாயினும், நாடு சுதந்திரமடைந்த பின்னர் முதற்றடவையாக நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை கொண்டிருந்த ஒரு அரசை இவ்விதம் கலைப்பதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட முடிவு நியாயமானதுதானா என்பதைக் காலம்தான் தீர்மானிக்க முடியும்.


இந்தவகையில், இந்நாட்டில் முன்னர் பல சந்தர்ப்பங்களில் அவ்வேளைகளில் பதவியிலிருந்த அரசியல் தலைவர்கள் மேற்கொண்ட முடிவுகள் நாட்டின் அரசியல் வரலாற்றில் முன்னுதாரணங்களாக அமைந்தன. ஆதலால், முக்கியமான அரசியல் தீர்மானமொன்றை மேற்கொள்ளும் வேளையில் சம்பந்தப்பட்ட அரசியல் தலைவர்கள் ஒன்றுக்குப் பல தடவை சிந்தித்தே தமது முடிவினை மேற்கொளளல் அவசியமாகும். 1975ஆம் ஆண்டில் பிரதமராகவிருந்த சிறிமாவோ தமது அரசின் பதவிக் காலத்தை இரண்டு ஆண்டுகள் நீடித்துக்கொண்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மடியில் முத்தாக 23 - 02 - 1982

மண்ணில் வித்தாக 19 - 02 - 2001



# நிஷாந்தி துரைரத்தினம்
## (லெப். புவிதா)

புவிதா எனப் பெயரெடுத்த புண்ணியவதியே!
நீ புகழ் பூத்தாய் பூமியிலே சிறிது காலம்
ஆண்டுகள் மூன்று கடந்தாலும்
ஆறாது உன் பிரிவுத்துயர்
கண்ணீர்க் கடலிலே கரைதேடும் ஓடங்களாய்
பிரிந்து விட்ட உன்னைத்தேடி பேதலித்து நிற்கின்றோம.

*இன்று (19.02.2004) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற மதியபோசன நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.*

*சுன்னாகம் மேற்கு,*
*சுன்னாகம்.* (28563)(35-14) -குடும்பத்தினர்.

## ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 16-01-1962

ஆண்டவன் அடியில் 01-03-2003



### அமரர் மாணிக்கம் பஞ்சாட்சரமூர்த்தி B.Sc.Dip.in.Ed.

(ஆசிரியர், வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி)

*உருண்டோடி விட்டதப்பா – ஓராண்டு*
*உங்கள் நினைவுகளோடு எம் – இதயத்தில்*
*உங்கள் குரல்கள் ஒலித்துக் கொண்டிருக்குதப்பா – தினந்தினமும்.*

இன்று (19.02.2004) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்கள்.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி. (28564) (26-14-18-35)

## இளங்கலைஞர் மன்ற இசைவிழா 21ஆம் திகதி ஆரம்பம்

அரியாலை,பெப்.19

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடத்தும் 2004ஆம் ஆண்டுக்கான இசைவிழா நாளை மறுதினம் சனிக் கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10நாள்கள் நடைபெறவுள்ளது.

விழா தினமும் காலையில் ஆரம்பமாகி இரவு வரை தொடர்ந்து பத்துத தினங்கள் நடைபெறும் என்று மன்றப் பொருளாளர் சு.பாலசண்முக நாதன் தெரிவித்தார்.

நூற்றுக்கும் மேற்பட்ட கலைஞர்கள் இந்த இசைவிழாவில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

விழாவுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஐ-17)


க.பொ.த.உயர்தரத்தின் பின்னர் உங்கள் எதிர்காலத்தைத் திட்டமிடுங்கள்

**Brindavan College**

Formerly
**National First Grade College**

**இந்தியாவின் பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைந்தது.**

1. 41 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களுடன் சேர்ந்து ஸ்ரீலங்காவைச் சேர்ந்த 300 மாணவர்கள் கற்கை நெறிகளை மேற்கொண்டுள்ளனர்.
2. கடந்த 10 ஆண்டுகள் காலத்தில் இக் கல்லூரியில் கற்கைநெறிகளை மேற் கொண்ட ஸ்ரீலங்காவைச் சேர்ந்த 250 மாணவர்கள் பெங்களூர் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றுள்ளனர்.
3. 2004 பெப்ரவரி 29ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்வோர் பதிவுக் கட்டண விதிவிலக்குடன் புலமைப்பரிசில், கட்டணச் சலுகை, தவணைக் கட்டணச் சலுகை ஆகியவற்றுக்கு உரித்துடையவராவர்.
4. 2004 க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களும் பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.


*மேலதிக விவரங்களுக்கு:*
இணையத்தளம்
www.nfg college.Com.
மின்னஞ்சல்:
nfgc@bgl.vsnl.net.in
கம்பெனி செக்ரற்றேரியல் சர்விசஸ் பிறைவேட் லிமிட்டெட்
Company Secretarial Services Private Ltd
285, C - 1/1, ஸ்ரான்லி திலகரத்ன மாவத்தை, நுகேகொட
தொலைபேசி - 011 - 2854438
(சி-33233) (35-14)







## இரண்டாம் ஆண்டு நினைவாக



மலர்வு 15.12.1946

உதிர்வு 12.03.2002

காரைநகர் அமரர்

### வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

*(கணக்குப்பதிவாளர், வலயக்கல்விப்பணிமனை, கிளிநொச்சி)*

திதி: சதுர்த்தசி.

*ஆண்டுகள் இரண்டு நிறைவில் உங்களை நினைவு கூருகின்றோம்.*

*29/21, உடையார் லேன்,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.* (28603)(35-14-39) -குடும்பத்தினர்.

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 17 - 12 - 1947

மறைவு 15 - 02 - 1999



### அமரர் தம்பையா குகதாசன்

(இளைப்பாறிய ஆசிரியர், கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்)

திதி - 19.02.2004

ஆண்டுகள் ஓர் ஐந்து ஆனாலும்
நினைவுகள் என்றும் நிலைத்து நிற்கும்!
பாசங்கள் மனதில் இருந்ததனால்
பிரிவுகள் என்பதை நினைத்ததில்லை!
ஓம் சாந்தி!

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம். (28593)(35-14-39) துயருடன் மனைவி

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 26 - 12 - 1945

மறைவு 20 - 01 - 2004



அமரர்

### வேலுப்பிள்ளை பாலசிங்கம்

*நாம் பாலகர்கள் அல்ல ஆனால்,*
*பாலகர்போல் எம்மைப் பாதுகாத்துப்*
*பார்க்கும் இடமெல்லாம் காட்சிதந்து*
*பயம் அற்ற வாழ்வு தந்தாய்!*
*உனை நம்பியே சொந்த மண்ணில் மீளக்குடியேறினோம்*
*உன்நினைவுடனே எம்காலம் கழியும்*
*இந்த நாளில் உங்கள் ஆத்மசாந்திக்காக*
*இறைவனை இறைஞ்சுகின்றோம் ஐயா.*

*கோவிலாக்கண்டி மத்தி,*
*கைதடி.* (28546)(26-14-18-35) சகோதரர்களும், மைத்துனரும்.

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

மலர்வு 17 - 03 - 1942

உதிர்வு 20 - 01 - 2004



செல்வி

### தனலக்ஷ்மி குமாரசாமி

எம் குலவிளக்கின் இறுதிக்கிரியைகளின்போது வேண்டிய உதவிகளைச் செய்து தந்த அன்புள்ளங்கள் அனைவருக்கும் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலமும் தொலைபேசி மூலமும் எமக்கு ஆறுதல் தந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எம் இருகரம் கூப்பிய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (19.02.2004) வியாழக்கிழமை நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

**திருமதி நகுலேஸ்வரி கனகசபை,**
**திருமதி யோகராசா இந்துமதி,**
*'பிரசாந்தி பவனம்', ஆத்தியடி,*
*பருத்தித்துறை.*

அன்பு அக்கா குடும்பத்தினர்,
அண்ணன்மார் குடும்பத்தினர்.

(28525) (26-14-18-35)

# கல்விச்சாலைக் காட்சிகள்



ஏழாலை மகாவித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற உயர்தர மாணவர் ஒன்று கூடலில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் றெ.இருதயநாதன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் அதிபர் அ.நடராஜசுந்தரம் நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: தெல்லிப்பழை செய்தியாளர்)*



மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழாவில் அதிபர் செ.பேரின்பநாதனுடன் ஆசிரியர்கள் மற்றும் புதிய மாணவர்கள் காணப்படுகின்றனர்.

*(படம்: சாவகச்சேரி செய்தியாளர்)*



வல்வெட்டி விநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்ட விருந்தினர்களையே படத்தில் காண்கிறீர்கள். அதிபர் சி.சிவச்செல்வம், பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், இலங்கை வானொலியைச் சேர்ந்த ஜோக்கிம் பெர்னாண்டோ ஆகியோரும் படத்தில் உள்ளனர். (ஐ)



புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் 'துலக்கம்' சஞ்சிகையின் வெளியீட்டு விழாவில் அதிபர் க.தர்மகுணசிங்கம் வெளியீட்டுரை ஆற்றுவதையும், விருந்தினர்களான தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்களான க.தவராசா, சோ.தில்லைநாதன், சி.மகேஸ்வரன் மற்றும் இ.கிருஸ்ணகுமார் ஆகியோர் மேடையில் அமர்ந்துள்ளதையும் படத்தில் காணலாம்.

*(படம்: மண்டைதீவு செய்தியாளர்)*



மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய இல்லமெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரிப் பீடாதிபதி தி.கமலநாதன், உபபீடாதிபதி எஸ்.சத்தியேந்திரம்பிள்ளை ஆகியோரையும் அதிபர் கு.சிவானந்தம் மங்கள விளக்கேற்றுவதையும் படத்தில் காணலாம். (ஐ)



யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் மன்றம் நடத்திய பொன்விழா மலர் வெளியீட்டு விழாவில் எழுத்தாளரும் முன்னாள் அதிபருமான சி.சிவசரவணபவன் (சிற்பி) மலரை வெளியிட்டு வைப்பதைப் படத்தில் காணலாம். (ஐ)



குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளை மங்களவிளக்கேற்றி வைபவத்தை ஆரம்பித்து வைப்பதனையும் அருகில் பாடசாலை அதிபர் க. யோகநாதன், வடமராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் கி.தாயகன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

*(படம்: வடமராட்சி கிழக்கு செய்தியாளர்)*



வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையின் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட புதிய மாணவர்களையும், ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

*(படம்: சண்டிலிப்பாய் செய்தியாளர்)*

## நலன்புரிச் சங்க ஒன்றுகூடல்

தென்மராட்சி, பெப்.19

தென்மராட்சி பிரதேச செயலக நலன்புரிச் சங்க ஒன்றுகூடல் எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு சங்கத் தலைவர் செ.ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலகத்தில் கடமையாற்றி இடமாற்றம்பெற்ற, இளைப்பாறிய உத்தியோகத்தர்களுக்கு பிரிவுபசார வைபவமும் நடைபெறுமெனச் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ-8-117)

## கூட்டுறவுச் சங்கத்துக்கு உழவு இயந்திரம்

அரியாலை,பெப்.19

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், சங்கத்தின் தேவைக்கென புதிய இருசக்கர உழவு இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளது.

சங்கத்தின் தேவைகளுக்குப் பயன்படுத்தபடவுள்ள இந்த உழவு இயந்திரத்தை தனியாரும் வாடகைக்குப் பெற்றுக்கொள்ள முடியும் என்று சங்கத் தலைவர் சூ.சிறில் தெரிவித்தார். (ஐ-17)

## விஞ்ஞான பாட ஆசிரியருக்கு ஆய்வுக்கூட்டம்

வலிகாமம்தெற்கு,பெப்.19

விஞ்ஞான பாடத்தில் பாடசாலை மட்டக்கணிப்பீடு தொடர்பாக வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள விஞ்ஞானபாட ஆசிரியர்களுக்கான ஆய்வுக் கூட்டமொன்று நடைபெற உள்ளது.

பாடசாலைகளில் தரம் 10, 11இல விஞ்ஞான பாடம் கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் இதில் கலந்துகொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வலிகாமம் கல்வி வலய கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி எஸ்.நாகராசா தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் இந்த ஆய்வுக் கூட்டம் நடைபெற உள்ளது. (ஐ-152)

## புடைவை விற்பனை நிலையம் திறப்பு

கைதடி,பெப்.19

தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் கைதடிச் சந்தியில் புடைவை விற்பனை நிலையம் ஒன்று கடந்த 9ஆம் திகதி திங்கட்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவர் சி.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விற்பனை நிலையத்தை தென்மராட்சிப் பிரதேச செயலாளர் எஸ்.ஸ்ரீநிவாசன் திறந்துவைத்தார். இவ்வைபவத்தில் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்டக் கூட்டுறவுப் பொறுப்பாளர் புஸ்பனும் கலந்துகொண்டார். (ஐ-75)

## ஆடியபாத வீதி திருத்தப்படுகிறது

யாழ்ப்பாணம்,பெப்.19

மிகமோசமாகச் சேதமடைந்து காணப்பட்ட ஆடியபாதம் வீதியின் ஒருபகுதி தற்போது துரிதகதியில் புனரமைக்கப்பட்டு வருகிறது.

நல்லூர் பொதுச்சந்தையில் இருந்து நாயன்மார்கட்டு வரையான ஆடியபாத வீதியே தார் ஊற்றி புனரமைக்கப்படுகிறது. சுமார் பத்து ஆண்டுகளின் பின் தற்போதுதான் இந்த வீதி முழுஅளவில் திருத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-180)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் பெரியபுராணச் சொற்பொழிவு

வடமராட்சி,பெப்.19

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தப்பட்டு வரும் வாராந்த நிகழ்வுத் தொடர் நாளை திகதி வெளளிக்கிழமை பேரவைத் தலைவர் க.அருள்லிங்கம் தலைமை யில் நடைபெறும்.

இந்நிகழ்வில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விரிவுரையாளர் அ.குமாரவேல் 'பெரியபுராணம்' என்ற பொருளில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

அறிமுகவுரையை சிறுப்பிட்டி கிராம உத்தியோகத்தர் சு.ஸ்ரீஸ்கந்தராசா வழங்குவார். (ஐ-173)

# சுதந்திரக் கூட்டமைப்பு வென்றால் யுத்தநிறுத்த ஒப்பந்தத்துக்கு ஆபத்து!

## அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் எச்சரிக்கை

கொழும்பு.பெப்.19

ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான யுத்தநிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் சுதந்திரக்கட்சிக்கும், ஜே.வி.பிக்குமிடையே முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளே கடைப்பிடிக்கப்படுகின்றன. இந்தநிலையில், ஏப்ரல் 2ஆம் திகதி பொதுத்தேர்தலில் இக் கூட்டமைப்பு வெற்றி பெற்றால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் பெரும் சிக்கலுக்கு உள்ளாகும்.

அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டில் இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார். அரச பேச்சாளர் அலுவலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் அவா தொடர்ந்து தகவல் தருகையில் கூறியதாவது:-

புலிகளுடனான பேச்சு இடை நிறுததப்பட்ட நாள்முதல் யுத்தநிறுத்தம் செயலிழந்துவிட்டதென ஜே.வி.பி. கூறுகின்றது. யுத்தநிறுத்தம் அமுலில் இல்லாவிட்டால் எப்படிப் புலிகளுடன் பேச்சைத் தொடருவது?

புலிகள் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வரைபை முன்வைத்த போது சுதந்திரக்கட்சி 14 பக்க அறிக்கையொன்றை விடுத்து அந்த வரைபை ஏற்றுக்கொள்ள முடியாதெனத் தெரிவித்தது. இப்போது புலிகளின் இடைக்கால கட்டமைப்பு வரைபை அடிப்படையாக வைத்து பேச்சைத்தொடரலாம் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டபோது ஜனாதிபதி பி.பி.ஸி. வானொலிக்கு அளித்த பேட்டியில், யுத்தநிறுத்த ஒப்பந்தம் அடிப்படையில்லாதது எனத் தெரிவித்தார். இந்தநிலையில், இவர்கள் ஆட்சிக்கு வந்தால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் இல்லாத நிலையில் புலிகளுடன் பேச்சை ஆரம்பிப்பது எப்படி?

சு.க. - ஜே.வி.பி. கூட்டமைப்பு ஆட்சியைக் கைப்பற்றுவதை நோக்காகக் கொண்ட ஒரு கூட்டமைப்பே தவிர, கொள்கை இணக்கப்பாட்டைக் கொண்ட கூட்டமைப்பு அல்ல. இதனை காரணமாகத்தான் நாடாளுமன்றம், மாகாணசபைகள், உள்ளூராட்சிச் சபைகளைச் சேர்ந்த சு.க.மக்கள் பிரதிநிதிகள் நாளாந்தம் அலரிமாளிகைக்கு வந்து பிரதமரின் தலைமையிலான ஐ.தே.முன்னணியில் இணைந்து கொள்கின்றனர். இறுதியில் அடிமட்ட மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்திய ஜனநாயகக் கட்சியான சுதந்திரக்கட்சி அழிந்தொழிந்து போகும். இது கவலைக்குரிய விடயமாகும்.

இவ்வாறு அவர் சொன்னார். (ஓ-4)

---

### அடிக்கடி...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டார். அதனை முன்னுதாரணமாகக் கொண்டு 1982இல் ஜனாதிபதியாக விருந்த ஜே.ஆர்., ஐ.தே. கட்சி அரசின் நிர்வாகம் இடம்பெற்ற வேளையில் நாடாளுமன்றத்தின் ஆயுள் காலத்தை மேலும் ஆறு ஆண்டுகள் நீடிக்கும் வகையில் பொதுஜன அபிப்பிராய வாக்கெடுப்பின் மூலம் நடவடிக்கை மேற்கொண்டார். இந்த வகையில் இவற்றை முன்னுதாரணங்களாகக் கொள்வது போன்று, தற்போதைய ஜனாதிபதி சந்திரிகாவும் இரகசியமாக இரண்டாவது பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டதாகக் கூறித் தனது ஜனாதிபதிப் பதவிக் காலத்தை நீடிக்கச்செய்ய முயற்சிப்பதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டி வருகின்றனர். இந்தவொரு முன்னுதாரண நடவடிக்கை எதிர்காலத்தில் பலதரப்பட்ட அரசியல் அதிகார மையங்களைச் சேர்ந்த அரசியல் தலைவர்களையும் இவ்வித தவறான அணுகுமுறையைப் பின்பற்றத் தூண்டுவதாய் அமையக் கூடும். இவ்விதமான கடந்தகாலச் சம்பவங்களின் உதாரணங்களை ஆராய்ந்து பார்த்து, அண்மையில் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக்கொண்டிருந்த நிலையிலும் ஐ.தே. முன்னணி அரசைக் கலைத்த ஜனாதிபதியின் செயற்பாடு குறித்து பொதுமக்கள் மதிப்பீடு செய்து பார்த்தல் அவசியமாகும். இவ் விடயத்தில் எதிர்காலத்திலும் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் இவ்வித செயற்பாடுகள் இடம்பெற இடமுண்டென்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ★

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை

அன்புடையீர்!

எமது குடும்ப ஒளிவிளக்கு அமரர் கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை அவர்களது பிரிவு குறித்த அந்தியேட்டி சபிண்டீகரண நிகழ்வுகள் இன்று (19-02-2004) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை தனிப்பட்ட அறிவித்தலாக ஏற்று அனைவரையும் சமுகந்தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்தாய்,
அல்வாய. (சி-33337)(21-14-16) குடும்பத்தினர்.

---

## ஞானியார் கல்விக்கழகம்

இம்பர்சிட்டி - பருத்தித்துறை நடத்தும்

### பாராட்டு விழா

வடமராட்சிப் பிரதேசத்தில் இருந்து 2003 ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற 177 மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு.

இடம்: யா/ வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி மண்டபம்
காலம்: 2004-02-22 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி (புதியநேரம்)

தலைவர்: திரு.வே.நவரத்தினராசா (தலைவர், ஞானியார் கல்விக்கழகம்)

பிரதமவிருந்தினர்: திரு.மு.திருநாவுக்கரசு (ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி)

சிறப்பு விருந்தினர்கள்: திரு. ஆ.சிவசுவாமி (பிரதேச செயலர், பருத்தித்துறை)
திரு. ஆ.இராசேந்திரம் (பிரதிக்கல்விப் பணிப்பாளர், கல்வி அபிவிருத்தி, வடமராட்சி வலயம்)
திரு.கி.தாயகன் (வடமராட்சி கல்விக் கழகப் பொறுப்பாளர்)

இந்நிகழ்வில் கலந்து எமது வளரும் பயிர்களுக்கு உரமூட்டுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இம்பர்சிட்டி,
பருத்தித்துறை. ~ ஞானியார் கல்விக் கழகம்.

குறிப்பு: மாணவர்களுக்குத் தனித்தனியாக அனுப்பிய அழைப்பிதழ்கள் கிடைக்கத் தவறும் பட்சத்தில் மேற்படி பரீட்சையில் சித்தியெய்திய 177 வடமராட்சி மாணவர்களையும் மற்றும் பெற்றோரையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

~ ஞானியார் கல்விக் கழகம்.

இம்பர்சிட்டி, பருத்தித்துறை. (28616) (14-16)

---

### யா/வட்டு இந்துக்கல்லூரி

*முறைசாராக்கல்வி – கணனிப்பயிற்சி நெறி*

**இப்பயிற்சி நெறியை மேற்கொள்ள விரும்பும் பயிற்சியாளர்கள் காரியாலயத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 21.02.2004 சனிக்கிழமை காலை 10.00மணிக்கு நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்கு சமுகந் தரும்படி வேண்டுகிறேன்.**

*யா/வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, சித்தன்கேணி.* (28597)(37-14-16) -அதிபர்-

---

## கண்ணீர் அஞ்சலி

யாழ்/புங்குடுதீவு மகா வித்தியாலய முன்னாள் அதிபா

**பண்டிதர் வீ.வ.நல்லதம்பி** அவர்கள்

கனடாவில் காலமானார். அவர்களின் மறைவையிட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திககின்றோம.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
**யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்**
(28620)(37-14-16) புங்குடுதீவு.

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம் 29 - 03 - 1939



மறைவு 19 - 01 - 2004

### திருமதி கந்தசாமி புவனேஸ்வரி

(கண்டு)

அன்புக்கோர் அணிகலனாய் அகிலத்தில் வாழ்ந்து
பண்புக்கோர் உறைவிடமாய்த் திகழ்ந்த அன்னையே
ஆத்மா சாந்தியடைய காளித்தாயை வேண்டுகின்றோம்!

நாளை (20-02-2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அன்னையின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் மதியபோசனத்திலும் பங்குகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.* (28613) (14-16) - குடும்பத்தினர்.

---

## ஓராண்டு நீங்காத நினைவலைகள்

மண்ணுலகில் 30 - 01 - 1939



விண்ணுலகில் 19 - 02 - 2003

### அமரர் கார்த்திகேசு சந்திரராசா

விண்ணும் மண்ணும் விளங்க அளந்த
கண்ணன் கோயில் கொள் கவின்பொன் னாலையில்
உயர்குடிப் பிறந்து உத்தமனாகி
அயர்விலாக் கல்வியில் அறிவிற் சிறந்தும்
காண இனியனாய்க் கணிப்பில் பெரியனாய்
தேனின் உரைசேர் சொற்பொழிவாளனாய்
உதவி அரசாங்க உத்தம அதிபராய்
பதவி வகித்தும் பாங்குற வாழ்ந்தும்
மக்களை, மண்ணை, மாண்புறும் அறிஞரை
மிக்கநே சித்த மேன்மையி னாலே
நாடெலாம் போற்ற நாளும் வெளிவரும்
ஏடெலாம் போற்றி இனிதா எழுத
தானொரு பொருளாய் தாங்கியே நின்ற
சந்திர ராசனாம் தலைவனை
இன்றும் மறந்திலோம் என்றும் மறவோமே!

பறாளாய் வீதி,
சுழிபுரம். (28605) (40-14-16) - குடும்பத்தினர்.

# ஸ்ரீ ல.சு.கட்சி - ஜே.வி.பி. கூட்டணிக்கு ஆதரவளிக்க தமிழ்க் கட்சிகள் கூட்டணி

## ஈ.பி.டி.பி. தலைமையில் அமைக்க முயற்சி

யாழ்ப்பாணம்,பெப்.19

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் ஸ்ரீ.ல.சு.க. - ஜே.வி.பி. கூட்டணியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஆதரவளிக்கும நோக்குடன் தமிழ்க்கட்சிகளின் கூட்டணி ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈ.பி.டி.பி. கட்சி ஈடுபட்டுள்ளது.

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத தேர்தலில் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது குறித்து, புளொட், ஈரோஸ (சங்கர் அணி), ஈ.பி.ஆர்.எல்.எவ். (வரதர் அணி) போன்ற தமிழ்க்கட்சிகளுடன் தாம் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர் என ஈ.பி.டி.பியின் சிரேஷ்ட உறுப்பினர் எஸ்.தவராஜா தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜே.வி.பி. - ஸ்ரீ.ல.சு.க. கூட்டமைப்பு அரசமைத்தால் அதனை ஆதரிக்கும். எமது கூட்டமைப்பின் கீழ் எந்தக்கட்சிகள் போட்டியிடும் என்பது தொடர்பாக எமது கட்சியின் செயலாளர் நாயகம டக்ளஸ் தேவானந்தா நாளை வெள்ளிக்கிழமை தீர்மானிப்பார். ஜே.வி.பி. - ஸ்ரீ.ல.சு.க. கூட்டணி அரசுக்கு ஈ.பி.டி.பி. தனது ஆதரவை வெளியிலிருந்து வழங்குவதற்கும் தேவானந்தா தீர்மானித்துள்ளார்.

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணபதற்காக விடுதலைப் புலிகள் உட்பட அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சுக்களை நடத்தவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதனாலேயே அக்கூட்டமைப்பை ஆதரிக்கவுள்ளோம்.

"அதிகாரத்திலிருக்கும் அரசுக்கும், புலிகளுக்குமிடையிலேயே யுத்த நிறுத்த உடன்படிக்கை அமையவேண்டும். ஆனால், சமாதானப் பேச்சுக்களில் அனைத்து அரசியல் கட்சிகளும் உள்ளடக்கப்படவேண்டும் என்றே ஈ.பி.டி.பி. கோருகிறது" - என்று கொழும்பிலிருந்து வெளியாகும் 'த ஐலண்ட்' பத்திரிகைக்கு முன்னாள் எம்பி. தவராஜா தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான கூட்டணி, கொழும்பு மற்றும் வடக்கு - கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிடும். கடந்த தடவையும் நாம் கொழும்பில் போட்டியிட்டோம். இம்முறையும் போட்டியிடக்கூடும்.

வடக்கு - கிழக்கில் ஜனநாயகம் மீளமைக்கப்படவேண்டும் என்பது இத தேர்தலில் முக்கியமான எமது சுலோகமாக இருக்கும். தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் மட்டுமல்லர் மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட தமிழ்க்குழுக்களும் உள்ளன. இதனை இந்தத் தேர்தல்மூலம் சர்வதேசத்துக்குக் காட்டவுள்ளோம் - இப்படி அவர் தெரிவித்தார். (ம-து-9)

### துர்க்காபுரம் மகளிர் இல்ல ஆண்டு விழா

வலி.வடக்கு,பெப்.19

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 22ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு ஸ்ரீதுர்க்காதேவி அன்னபூரணி மண்டபத்தில் கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் இடம்பெறவுள்ளன.

பிரதம விருந்தினராக முனனாள் மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கமும் சிறப்புவிருந்தினராக யாழ். மாவட்ட பதில் நீதிபதி மு.திருநாவுகரசுவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

வரவேற்புரையை செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகனும் ஆசியுரைகளை சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்களும் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரமும் நிகழ்த்துவர். (ம-86)

### சந்தை அமைக்கக் கோரிக்கை

வேலணை,பெப்.19

வேலணை வங்களாவடி சந்திப் பகுதியில் பொதுச்சந்தை ஒன்று அமைக்கப்படவேண்டும் என அப்பகுதி பொது மக்கள் கோரிவருகின்றனர்.

இந்தப் பகுதி மக்கள் மரக்கறி வகைகளைக் குறிப்பிட்ட சந்தையில உள்ள கடைகளிலும் கடலுணவு வகைகளை வேலணை துறையூர் சந்தையிலும் பெற்று வருகின்றனர்.

இதனால், மரக்கறி மற்றும் கடலுணவு வகைகளை ஒரேயிடத்தில் பெறக்கூடியதாக வேலணை வங்களாவடிச் சநதியில் பொதுச்சந்தை ஒன்று அமைக்கப்படவேண்டும் எனக் கோரப்படுகிறது.

# கோழிப்பண்ணைக் கழிவுகளை அகற்ற மாநகரசபை நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.19

கோழிப்பண்ணைகளில் இருந்து நேரடியாகக் கழிவுகளை அகற்றுவதற்கு யாழ்.மாநகரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பாகக் கோழிப்பண்ணையாளர்களுடன் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாசன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார்.

பண்ணை வைத்திருப்பவர்கள் பலர் கோழிகளின் எச்சங்கள், இறைச்சிக்காக வெட்டப்பட்ட கழிவுகள் எனபவற்றை வீதிகளில் போட்டு சுகாதாரத்தினை சீர்கெடச் செய்வது குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டது.

கோழிகளின் கழிவுகளை வீதிகளில் போடுவதனால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகள் பற்றியும் பண்ணையாளர்களுக்கு எடுத்துக்கூறப்பட்டது.

கோழிக் கழிவுகளை மாநகர சபையினால் பெற்று உரிய இடத்தில் அவற்றைக் கொட்டுவதற்கும் அதற்கென பை ஒன்றுக்கு 25 ரூபா கட்டணம் அறவிடுவதற்கும் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது.

அடுத்தமாதம் முதலாம் திகதி முதல் இந்த நடைமுறை அமுலுக்கு வரும் என்று யாழ்.மாநகரசபை வைத்திய அதிகாரி தெரிவித்தார். (ம-6)

# பாம்பைப் பிடித்து விளையாடியவர் அதனால் தீண்டப்பட்டார்!

## சாவகச்சேரி நகரப் பகுதியில் சம்பவம்

தென்மராட்சி,பெப்.19

விஷப் பாம்பினைப் பிடித்து தோளில் போட்டு வேடிக்கை காட்டியவர் பாம்பினால் கடியுண்ட சம்பவம் கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி நகரப் பகுதியில் இடம்பெற்றது.

நகரப் பகுதியில் உள்ள வங்கியொன்றின் உத்தியோகத்தர்களின் வாகன பாதுகாப்பு நிலையத்தினுள் நுழைந்த செட்டிநாகம் பாம்பினை ஊழியர்கள் வெளியே துரத்தினர். அப்போது மதுபோதையில் காணப்பட்ட நபர் ஒருவர் அந்தப் பாம்பினை இரு கைகளாலும் பிடித்து தோளில் போட்டு நடனமாடியுள்ளார். அப்போது பாம்பு அவரைத் தீண்டியது.

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த இராசதுரை ஆனந்தராசா (வயது 45) என்பவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ம-117)

### வவுனியாவில் வேவு விமானம் நோட்டம்

வவுனியா,பெப்.19

ஆள்கள் இல்லாத வேவு விமானம் ஒன்று நேற்றுமுன்தினம் வவுனியா வான்பரப்பில் நோட்டமிட்டுள்ளது.

அன்றைய தினம் காலை 9மணியில் இருந்து சுமார் ஒரு மணிநேரம் நோட்டமிட்ட இந்த விமானம் இரவும் 9மணியளவில் மீண்டும் நோட்டமிட்டுச் சென்றுள்ளது.

இரு தடவையும் வேவு விமானம் நோட்டமிட்டுச் சென்றவுடன் உலங்குவானூர்தி ஒன்றும் பறந்து சென்றதாக அங்குள்ள மக்கள் தெரிவித்துள்ளனர். (ம-10-167)



சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வெள்ளி விழாவையொட்டி 'வணிகமலர்' நூல் வெளியீட்டின் போது தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், சங்கத் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தத்திடமிருந்து மலரின் முதற்பிரதியைப் பெறுவதையும் முன்னாள் தலைவர் பீ.என்.சற்குணராசா அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். (ஐ-117)

# தடைசெய்யப்பட்ட நிறமூட்டியைப் பயன்படுத்தி தேன்முறுக்கு தயாரித்தவருக்கு அபராதம்

வலி.தென்மேற்கு,பெப்.19

தடைசெய்யப்பட்ட - பாவனைக்கு உதவாத - நிறமூட்டியைப் (கலரிங்) பயன்படுத்தி தேன்முறுக்குத் தயாரித்து விற்ற வியாபாரி ஒருவருக்கு ஊர்காவற்றுறை நீதிமன்று 4 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின்போது இந்த வியாபாரி விற்ற தேன்முறுக்குக்ளைப் பரிசோதித்த யாழ். மாவட்ட உணவு - மருந்துப் பரிசோதகர்கள் அதில் தடைசெய்யப்பட்ட நிறமூட்டி பயன்படுத்தப்பட்டிருப்பதை உறுதிப்படுத்தினர்.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் இது குறித்து வழக்குத் தாக்கல் செய்தனர். வழக்கை விசாரித்த நீதிவான் சம்பந்தப்பட்ட வியாபாரிக்கு அபராதம் விதித்ததுடன், இனி இப்படிச் செய்தால் கடும் தண்டனை விதிக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுத்தார். (ம-135)

# மிருசுவில் வடக்கில் பொதுமக்களின் விவரம் திரட்டுகின்றது இராணுவம்

யாழ்ப்பாணம்,பெப்.19

மிருசுவில் வடக்குப் பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் விவரங்களைப் படையினர் குடும்பம் குடும்பமாகத் திரட்டி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

போராளிகள் குடும்பம், மாவீரர் குடும்பம் மற்றும் உத்தியோகத்தர்கள் என்ற ரீதியில் வீடு வீடாகச் சென்று படையினர் விவரங்களைச் சேகரிக்கின்றனர் எனவும் கூறப்படுகின்றது.

எதற்காக இந்த விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன என்ற விவரத்தை இராணுவத்தினர் பொதுமக்களுக்குத் தெரிவிக்கவில்லை.

அப்பகுதிப் பாடசாலைகளிலும் இவ்வாறு விவரங்கள் சேகரிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பாக மிருசுவில் பகுதி மக்கள் கொடிகாமம் அரசியற்துறையினரிடம் முறையிட்டுள்ளனர்.

இதேவேளை -

தென்மராட்சியில் உள்ள அரச அலுவலகங்களில் கடமை புரியும் ஊழியர்களின் விவரங்களையும் இராணுவத்தினர் திரட்டி வருகின்றனர். அலுவலகங்களிற்குச் செல்லும் இராணுவத்தினர் அலுவலர்களின் பெயர், முகவரி, வயது என்பவற்றைப் பெற்றுச் செல்கின்றனர்.

தேர்தலுக்கு முன்னதாக விவரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு பலாலி படைத் தலைமையகம் கட்டளை இட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இராணுவத்தினர், பிரதேச செயலகம் பிரதேச சபை, நகரசபை, தொலைத்தொடர்பகம், வர்த்தக நிலையங்கள் என்பவற்றிலும் விவரங்களைப் பெற்று வருவதாகக் கூறப்படுகிறது.(ம-6-74)

# மூத்த பொலீஸ் அதிகாரிகளுக்கு மனித உரிமைகள் பற்றிப் பட்டறை

யாழ்ப்பாணம்,பெப்.19

காங்கேசன்துறையில் உள்ள பொலீஸ் அதிகாரிகளுக்கு மனித உரிமைகள் தொடர்பாக நான்கு நாள் பயிற்சிப்பட்டறை ஒன்று நடத்தப்படவுள்ளது. மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஏற்பாட்டில் இந்தப் பட்டறை இடம்பெறும்.

இந்த மாதம் 25, 26, 27, 28ஆம் திகதிகளில் இந்தப் பயிற்சிப் பட்டறை காங்கேசன்துறைப் பொலீஸ் நிலையத்தில் நடைபெறும்.

மனித உரிமைச்சட்டம், சிறுவர் உரிமைச்சட்டம், குற்றத் தடுப்புச்சட்டம், சமாதானவழி முறைச்சட்டம் என்பன தொடர்பாகப் பட்டறையில் பொலீஸாருக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சிப் பட்டறையினை வழங்குவதற்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பு அலுவலகத்தில் இருந்து மூன்று சட்டத்தரணிகள் வருகைதரவுள்ளனர். (ம-7)

# சு.க. - ஜே.வி.பி. கூட்டமைப்பினால் நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படும்!

## ஐ.தே.கவில் இணைந்த மா.ச.முன்னாள் தலைவர் கூறுகிறார்

சு.க. - ஜே.வி.பி. கூட்டமைப்பின் கொள்கையினால் நாட்டில் மீண்டும் யுத்தம் ஏற்படும் என்று வடமேல் மாகாண சபையின் முன்னாள் தலைவர் டி.எம். சந்திரதிலக கூறுகிறார்.

சுதந்திரக்கட்சியை விட்டு வெளியேறி ஐ.தே.கவில் இணைந்ததையடுத்தே அவர் இதனைத் தெரிவித்தார். அத்தனகல்ல பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவர் ஏ.ஏ.பீட்டர் கருணாரத்ன, வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான பீ.என்.குணவர்த்தன, இந்திரா ரந்தெனிய ஆகியோரும் சு.கவை விட்டு விலகி ஐ.தே.கவில் இணைந்துள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமிருநது ஐ.தே.க. அங்கத்துவத்தை இவர்கள் நேற்றுமுன்தினம் பெற்றுக் கொண்டனர்.

இதனையடுத்து நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் சந்திரதிலக மேலும் கூறுகையில், "சமாதானமா, யுத்தமா" என்ற கேள்விக்கு விடை காண்பதே இன்று நாட்டில் மிகவும் முக்கியமானதாகும். நாட்டை மீட்டெடுக்க வேண்டுமானால் சமாதானத்தை ஏற்படுத்தவேண்டும். அதற்காக ஐ.தே.க. மேற்கொண்டுள்ள நடவடிக்கை அபாரமானதாகும். அந்த நடவடிக்கைக்கு நாம் பூரண ஆதரவளிப்போம்.

இவ்வாறான ஒரு நிலையில் நாடாளுமன்றத்தைக் கலைத்து ஜனாதிபதி பொருளாதாரத்தையும் மக்கள் வாழ்க்கையையும் சீர்குலைத்துள்ளார்" - என்றார். (ம)

# ஒதுக்கப்பட்ட நேரம் தவிர ஏனைய நேரத்தில் நோயாளரைப் பார்க்கமுடியாது

## யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒதுக்கப்பட்ட நேரம் தவிர ஏனைய நேரத்தில் நோயாளர்களைப் பார்வையிடமுடியாது. நோயாளிகளைப் பலவந்தமாகப் பார்வையிடும் செயற்பாடுகளில் சிலர் ஈடுபடுவது எமக்குக் கவலை அளிக்கிறது.

- இவ்வாறு யாழ்ப்பாண போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ். சதுர்முகம் உதயனுக்குக் கருத்துத் தெரிவித்தார்.

எமது சமூகம் கலாசார சீர்கேடுகளினால் சீரழிந்து கொண்டிருக்கிறது. சமூக சீர்திருத்தவாதிகளோ அல்லது சீர்திருத்தத் தொண்டர்களோ இதனை மாற்றி சமூகத்தை நல்வழியில் நடத்த வேண்டும். சமூகத்தில் ஒழுக்கமும் ஒழுங்கும் முக்கியமானவை. இவையெல்லாவற்றையும் மீறி கலாசாரச் சீரழிவுகள் இன்று மலிந்துள்ளன. ஒழுங்குமீறல்கள் எதிர்காலத்தில் பொதுநிறுவனங்கள் இயங்குவதற்குத் தடையாக இருக்கும்.

எனவே, சமூகச் சீரழிவுகள், கலாசார சீர்கேடுகள் தொடர்பாக நாம் விழிப்புடன் இருக்கவேண்டும் - எனவும அவர் தெரிவித்துள்ளார்.(ம-ரி)

# சாயி சிந்தனை

## இறைவனுக்கு என்ன வரி?



மாநகரசபைக்கு 'தண்ணீர் வரி' கட்டுகிறீர்கள், குடிதண்ணீர் தருவதற்காக ஒளிபெற மின்சாரம் தருகின்றது என அதற்கும் தனியாக மின்சாரக்கட்டணம் செலுத்துகிறீர்கள். ஆனால், இறைவன் அளிக்கின்ற சூரியஒளி, காற்று மற்றும் மழை ஆகியவற்றுக்காக, இறைவனுக்காக என்ன வரி செலுத்துகிறீர்கள். அவர் உங்களிடம் எதிர்பார்க்கும் கட்டணம் பூரண சரணாகதி மட்டுமே! உங்களது துன்பங்கள் எல்லாம் நீங்களே வரவழைத்துக்கொண்டவை. கடவுள் உங்களுக்கு நன்மையையே தருகிறார். ஆனால், அதனை நீங்கள் பெற்றுக்கொள்வதில்லை. சிலர், நல்ல வார்த்தைகளைக் கேட்கமறுக்கிறார்கள். அதற்குப் பதில் தீய சொற்களுக்கு முக்கியத்துவம் தருகின்றனர். அப்படிப்பட்ட மனிதர்களால் என்னைப் புரிந்துகொள்ளவே முடியாது.

இறைவனை மகிழ்விக்க நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் என்ன? இறைவன் அருகில் சென்று அவரிடம் சரணாகதி அடைய வேண்டும். என்ற எண்ணத்துடன் வழிபடவேண்டும். இது உனக்காக மட்டுமே. கடவுள் எதையுமே கேட்பதில்லை. தாயின் மடியில் அமரும் குழந்தை தனது திருப்திக்காகவே அமர்கிறது. குழந்தை தாயின் அருகில் சென்றதும், அவள் அன்பைப் பொழிகிறாள். நீ இறைவன் அருகில் செல்ல புனிதப் புத்தகங்களைப் படிக்கவோ, அன்றி புனிதமான ஆன்மீகச் சாதனைகளைச் செய்யவோ அவசியமில்லை. சடங்குகளும் புனித நூல்களும் உலகியல் விவகாரங்களும் வெளிப்புறத் திருப்தி அளிக்க மட்டுமே பயன்படுபவை. அதை விடுத்து உட்புறத் திருப்திக்கு முயற்சி செய்யவேண்டும்.

*(ஆதாரம்: சனாதன சாரதி நவம்பர் 1998)*

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

மோட்டறோலா தொலைபேசி (சோலர் அற்றது) விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: T.P.: 222 3184. (28578)

WP HFxxx தொடரிலக்கமுடைய Canter (Guts) பெற்றோல் வாகனம் விற்பனைக்குண்டு. தொடர்பு: நல்ல சமாரியன், கோண்டாவில் சந்தி. T.P. 0777 242511, 021 - 222 2488.(28562)

## வீடு விற்பனைக்கு

வட்டுக்கோட்டையில் பழைய திருஞானசம்பந்தா அருகில் 6 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: S.இந்திராணி (ராணி அக்கா), சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை. (28615)

## காணி விற்பனைக்கு

காங்கேசன்துறை வீதி, நாச்சிமாா கோயிலடியில் 1½பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: S.ரவீந்திரகுமார், இல.605, K.K.S. றோட், நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். T.P.: 0777-149729. (28601)

## தபால் மூலம் ஆங்கிலம்/சிங்களம்

மேற்படி மொழிகளை வீட்டிலிருந்தே நீங்கள் படிக்கலாம். தெளிவான தமிழ விளக்கங்களுடன், வழமையான மேற்படி வகுப்புகளும் உண்டு. இன்றே எழுதுங்கள் அல்லது நேரில் வாருங்கள். தொடர்பிற்கு வழிகாட்டல் ஆசிரியர் திரு.மல்வான, 56, அம்மன் வீதி, கநதர்மடம், யாழ்ப்பாணம். (28296)

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 32 வயதுடைய அத்த நட்சத்திரம், உயரம் 5′ 11″, கிரக பாவம் 9 உடைய Norway இல் பிரஜாவுரிமை பெற்று, பிரசித்தி பெற்ற கல்லூரியில் Computer Consultant ஆகக் கடமைபுரியும் மணமகனுக்கு மெல்லிய, படித்த, நிறமான மணமகள் தேவை. ஜாதகக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2170 மே/பா உதயன்.(28636)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை) (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(28639)

## கோழிக்குஞ்சு விற்பனைக்கு

வளர்ந்த அதிவிசேட Prima பேடடுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (28638)

## கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. பிறீமா பேட்டுக்குஞ்சுகள் இன்று மாலை விநியோகிக்கப்படும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.:3529, 2867. (28623)

தரமான Prima Broiler குஞ்சுகள் 40/- Prima பேட்டுக் குஞ்சுகள் 60/- 01-03-2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்யவும். பருத்தித்துறைக் கிளையிலும் பெற்றுக்கொள்ளலாம். (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (28640)

## கலந்துரையாடல்

பொது அமைப்புக்களுக்கானதிறன வளர்ப்புத்திட்ட ஆலோசனைக் கலந்துரையாடல் ஒன்று நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் உள்ள அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பு நிறுவனத்தில் நடைபெறும்.

இக்கலந்துரையாடலில் அகதிகளுக்கான ஐநா.தூதரக யாழ்மாவட்ட தலைமை அதிகாரி ஹெய்சுகி முரளா கலந்துகொள்வார். (ம-173)

## இராமகிருஷ்ண ஜெயந்திவிழா

வடமராட்சி,பெப்.19

ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தி விழா எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிறுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெறும்.

அன்றைய தினம் விசேட பூஜை, வழிபாடு, மகேஸ்வரபூஜை என்பன இடம்பெறும். (ம-173)

## பாராட்டு விழா

வடமராட்சி,பெப்.19

வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பருத்தித்துறை இன்பர்சிட்டி ஞானியார் கல்விக்கழகம் நடத்தும் பாராட்டு விழா எதிர்வரும் 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியில் கழகத் தலைவர் வே.நவரத்தினராஜா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசுவும், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, வடமராட்சி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரம் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

சித்திபெற்ற மாணவர்கள் அனைவருக்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும். (ம-173)

## கே.கே.எஸ். வீதியில் காவலரண் அகற்றப்பட்டது

தெல்லிப்பழை,பெப்.19

சுன்னாகம் - காங்கேசன்துறை பிரதான வீதியில் சுன்னாகம் இராணுவ முகாமின் முன் அமைக்கப்பட்டிருந்த பிரதான காவலரண் ஒன்று அகற்றப்பட்டுள்ளது.

சுன்னாகம் இராணுவ முகாமின் வடபுற எல்லையில் தேசிய சேமிப்பு வங்கிக்கு முன்பாக வீதியைக் குறுக்கறுத்து அமைக்கப்பட்டிருந்த பிரதான காவலரணே அகற்றப்பட்டுள்ளது.

வீதியின் ஒரு பகுதியைப் பிடித்தபடி அமைக்கப்பட்டிருந்த இக்காவலரண் அகற்றப்பட்டமை மக்களின் போக்குவரத்து நெருக்கடிகளைக் குறைத்துள்ளது.

(ம-150)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| சீட்டிழுப்பு வாரம் | 553 |
|---|---|
| திகதி | 17.02.2004 |

டிக்கட்டின் நிறம் - நீலம்
செல்லுபடியாகும் தொடர் இல.
4534344-4549415

வெற்றி இலக்கங்கள் **11 18 43 50**

லக்கினம்

கன்னி

ஜக்பொட் பரிசு
ரூபா. 1,713,450/-
வெல்லப்படவில்லை.



இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **2,455,350/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 332,232 | 10 | 3,322,320 |
| 2 இலக்கங்கள் | 30,516 | 20 | 610,320 |
| 1 இல + லக்கினம் | 30,141 | 30 | 904,230 |
| 2 இல + லக்கினம் | 2,741 | 100 | 274,100 |
| 3 இலக்கங்கள் | 802 | 500 | 401,000 |
| 3 இல + லக்கினம் | 88 | 5,000 | 440,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,713,450 | - |
| மொத்தம் | 396,524 | - | 6,351,970 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.6,351,970/-

தொடர் இல. 5517988க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2004 பெப்பிரவரி 20ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
4538641-6-30
4541881-2-07
4539966-7-80
4544138-2-97
4535089-4-02

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M



பண்டத்தரிப்பு
## பரிஷ் ப.நோ.கூ.சங்கம்
(வரையுள்ளது)
24ஸ்ரீ9557 இலக்க E.L.F 250
வான் திருத்தம் செய்தல்

## கேள்வி விண்ணப்பம் கோரல்

மேற்படி வாகனத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கு சங்கத்தால் கேள்வி விண்ணப்பம் கோரப்படுகின்றது.

*01. எஞ்சின் முழுமையான வேலைக்கான கூலி*
*02. பொடி அடித்தட்டு பலகை புதிதாக மாற்றுதல்*
*03. பொடிக்கு வானிஸ், பெயின்ற் அடித்து பெயர் எழுதுதல்*

வாகனத்திற்கான வேலை விவரங்கள் விவரிக்கப்பட்டுள்ள கேள்வி விண்ணப்பபத்திரங்களைச் சங்க அலுவலகத்தில் வேலை நாள்களில் மீளளிக்கப்படும் வைப்புப் பணம் 1000/- ரூபாவும், விண்ணப்பபத்திரத்திற்கு 100/- ரூபாவும் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 27-02-2004ஆம் திகதிக்குப் பிந்தாமல கிடைக்கக்கூடியதாக *பொதுமுகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு* என்ற முகவரிக்கு பதிவு அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்,
பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு.
(C/33352)(14-19-21)


## நெஞ்சை விட்டு நீங்காத 7ஆவது ஆண்டு நினைவலைகள்...

திருமதி ம.நீலாம்பிகை (தாயின் மடியில் : 12.11.1952)
செல்வி ம.மைதிலி (தாயின் மடியில் : 29.04.1972)
செல்வி ம.மஞ்சுளா (தாயின் மடியில் : 10.06.1973)
செல்வி ம.மாலதி (தாயின் மடியில் : 08.01.1975)
செல்வி ம.மேனகா (தாயின் மடியில் : 22.10.1984)

**- மறைவு : 19.02.1997 -**

*ஆயிரம் கனவுகளோடும் கற்பனைகளோடும்*
*அன்று நீங்கள் ஆழ்கடலில் பயணமானீர்கள்*
*ஆயிரத்தில் ஒன்றாக ஆண்டவனும் கனவுகண்டானோ*
*உங்களை அழைப்பதென்று*
*இறைவனின் நெஞ்சமும் இரங்கவில்லை எங்களுக்காய்*
*உங்கள் உடலும் உயிருந்தான்*
*எங்களிடமிருந்து பிரிக்கப்பட்டன. ஆனால்*
*உறவுகளும் உணர்வுகளும்*
*என்றென்றும் எங்களுடன் கூடவே இருக்கும்.*

உங்கள் பிரிவால் நித்தமும் துடிக்கும்:
*செங்குந்தா வீதி,* மகாலிங்கம், ராகவன், ரமணன்,
*திருநெல்வேலி கிழக்கு,* உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.
*யாழ்ப்பாணம்.*

☞ 19.02.1997 அன்று இந்தியா செல்லும் வேளையில் மன்னார்க் கடலில் இடம்பெற்ற படகு விபத்தில் இவர்களுடன் பலியான அனைவரையும் இன்று நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகின்றோம்.
(28635) (35-21-11-19)

## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா நடராசா

யாழ்ப்பாணம், ஓட்டுமடத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா நடராசா 17.02.2004 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பவளக்கால் நடராசாவின் அன்பு மனைவியும் யோகநாதன் (முன்னாள் முகாமையாளர், மனோகரா சினிமா), சற்குணபாலதேவி (பவளி), காலஞ்சென்ற சந்திரபாலதேவி (சாந்தி) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சண்முகராசா (முன்னாள் பொதுமுகாமையாளர், இ.மி.ச.), ரங்கநாதன் (முன்னாள் பொறியியலாளர், கொழும்பு மாநகரசபை), பத்மநாதன் (U.K. - முன்னாள் நிர்வாக இயக்குநர், மனோகரா சினிமா) ஆகியோரின் சிறிய தாயாரும் காலஞ்சென்ற விசாலாட்சியின் சகோதரியும் மல்லிகாதேவி, சுப்புலட்சுமி, சிவகுமாரன், சிறிபாலகிருஷ்ணன் (அண்ணாமலை - யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம், கிளை 4இன தலைவரும் கோம்பையன் மணல் இந்துமயானத்தின் உபதலைவரும்), காலஞ்சென்ற பத்மாவதி மற்றும் இராசலட்சுமி (U.K.), கௌரி,அம்மா (U.K.) ஆகியோரின் அன்பு மாமியாரும் ரவிச்சந்திரன் (U.K.), திருமதி நிர்மலா விஜயானந்தன் (கனடா), திருமதி வக்சலா ரவீந்திரன், ரவீந்திரன் கௌசல்யா, திருமதி சிவானி விக்கினேஸ்வரன் (U.K.), சிவசங்கர் (U.K.), பிரியா (கனடா), சித்திரா (ஆஸ்திரேலியா), ரவி (ஆஸ்திரேலியா), வசந்தி (U.K.), ரஜனி (U.K.), கேமமாலினி (U.K.) ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2004) வியாழக்கிழமை முற்பகல் 11மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனகிரியைக்காக கோம்பையன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"பவளவாசம",**
**573, மானிப்பாய் வீதி,**
**ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.**
T.P.: 021-2225761.

தகவல்:
ந.யோகநாதன் *(மகன்).*
(28645) (26)

# முகமாலை மற்றும் பருத்தித்துறைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கடுகதி சேவை

## மனிதநேய அமைப்புகள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலை மற்றும் பருத்தித்துறைப் பகுதிகளுக்கான கடுகதி போக்குவரத்துச் சேவை விரைவில் ஆரம்பிக்க வேண்டும் என்று வட பிராந்திய போக்குவரத்து சபையிடமும் யாழ்.மாவட்ட சிற்றூர்திச் சேவைகள் சங்கத்திடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட மனித நேய அமைப்புகளின் கூட்டம் நேற்று யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின இணைய அலுவலகத்தில் நடைபெற்றது.

தலைவர் எம்ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற இக் கூட்டத்திலேயே இக் கோரிக்கை குறித்துத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்நகரப் பகுதியில் உள்ள அரச மற்றும் தனியார் திணைக்களங்களில கடமையாற்ற வடமராட்சிப்பகுதியில் இருந்து பெருமளவானோர் வருகை தருகின்றனர். அதேபோல யாழ்நகரப் பகுதியிலிருந்து முகமாலைக்கும் அதிகமானவர்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றனர்.

அவர்களின் நன்மை கருதி முன்னைய காலங்களில் இடம்பெற்றது போல கடுகதி சேவையை வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையும், சிற்றூர்திச் சேவைச் சங்கமும் காலையும், மாலையும் மேற்கொள்ள வேண்டும் என்று கோருவது எனத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட மேலதிக தீர்மானங்கள் வருமாறு:-

- போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றுவதனைத் தவிர்க்க வேண்டும்.
- யாழ்.மாநகர மற்றும் பிரதேச சபைகள் தமது எல்லைக்குட்பட்ட வீதிகளில் வேகக் கட்டுப்பாட்டுக் குறியீடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- யாழ்.மாவட்டத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் அதிகளவான மனித உரிமைகள் மீறும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தீர்மானங்கள் தொடர்பாக சகல திணைக்களங்களிற்கும் கடிதங்கள் மூலம் தெரியப்படுத்துவது என்றும் நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (ம-5)



கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பெற்றோரை இழந்த பாடசாலை மாணவர்களில் தெரிவு செய்யப்பட்ட 12 மாணவர்களுக்கு இருபாலை மக்கள் நலன்காக்கும் பிரிவினால் உதவிப்பொருள்கள் வழங்கப்பட்ட நிகழ்வில் நலன்காக்கும் பிரிவின் தலைவர் வ.செல்லத்துரையும் வெளிக்கள உத்தியோகத்தர் கே.நித்தியரத்தினமும் இணைந்து மாணவன் ஒருவருக்கு உதவிப்பொருள்கள் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

*(படம்:வலி.கிழக்குச் செய்தியாளர்)*

# தென்மராட்சி கிழக்கிற்குத் தனியான பிரதேச சபையும் செயலகமும் வேண்டும்

## கொடிகாமம் சந்தைக் கடைத்தொகுதி திறப்பு விழாவில் உரை

கொடிகாமம்,பெப்.19

தென்மராட்சி கிழக்கிற்குத் தனியான பிரதேச செயலகத்தையும் பிரதேச சபையையும் விரைவில் அமைக்கவேண்டும்.

- இப்படி வலியுறுத்தினார் கொடிகாமம் அ.த.க. பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர் திருநாவுக்கரசு.

கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற கொடிகாமம் சந்தைக் கடைத்தொகுதித் திறப்பு விழாவில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில் அவர் தெரிவித்ததாவது:-

தென்மராட்சிப் பிரதேசம் 60 கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கிய நீண்ட பாரிய நிலப்பரப்பைக் கொண்ட பிரதேசமாகும். இப்பரந்த பிரதேசத்துக்கு ஒரேயொரு பிரதேச செயலகமும் பிரதேச சபையுமே உண்டு.

30 கிராமங்களை உள்ளடக்கிய பிரதேச செயலகங்களுக்கு கிடைக்கின்ற நிதி ஒதுக்கீடே இந் தப் பிரதேச செயலகத்துக்கும் கிடைக்கின்றது. இதனால், பணிகளை எந்தக் கிராமங்களில் மேற்கொள்வது என்ற பிரச்சினை நீண்ட காலமாக நிலவி வருகின்றது.

இதனை அடிப்படையாகக் கொண்டு, பிரதேச அபிவிருத்தியை இலகுவாக மேற்கொள்ளக்கூடிய வகையில் தென்மராட்சி மேற்கு, தென்மராட்சி கிழக்கு என இரு பகுதிகளுக்கும் தனித்தனிப் பிரதேச செயலகங்களையும் பிரதேச சபைகளையும் அமைக்கவேண்டும். இதன் மூலம் மக்கள் நலனைச் சிறப்பாகப் பேணமுடியும்.

- இவ்வாறு இரண்டாகப் பிரிக்கின்ற பொழுதும் தென்மராட்சி கிழக்கில் வரணி, கச்சாய், மிருசுவில் ஆகிய உப பிரிவு வட்டாரங்களில் 28 கிராம அலுவலர் பிரிவுகளும், சரசாலையில் இரண்டு கிராம அலுவலர் பிரிவுகளும் என மொத்தம் 30 கிராம அலுவலர் பிரிவுகள் தென்மராட்சி கிழக்குப் பகுதிக்குள் வருகின்றன.

தென்மராட்சி கிழக்கு மக்கள் சார்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் நாம் கோருவது, தென்மராட்சி கிழக்கிற்குத் தனியான பிரதேச செயலகத்தையும் பிரதேச சபையையும் விரைவில் ஏற்படுத்தித் தாருங்கள் - என்றார்.

பிரதேச சபையின் செயலாளர் ந.பாலச்சந்திரன் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

கடந்த ஆண்டு யாழ்.மாவட்டத்தில் வீதி அபிவிருத்திக்குக் கூடுதலான நிதி ஒதுக்கியது சாவகச்சேரி பிரதேச சபையே. ஆனால், பரந்த பிரதேசத்தில் ஏராளமான வீதிகள் புனரமைக்கப்படவேண்டியுள்ளது. இதில், தெரிவுசெய்ய ஒரு பிரிவில் ஒரு வீதி என்ற அடிப்படையில் புனரமைத்து மக்களுக்கு பூரண சேவையை வழங்க முடியவில்லை. ஏனெனில், ஏனைய வீதிகள் பழுதான நிலையிலேயே உள்ளன. எனவே, இப் பெரும் பகுதிக்கு தென்மராட்சி மேற்கு, தென்மராட்சி கிழக்கிற்கு எனத் தனித்தனி சபைகள் அமைக்கப்பட்டாலேயே ஓரளவிற்கு நிறைவுசெய்ய முடியும் - என்றார். (ம-74)

# கொட்டகை வீழ்ந்து சேதமடைந்த மோ.சைக்கிள்களுக்கு நஷ்டஈடு

## யாழ். மாநகரசபை வழங்குகின்றது

யாழ்ப்பாணம்,பெப்.19

யாழ். மாநகரசபைக்குச் சொந்தமான சைக்கிள் பாதுகாப்புக் கொட்டகை குடைசாய்ந்து வீழ்ந்ததால் சேதமடைந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் பழுது பார்ப்பதற்கு மாநகரசபை 10 ஆயிரம் ரூபாவை வழங்கவுள்ளது.

கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள மாநகரசபைக்குச் சொந்தமான கொட்டகை ஒன்று அண்மையில் குடை சாய்ந்து வீழ்ந்ததால் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் சேதமடைந்தன. இதனை அடுத்தே மேற்படி பணம வழங்கப்படவுள்ளது.

பல ஆண்டுகளுக்கு முன்னர் அமைக்கப்பட்ட இக்கொட்டகை சேதமடைந்ததை அடுத்தே குடை சாய்ந்துள்ளது. தற்பொழுது புதிய கொட்டகையை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-10-6)

# ஐக்கிய இலங்கைக்குள் வாழத் தமிழர்கள் தயார் என்பதைத் தேர்தல் முடிவுகள் காட்டும்

## ஈ.பி.டி.பி. கட்சி அறிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.19

ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வு காண்பதற்குத் தமிழ் மக்கள் தயாராகவே இருக்கின்றனர். என்பதை இந்த வாக்களிப்பின் முடிவுகள் நிச்சயம் எடுத்துக் காட்டும்.

- இவ்வாறு ஈ.பி.டி.பி.கட்சி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமது அபிலாசைகளைக் கொள்கை ரீதியாக வெளிப்படுத்துகின்ற ஒரு வாய்ப்பாகவே தமிழ் மக்கள் இந்த முறை வாக்களிப்பில் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம். மக்கள் அனைவரும் ஒன்றுபட்ட வகையில் தத்தம் எதிர்கால நலன்களை எவ்வாறு உறுதிப்படுத்துவது என்பதைத் தமது வாக்குகளால் வெளிப்படுத்துவார்கள் என்றே நம்புகின்றோம். கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் மற்றும் வாழ்வு உரிமைக்கான உத்தரவாதம என்பவற்றை நிலைநிறுத்தும் வகையில தமிழ்மக்கள் தமது அபிலாசைகளை வெளிப்படுத்த வேண்டுமென விரும்புகின்றோம்.

நாடாளுமன்ற அரசியல் செயற்பாடுகள் தொடர்பாகத் தமிழ் மக்களின் மத்தியில் நம்பிக்கையை விதைத்தவர்கள் என்ற வகையிலும், இரு பெரும் தேசிய அரசியல் கட்சிகளோடும் சுமூகமாக நட்புறவைப் பேணித் தமிழ் மக்களின் நலன்களை நிலைநிறுத்தப்பாடுபட்டு வருபவர்கள் என்ற வகையிலும், ஜனநாயக அரசியல் சக்திகளின் செயற்பாடு குறித்து சர்வதேச சமூகத்தின் பார்வையைத் திருப்பியவர்கள் என்ற வகையிலும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அரசியல் செயற்பாடுகள் முக்கியமானவை. கடந்த பத்தாண்டு கால நாடாளுமன்றச் செயற்பாடுகளின் ஊடாக எமது கட்சி முன்னெடுத்த பாதை சரியானதும் நியாயமானதும் ஆகும். இதனாலேயே அன்று முதல் எம்மை விமர்சித்தவர்கள், கேலி பேசியவர்கள், கிண்டல் செய்தவர்கள் கூட இன்று எமது பாதைக்கு வந்துள்ளனர்.

எனவே, தமிழ் மக்கள் ஆயுதங்களின் அச்சுறுத்தல்கள் குறித்து மிரளாமல், போலியான, பசப்பு வார்த்தைகளுக்கு எடுபடாமல், கபடம் மிகுந்த அரசியல் செயற்பாடு குறித்த விழிப்புணர்வுடன் வாக்களிப்பில் ஈடுபட வேண்டும் என்று உள்ளது. (ம-10)

# மணல் திருட்டுக்கு புதிய யுக்திகள்

யாழ்ப்பாணம்,பெப்.19

கொடிகாமம் பகுதியில் உள்ள கச்சாய், கோகிலாமனைப் பகுதிகளில சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வோர் புதிய தந்திரங்களைக் கையாண்டு வருகின்றனர் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

மணலை அரிசி மூடைகள்போன்று பொதிசெய்து அவற்றை டிராக்டரில் ஏற்றிச்செல்கின்றனர். பகலிலும் இந்த முறையில் மணல் கடத்தல் இடம்பெறுகிறது.

உழவு இயந்திரங்களில் தெரியும வகையில் மணல் ஏற்றிச்சென்றவர்கள பலமுறை அப்பகுதி மக்களிடம் பிடிபட்டுள்ளனர். இதன் காரணமாக மணல் அகழ்வோர் உரப்பைகளில் மணலைக் கட்டிவைத்துவிட்டு, இரவு, பகல் பாராது நெல்மூடை என பிறர் நினைக்கும் வகையில் அதனைக் கடத்திவருகின்றனர்.

இது தொடர்பாக அப்பகுதி மக்கள் கொடிகாமம் அரசியல் துறையினரிடம் முறையிட்டுள்ளனர். (ம-6)

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.19

உரும்பிராய் சத்திரோதய வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு அதிபர் க.ஆனந்தராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் விருந்தினாகளாக யாழ் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம், கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம், யாழ்.மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் கை.கவியன்பன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-10)

★ ★ ★

கைதடி,பெப்.19

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு அதிபர் து.பாலசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய அலுவல்கள் அமைச்சின் உதவிப்பணிப்பாளர் சிவமகாலிங்கமும், சிறப்பு விருந்தினர்களா சாவகச்சேரி கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா.சத்தியநாதன், ஓய்வுபெற்ற பிரதிக்கல்விப்பணிப்பாளர் இ.கணேசன் ஆகியோரும் கலந்துகொள்ளவுளளனர். (ம-10-75)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.19

நெடுந்தீவு மங்கையர்க்கரசி வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் ஐக்கிய தீப மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக இளைப்பாறிய அதிபர் கு.லிங்கநாயகம் கலந்துகொள்ளவுள்ளார். (10-ரி)

★ ★ ★

பாஷையூர் சென். அன்ரனீஸ் மகளிர் வித்தியாலய வருடாந்த இல்ல மென்வன்மைப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அதிபர் திருமதி எம்.ஸி.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

# ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுக்களைச் சுமத்தும் எதிர்க்கட்சியினருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை

## அமைச்சர் ரவி கருணாநாயக்க அறிவிப்பு

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டபின் ஆதாரம் இல்லாமல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி தேர்தல் ஆதாயம் பெறமுனையும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என வர்த்தக, வாணிக அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார் நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர், முன்னைய ஆட்சியில் அமைச்சர்களாக இருந்து ஊழல், மோசடிகளில் ஈடுபட்ட அமைச்சர்களுக்கு எதிராக லஞ்ச ஆணையாளர் விசாரணை செய்யாதது ஏன் என்றும் கேள்வி எழுப்பினார்.

இதனை அமைச்சர் ரவி கருணாநாயக்க லஞ்ச ஆணையாளருக்கே கடிதம் மூலம் அறிவித்துள்ளார். இவ்விடயத்தை நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையில் அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று செய்தியாளர் மாநாடு ஒன்றையும் நடத்தினார். கடந்த பொதுத் தேர்தலின் போதும் இதேபோன்று எதிர்க் கட்சியினர் என் மீது சேறுபூசும் வகையில் லஞ்ச ஆணையாளருக்கு முறைப்பாடுகளைச் சமர்ப்பித்தனர். ஆனால், அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு எந்த ஆதாரமும் இல்லாததனால் அக் குற்றச்சாட்டுக்களைத் தாம் நிராகரித்து விட்டார் என அவர் எழுத்து மூலமாகவே அறிவித்திருந்தார்.

பொறுப்பான ஓர் அமைச்சர் என்ற வகையில் சகல ஆதாரங்களுடன் ஜனாதிபதிக்கு எதிராகவே குற்றஞ்சாட்டியவன் நான். இன்று எனக்கு எதிராகச் சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்கு நான் பதில் அளிக்காமல் விடலாம். ஆனால், நாட்டு மக்களுக்கு உண்மையான நிலையைத் தெளிவுபடுத்த வேண்டியது எனது கடமை. எனக்கும் எனது சகாக்கள் 17 பேருக்கும் எதிராக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஊழல் புகார்களைச் சுமத்தி உள்ளனர். ஆதாரமற்ற இப்புகார்களை அப்பட்டமாக வெளியிட்டு பிரசுரம் செய்து எனது சுயகௌரவத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்த முயன்ற அரச ஊடகங்களுக்கும் சில பத்திரிகைகளுக்கும் எதிராகச் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேன்.

அதேவேளை, ஜே.வி.பி. உறுப்பினர்களான சுனில் கெந்துன் நெத்தி, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர்களான ஜகத் புஷ்பகுமார, மிகுந்த சமரவீர ஆகியோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேன். இவர்களிடம் இருந்து ஐந்நூறுகோடி ரூபா நஷ்ட ஈடுகோரி சட்டத்தரணிகள் ஊடாகக் கடிதமும் எழுதியுள்ளேன். இவர்கள் சுமத்திய குற்றச் சாட்டுக்கள் அனைத்திற்கும் கடந்த பெப்ரவரி 3ஆம் திகதி இரவு ஒரு நிகழ்ச்சியில் இவர்களுக்கு நேருக்கு நேர் பதில் அளித்து வாயடைக்கச்செய்தேன்.

உண்மை இவ்வாறு இருக்க, அவர்கள் தங்களுடைய தேர்தல் பிரசாரத்திற்காகவே இவ்வாறு பொய்க் குற்றச்சாட்டுக்களைச் செய்துள்ளனர் என்பது தெளிவாகின்றது.

- இப்படி அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறினார். (ம)

உ
கணபதி துணை

# திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய


# தேர்த்திருவிழா சிறப்புமலர்

## வேதனை போக்கி வெற்றியைத் தாரீர்!

திக்கெலாமொளி வீசும் திருநெல்வேலிப் பதியினிலே
வீற்றிருந்தருளும் வீரகத்தி விநாயகரே!
விக்கினங்கள் தீர்த்து வினையெலாம் களைந்து
வேதனையைப் போக்கி வெற்றியைத் தாரீர்!
சுக்கிர வாரத்திலுனைக் கண்டு தரிசித்திட்டாலே
சுட்டெரிப்பாய் இடர்களையே சுமுகா!
பக்குவமாகவே பரமபதமெமக் கருளிடவே
ரதமேறி வாரீர் விக்ன விநாயகரே!

பஞ்சமுக விநாயகரே பாவங்கள் தீர்ப்பவரே
தேரிலே ஆரோகணித்திடும் பால கணபதியே!
அஞ்சவே வேண்டாமென்று அபயகரம் நீட்டிடும்
ஆனைமுகத்தோனே பானை வயிற்றோனே
தஞ்சமென்றுன்னைச் சரணடைந்தோம் தயாளா!
தமியரைக் காத்திடவே தேர் மீது வாராய்!
வெஞ்சமரை நீக்கி எம் வேதனையைப் போக்கிட
விரைந்தோடி வாருமையா வீரகத்தி விநாயகரே!

சிவநெறிக்கலாநிதி **இராசையா ஸ்ரீதரன்.**



## எங்களுக்கருளிடவே தேரேறி வாருமையா!

கண்ணையிமை காப்பது போல் காக்கும் கணபதியே
கார்மயில் வாகனனின் கருணைமிகு அண்ணாவே!
பெண்ணையிடப் பாகம் வைத்த பெருமானின் புத்திரனே
பழங்கிணற்றடியுறையும் பரம கருணாநிதியே!
மண்ணையுண்ட வாயான் மாலோன் மருகனே!
பானை வயிற்றோனே பக்தர்களைக் காப்பவனே!
வெண்ணை திருடித் தின்னும் திருமால் மகிழும்
வேலவனின் சோதரனே கணபதியே அருள்வாய்!

வந்தனை செய்தோம் நாம் வரமருள வேண்டுமையா
வந்தே தேரிலமர்ந்து திருவருளைத் தாருமையா!
சிந்தனையென்றென்றும் திருவுளமே உனக்காக்கி
சித்திரத் தேரில் வரும் வீரகத்தி விநாயகரே!
உந்தனை வழிபடவே ஒன்றுகூடி வந்திட்டோம்
ஓங்காரக் கணபதியே ஆங்காரந் தீருமையா!
கந்தனைத் தழுவி மகிழும் காருண்யக் கணபதியே
எங்களுக்கருளிடவே தேரேறி வாருமையா!

**- கணபதி கழல் பணிவோன்.**

# விக்கினந் தீர்த்தருளுகின்ற வீரகத்தி விநாயகர்

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று மிகச்சிறப்பாக நடைபெறுகின்றது. சைவமும் தமிழும் நின்று நிலைத்து வேரூன்றி விழுது விட்ட திருப்பதி திருநெல்வேலியாகும். பறங்கியர் காலத்திலேயே 'பசுவதைக்கு அஞ்சிப்பரதேசம் போன' ஸ்ரீலஸ்ரீஞானப்பிரகாச சுவாமிகள் அவதரித்ததிருத்தலம் இப்புண்ணிய பூமியே ஆகும். மண்வளம் மிக்க இப்பகுதியிலே மண்வளமிக்க பக்திமான்களும் கல்விமான்களும் காலூன்றி வாழ்ந்துள்ளனர். இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய திருநெல்வேலியிலே எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயம் திருவருட் சிறப்புடன் மிளிர்கின்றது.

அழகானதேர், அற்புதமான மஞ்சம், அருமையான சப்பரம், கலையம்சம் நிறைந்த வாகனங்கள் முதலானவற்றிலே எம்பெருமான் இவர்ந்து அருள்பாலிப்பதைக் காண நாம் பூர்வ ஜென்ம புண்ணியஞ் செய்திருக்க வேண்டும்.

காதுக்கும் கருத்துக்கும் இனியபக்தி இசையை மென்மையாக இலேசான ஒலியில் ஒலிபரப்பிப் பக்தர்களுக்குப் பக்தி உணர்வை ஊட்டுவது சிறப்பம்சமாகும்.

வந்தார்க்கு வரம் அருளும் ஸ்ரீவல்லபாம்பிகா கணபதியின் அருளாட்சியினால் இவ்வூர் எல்லாவகை நலன்களையும் பெற்றுச் சிறப்புடன் விளங்குகின்றது.

## "வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்து வரும்"

இந்த ஆலயம் நேரகாலம் தவறாத பூசைகளாலும் திருவிழாக்களாலும் சிறப்புற்றுவிளங்குகின்றது. ஒவ்வொரு சதுர்த்திக்கும் எம்பெருமான் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்பாலிக்கும் காட்சி கண்கொள்ளாக்காட்சியாகும். பெருங்கதை இருபத்தொருநாளும் பஞ்சமுக வீநாயகப்பெருமானுக்குப் பஞ்சமுகா அர்ச்சனை வெகுவிமரிசையாக நடைபெறும். அத்துடன், புதுவருடப்பிறப்பு, நவராத்திரி, தைப்பொங்கல் முதலான தினங்களிலேயே விஷேட பூசையும் அபிஷேகமும் விழாவும் நடைபெறுவதும் வழக்கமாகும்.

பக்திச் சூழல் அமைந்திருக்கும் பழங்கிணற்றடியிலே எழுந்தளியிருக்கும் எம் பெருமானின் திருவருளை வேண்டிப்பக்தர்கள் பெருமளவிலே கூடுவர். இளைஞர்கள் ஆசாரசீலர்களாகப் பக்தி சிரத்தையோடு சரியை, கிரியைத் தொண்டுகள் செய்வதை இந்த ஆலயத்திலே சிறப்பாகக் காணமுடியும்.

இராஜகோபுரத்திற்கான அடித்தளம் அமைக்கப்பட்டுள்ள இவ்வாலய வீதியிலே திருமண மண்டபம் ஒன்றும் நிறுவப்பட்டு வருகின்றது. இன்னும் ஓரிரு மாதங்களிலே பூர்த்தியடையும் நிலையில் உள்ள இத்திருமண மண்டபம் ஆலயத்தின் அருளுக்கும் அழகிற்கும் மேலும் மெரு கூட்டுவதாக அமையும் என நம்பலாம்.

அர்ப்பணிப்போடும் பக்தி உணர்வோடும் தன்னடக்கத்தோடும் இந்த ஆலயத்தைப் பரிபாலித்து வருபவர்களை அடியார்கள் நெஞ்சாரவே வாழ்த்துவர்.

பழங்கிணற்றடி ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேரில் வந்து திருவருள் பாலிக்கும் இந்த நன்னாளிலே நாமும் அடியார்களோடு இணைந்து திருவருளைப்பெறுவோம்.

வேழமுகத்து விநாயகனைத்தொழ
வாழ்வு மிகுந்து வரும்.


## விழா சிறப்புற வாழ்த்துவோர்:

(C/33356)

**ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ்**
பலாலி வீதி, திருநெல்வேலி

**ராம்கரன் புத்தகசாலை**
பலாலி வீதி,
திருநெல்வேலி

**குமரன் களஞ்சியம்**
பலாலி வீதி,
திருநெல்வேலி

**கணபதி உதிரிப்பாகம் விற்பனை நிலையம்**
பலாலி வீதி, திருநெல்வேலி

**கனகா பத்திரிகை விற்பனை நிலையம்**
பலாலி வீதி, திருநெல்வேலி

**ஐங்கரன் களஞ்சியம்**
பலாலி வீதி,
திருநெல்வேலி

**தாஸ் ஸ்ரோர்ஸ்**
கலாசாலை வீதி,
திருநெல்வேலி

உ
ஓம் சக்தி



# புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம்

(குளத்தடி நாச்சிமார்கோவில்)

மாசி மக மஹோற்சவம்

அம்பிகை அடியார்களே!

நாளை (20.02.2004) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்றம், 04.03.2004 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு தேர்த்திருவிழா, 05.03.2004 வெள்ளிக்கிழமை பகல் 12.00மணிக்கு மாசிமகத் தீர்த்தத் திருவிழா, 06.03.2004 சனிக்கிழமை மாலை 6மணிக்கு பூங்காவனத்திருவிழா.

பிரதமகுரு: 'வேதாகம கிரியா ஜோதி'- 'ஆகமகிரியாதிலகம்'

சிவஸ்ரீ ந.சபாரத்தினக்குருக்கள்.

(28652)(38-13-32) உபயகாரரும், தர்மகர்த்தாவும்


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 28 - 09 - 1957



மறைவு 02 - 02 - 2003

திருமதி

**துரைசிங்கம் மனோரமாதேவி**

ஓராண்டு நொடிப்பொழுதில் ஓடி மறைந்ததே!
தீராத வேதனை மட்டும் தீர்ந்த பாடில்லையே
மாறாத நினைவுகளால் மனமே துடிக்குதம்மா
ஆறாத வடுக்கள் ஆறாமல் இருக்கின்றனவே!
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்

*சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.*

-அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள் மற்றும் உறவினர்கள்.

(28660)(38-32-12-13)

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நம!

## ஈரவிழிகளுடன் மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

வீர ஜனனம் 28 - 06 - 1976



வீர மரணம் 19 - 02 - 2001

செல்வன்

**இராசரத்தினம் பிரசன்னவதனன் (வதன்)**

**கப்டன் யாழ்வேந்தன்**

ஒளிவீட்ட தீபமன்றோ!
வேதனையோ தீரவில்லை
எம் மங்காப் பெருஞ்செல்வமே!
உன் பாசமிகு நினைவுகளை நினைத்து
தினந்தினம் துடியாய்த் துடித்து கலங்குகின்றோம்.

ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து நிற்கும்:

அப்பா, அம்மா, அக்கா,
அத்தான், மருமகள்,
தம்பிமார் மற்றும் உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

*தாவடி வடக்கு,*

(28659)(32-12-13)

## கூட்டம்

வலி.தென்மேற்கு,பெப்.19

வலி.தென்மேற்கு பிரதேச சபைப் பிரிவிலுள்ள சன சமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோருக்கான முக்கிய கூட்டமொன்று இன்று பிற்பகல் 3மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-135-185)

## புருஹொவ்டே மன்னார் விஜயம்

வவுனியா,பெப்.19

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ரொண்ட் புருஹொவ்டே நேற்று முன்தினம் மன்னாருக்கு விஜயஞ்செய்தார்.

நேற்று முன்தினம் முற்பகல் 11 மணியளவில் மன்னாரிலுள்ள விடுதலைப் புலிகளின சமாதானச் செயலகத்திற்குச் சென்ற புருஹொவ்டே அங்கு புலிகளின் பிரதி நிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

விடுதலைப் புலிகளின் தரப்பில் மன்னார் மாவட்ட மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் நிலவரசி, அரசியல் துறையைச் சேர்ந்த தென்றல் மாறன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். மன்னார் மாவட்டத்தின் தற்போதைய நிலைவரம் குறித்து இதில் கலந்துரையாடப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் வே.விஸ்வலிங்கம் மற்றும் மாவட்ட இராணுவத் தளபதி உட்படப் பல்வேறு தரப்பினரையும் புருஹொவ்டே சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினார்.

அவர் நேற்று வவுனியாவிற்கு விஜயம் மேற்கொள்ளவிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-4-164)

## வெங்காயப்பூ கொழும்புக்கு!

வடமராட்சி,பெப்.19

உள்ளூரில் விளையும் வெங்காயப்பூ லொறிகளில் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டு வருகிறது.

வெங்காயப்பூவின் விளைச்சல் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து இதனைக் கொழும்புக்கு எடுத்துச்செல்வதில் வியாபாரிகள் அக்கறைகாட்டி வருகின்றனர்.

தற்போது வெங்காயப்பூ கிலோ 10 ரூபாவாக விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுவருகிறது. (ம-173)

## ஆன்மீகச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,பெப்.19

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். மாவட்ட பிராந்திய அலுவலகம் நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில், நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆசிரியர் சைவப் புலவர் கா.கமலநாதன் "விபூதியின் மகிமை" என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ம-ரி)


நிறைஞ்சனாஸ் சங்கானை

ஜோதிகா, ரம்பா, லைலா, விவேக் நடித்த

த்ரீரோசஸ் (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

DUNGEONS DRAGONS

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

(C/33334)(12)

லிபேட்டி அச்சுவேலி



அர்ஜுன், சிம்ரன், நாசர், வடிவேல் நடித்த

காட்சிகள்: 3.00, 7.00. (பு.நே.)

ராஜா யாழ்ப்பாணம்



விஜயகாந்த், வடிவேல், பிரபுதேவா, பாண்டியராஜன் நடித்த

எங்கள் அண்ணா (ரீல்ஸ்)

காட்சிநேரம் : 10.30. 2.30,6.30,9.30(பு.நே.)

(C-33050) (12)

நாகம்ஸ் சுன்னாகம்

புதிய டொல்வி ஒளிநயத்துடன் மகா சிவராத்திரி வெளியீடாக!



தனுஷ், அபர்ணா, கருணாஸ் (2 வேடம்) நடிப்பில்

தினசரி காட்சிகள்: 11.00.3.00. 7.00.(பு.நே.)

(ரீல்ஸ்) 9.30. 12.00. 2.00 (பு.நே.)

(C/33345)(12)

Dialog GSM

டயலொக்

கையடக்க GSM தொலைபேசி அட்டைகளை மொத்தமாகவும, சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

kit

எந்நேரமும் உன்னுடன்...!

Sri Murugan

Tele Communication & Agency Post Office,

303, K.K.S. ROAD, JAFFNA.

T.P :021 222 5392

FAX :222 3214,

email: del-smskr @ eureka.lk

(C/33358)(38-13-32)


## ஆறாத்துயரில் 31ஆம் நாள் நினைவு

வாழ்வுக்காக 1951 - 08 - 17



ஓய்வுக்காக 2004 - 01 - 20

**அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை**

(சின்னமாமாவின் சகோதரன்)

கரவை மத்தொனியில் பிறந்து
நோர்வேயில் பார்புகழ வாழ்ந்து
தாய்த்திருநாடாம் ஈழத்திற்கு வந்து
தாய்மண்ணில் மரணித்த செல்வமே செல்லத்துரை
எந்நாளும் நாம் உன் நினைவில் வாடுகிறோம்.

*மத்தொனி, கரவெட்டி.*

அன்னாரின் குடும்பத்தினர்

(C/33357)(38-13-12-32)

## கண்ணீர் அஞ்சலி



அம்பாள் ஸ்ரோர்ஸின் உரிமையாளர்

திரு.நாகமுத்து சுப்பையா அவர்களின் பாசமிகு மனைவி

**திருமதி சுப்பையா பகவதி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அவர்களது குடும்பத்தினர்களுக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பருத்தித்துறை.* (28663)(32-13-38) அம்பாள் ஸ்ரோர்ஸ் ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுப்பையா பகவதி

வராத்துப்பளை, புலோலி கிழக்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சுப்பையா பகவதி அவர்கள் நேற்றுமுன்தினம் (17.02.2004) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் நாகமுத்து சுப்பையா (அம்பாள் ஸ்ரோர்ஸ்)வின் அன்பு மனைவியும் குருபரன் (ஜேர்மனி), கலைமகள், கலைச்செல்வி, பிரணவன், குலமகள் (லண்டன்), திருமகள், ரமணன், பராசக்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் செல்வரட்ணம், செந்தில்நாதன், ஸ்ரீமீனசிவா (லண்டன்), இளம்பிறைநாதன (கரிஸ் ஹாட்வெயர்), சந்திரவதனி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் இராசரத்தினம், லோகேஸ்வரன், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், பத்மாவதி (லண்டன்), தனவதி, தெய்வேந்திரராசா (அம்பாள ஸ்ரோர்ஸ்), பஞ்சநாதன் (ஜேர்மனி), பாஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் சகோதரியும் தவமணி, பரமேஸ்வரி, தவமணிதேவி, கணபதிப்பிள்ளை (லண்டன்), வேல்முருகு (கிராம உத்தியோகத்தர், எழுதுமட்டுவாழ்), கலாதேவி, பிரேமினி (ஜேர்மனி), சுமதி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் கௌரிகன், சாம்பவி, திலோத்தமா, ஷங்கனி, மாதுரி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2004) வியாழக்கிழமை மு.ப.11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வராத்துப்பளை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை.*

(28662)(38-13-12-32)

தகவல்: சு.ரமணன் (மகன்).

### வேலாயுதம் கணபதிப்பிள்ளை

(இளைப்பாறிய சாரதி, வடபிராந்திய போக்குவரத்துச் சபை, கோண்டாவில் சாலை)

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம கணபதிப்பிள்ளை அவர்கள் நேற்று (18.02.2004) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தேவியின் அன்புக் கணவரும் சபேசன், சதீஸ்குமார், தவரூபினி ஆகியோரின் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2004) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன் கோவீல் வீதி, மட்டுவில் வடக்கு, சந்திரபுரம், சாவகச்சேரி.*

(28656)(38-13-12-32)

தகவல்: மனைவி.

## பகுதிநேர ஆங்கில ஆசிரியருக்கு நியமனம் வழங்கச் சிபார்சு

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் பணியாற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்கான தனது சிபார்சினை வழங்கிய கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு, அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காக குறித்த சிபார்சினைச் சமர்ப்பித்துள்ளார் என்று அமைச்சின் சிரேஷ்ட துணைச் செயலாளர் எஸ்.திஸாநாயக்கா தம்மிடம் தெரிவித்துள்ளார் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார். (எ)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்ததாக உண்ணாவிரதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதியிலிருந்து படிப்படியாக இரண்டொரு மாதங்களுக்கிடையில் 67 இந்திய மீனவரைக் கைதுசெய்த இலங்கைக் கடற்படையினர் எந்தவித அறிவிப்புமின்றி தொடர்ந்தும் தம்மைச் சிறையில் தடுத்து வைத்துள்ளனர் என்றும் - தமது படகுகள் காங்கேசன்துறை துறைமுகத்தில் கவனிப்பாரற்ற நிலையில் தரிக்கவிடப்பட்டுள்ளன என்றும் - மீனவர்கள் தரப்பில் கூறப்பட்டது.

இதற்கிடையில் - யாழ். சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்து வரும் மீனவர்களில் மேலும் இருவர் சோர்வுற்ற நிலையில் இருப்பதாக மற்றொரு தகவல் தெரிவித்தது. (எ-7-15)

## வீடு சின்னத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் 'உதயசூரியன்' சின்னத்தைத் தமது தேர்தல் சின்னமாகக் கொண்டு தேர்தலில் போட்டியிடவே கூட்டமைப்பு முன்னர் தீர்மானித்திருந்தது.

ஆயினும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பிரச்சினை முற்றி நீதிமன்றம் வரை சென்றுவிட்டதால் கூட்மைப்பு வேறொரு சின்னத்தைத் தேட வேண்டியதாயிற்று

கட்சித்தலைவர் என்ற வகையில் (கட்சி யாப்பின்படி) தன்னுடைய அனுமதி பெறாமல் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கூட்டங்களை நடத்துவதற்கோ அன்றிக் கட்சியின் வேறு நடவடிக்கைகளில் செயலாளர் நாயகம், சிரேஷ்ட உபதலைவர் முதலானோர் ஈடுபடுவதற்கோ ஆனந்தசங்கரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றிருக்கிறார்.

இதனாலேயே கூட்டமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் 'உதய சூரியன்' சின்னத்தைப் பயன்படுத்தும் வாய்ப்பு அடிபட்டுப் போயிற்று. எனவேதான் நேற்றைய கூட்டத்தில் புதிய தீர்மானம்.

நேற்று நடைபெற்ற கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், என்.ரவிராஜ் ஆகியோரும் -

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக அ.விநாயகமூர்த்தி, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், விசாகரட்ணம் ஆகியோரும் -

ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணி சார்பாக சுரேஷ் பிரேமச்சந்திரன், பிரசன்னா ஆகியோரும் -

ரெலோ சார்பாக சிவாஜிலிங்கம், என்.ஸ்ரீகாந்தா ஆகியோரும் கலந்து கொண்டனர்.


கணக்கீடு
A/L 2005
பிரிவு I : பங்குடமை
ஆரம்பம் சனி 7 மணி (பு.நேரம்)
பிரிவு II :கட்டுப்பாட்டுக் கணக்கு
ஆரம்பம் திங்கள் 5 மணி (பு.நேரம்)
ஆசிரியர் S.தவா
B.Com(Hons)(Acc.Spl.)
(28625)(36)
NEW SCIENCE COLLEGE Jaffna

NEW SCIENCE CENTRE
மணிக்கூட்டு வீதி, யாழ்.நகர்.
A/L 2005
ORGANIC CHEMISTRY
Sat, Sun => 12-1
INORGANIC CHEMISTRY
Sat, Sun => 11-12
By:- அன்பழகன்
(28646)(36)


## புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்தில் குற்றவாளியாகக் காணப்பட்ட வே.பிரபாகரனுக்கு நீதிமன்றம் 200 வருட சிறைத்தண்டனை வழங்கியுள்ளது. நீங்கள் பதவிக்கு வந்தால் இத்தண்டனையை நிறைவேற்றுவீர்களா?

விமல் ரத்னாயக்க (ஜே.வி.பி.): பிரபாகரன் இந்தியாவுக்கும் தேவைப்பட்டவராகிறார். இலங்கையிலும் அவருக்கு 200 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. நாம் ஆட்சிக்கு வந்தால் இத்தண்டனையை நிறைவேற்றுவோம். இதை 90 நாள்களில் செய்து முடிப்போம் என காலவரையறை நிர்ணயிக்க முடியாது. - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த திங்கட்கிழமை இரவு அரச தொலைக்காட்சியொன்றின் அரசியல் கலந்துரையாடலில் கலந்துகொண்ட கூட்டமைப்பின் தவிசாளர் நந்தன குணதிலகவும் (ஜே.வி.பி.) இதே கருத்தைத் தெரிவித்திருந்தார்.

இக்கலந்துரையாடலின்போது புறக்கோட்டை அரச மரத்தடிச் சந்தியிலிருந்து ஒரு நேயர் இதே கேள்வியை எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த நந்தன குணதிலக கூறியதாவது:-

பிரபாகரனைக் கைது செய்வது பொலீஸாரின் கடமை. அவர்கள் இதைச் செய்வதை எமது உத்தேச அரசு தடுக்காது. இதேவேளை சமாதான முன்னெடுப்புக்களுக்கும் இதற்கும் எதுவித தொடர்பும் இல்லை. ஒருபுறம் சட்டமும் நீதித்துறையும் அதனது கடமைகளைச் செய்யும். அரசு சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து ஆராயும். - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஏ-9 பயணிகள்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டை நடைமுறைப்படுத்த முடியாது போயிருப்பதாக பலாலி படைத் தலைமையகம் நேற்றிரவு விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இன்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் பணிபுரியும் நேரம் வரை - அதாவது மாலை 6.30 மணி வரை - மட்டுமே சோதனைச் சாவடி திறந்திருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

முகமாலை சோதனை நிலையம் இரவு 9.00 மணிவரை திறக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து நேற்றிரவு அப்பாதையூடாகப் பயணம்செய்ய புறப்பட்டுச் சென்ற பெரும் எண்ணிக்கையான பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர். (ஐ)

## மூன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களையும் பார்வையிட்டனர்.

கைதடி - நாவற்குழி ஸ்ரீ வள்ளியம்மன் ஆலயம், முருகன் ஆலயம் ஆகியன பலத்த சேதமடைந்து காணப்படுகின்றன. மறவன்புலோ தோப்புப் பிள்ளையார் கோவில் கடந்த 1999ஆம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு அரைகுறையாகப் புனரமைக்கப்பட்ட நிலையில் அப்படியே காணப்படுகின்றது.

52ஆவது படையணியின் தளபதி பிரிகேடியர் சந்திரசிறியின் பணிப்பின்பேரில் 521ஆவது படையணியின் சிவில் நிர்வாக அதிகாரி கேணல் குணசிங்க, 521ஆவது படையணித் தளபதி மைத்திரி டயஸ் உட்பட பல படை அதிகாரிகள் நேற்று இந்த ஆலயங்களுக்கு விஜயம் செய்தனர். ஆலயங்களுக்குச் செல்ல பொதுமக்களும் அனுமதிக்கப்பட்டனர். பூஜை நடத்த அனுமதிக்கப்பட்ட மூன்று கோவில்களிலும் சாவகச்சேரிப் பொலீஸார் கடமையில் ஈடுபட்டிருந்தனர். ஆலய பூஜைகளில் கலந்துகொண்ட மக்கள் பிற்பகல் 5.00 மணிவரை அங்கு தங்கிநிற்க அனுமதிக்கப்பட்டனர். (ஐ-31-117)


NEW SCIENCE COLLEGE
2006
பொறியியல்
ஆரம்ப: 21.02.2004
சனி, ஞாயிறு - (8-9)
By.R. குகன்
(28675)(36)


## புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோசனையை சிலர் விரும்பவில்லை. சிலர் மௌனம் சாதித்தனர். ஓர் உறுப்பினர் வவுனியாவில் கட்சியின் சார்பில் போட்டியிட விரும்பிய பலரின் பெயர்களைக் குறிப்பிட்டார். அவற்றில் சிலர் பல இன்னல்களுக்கு மத்தியில் கடந்த தேர்தல்களில் போட்டியிட்ட முன்னைய வேட்பாளர்களாவார்கள். எனவே, அவர்களுக்கும் பட்டியலில் இடம்கொடுக்க வேண்டும் என நான் கூறினேன்.

"இதற்கு நீங்கள் இணங்காத பட்சத்தில், எமது கட்சிவேட்பாளர்கள் அனைவரையும் போட்டியிடவேண்டாம் எனக் கோரிவிட்டு நாம் அனைவரும் விடுதலைப் புலிகளிடமே, வேட்பாளர்களை நீங்களே நிறுத்துங்கள் எனக் கேட்போம் என்றேன். அதற்கு நாங்கள் அனைவரும் முழு ஒத்துழைப்புக் கொடுப்போம் என்று கூறிவிடுவோம்.

"தங்களிடையேயுள்ள திறமை வாய்ந்த வேட்பாளர்களை புலிகள் நிறுத்தட்டும், நாங்கள் அனைவரும் முழு ஒத்துழைப்புக் கொடுத்து அவர்களை வெற்றிபெறச் செய்வோம் என்று கூறி கூட்டத்திலிருந்து வெளியே வந்துவிட்டேன், இன்றைய சூழலில் எமது கட்சியின் நலனைப் பாதுகாக்க சிறந்த வழி இதுவென நான் கருதுகின்றேன்."

- இவ்வாறு அவர் கூறினார்.

## மலையகத்தின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் பிரச்சினையை சர்வதேசமயப்படுத்துவதற்கு நாடாளுமன்றத்தை சரியாகப் பயன்படுத்தவேண்டும் என்ற முடிவுக்கு வந்துள்ளோம்.

வடக்கு - கிழக்கைப்போல தனித் தமிழர்கள் வாழும் பிரதேசம் என்று நுவரெலியா மாவட்டத்தை மட்டும்தான் சொல்லமுடியும். ஏனைய பிரதேசங்களில் அரசியல் ரீதியாக சில ராஜதந்திரங்களைக் கையாளவேண்டியிருக்கின்றது.

ஐ.தே.கட்சி சார்பில் போட்டியிடுவது தொடர்பாக எந்த முடிவுக்கும் நாம் இன்னும் வரவில்லை. அவர்களுடன் பேச்சு நடந்துள்ளது. ஆனால், நாடாளுமன்ற அங்கத்துவம் அல்லது அமைச்சர் பதவி என்பதைவிட மலையக மக்கள் முன்னணி பிரதானமாக, தமிழ்மக்களின் பலத்தை அதிகரிக்க வேண்டும் என்றுதான் கருதுகிறது. இன்னும் 2,3 தினங்களுக்குள் எமது முடிவைப் பகிரங்கமாக அறிவிப்போம் - என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் போல் விடுதலைப் புலிகளின் பின்னணியில் மலையகத்தில் தேர்தலை முன்னெடுக்கப் போகின்றீர்களா? எனக் கேட்டபோது,

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, விடுதலைப் புலிகளின் பின்னணியில் இருந்து செயற்படுகின்ற அமைப்பு என்பதை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். தமிழ்மக்களின் அரசியல் தேவையை உணர்ந்துகொண்டு ஐக்கியப்பட்டிருக்கின்ற அமைப்பாகவே கருதுகிறேன். அவர்கள் எந்த அளவுக்கு நேர்மையாக செயற்படுகின்றார்களோ, எந்த அளவுக்கு சமூக உணர்வோடு, அரசியல் தெளிவோடு செயற்படுகிறார்களோ அதனைப் புலிகள் ஆதரிக்கின்றார்கள்.

அந்த ரீதியில், மலையக மக்கள் முன்னணியோ அல்லது தமிழ் உணர்வுள்ள தொலைநோக்குக் கொண்டவர்களோ ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியலை செய்யவேண்டும் என்பதுதான் எமது நோக்கம்.

மலையகத்தில் எங்கெங்கு வெற்றி பெறமுடியுமோ அங்கெல்லாம் போட்டியிடுவோம் தமிழரின் அரசியல் பலத்தை வெளிப்படுத்தக்கூடிய நிலை எந்த மாவட்டத்தில் இருக்கிறதோ அங்கெல்லாம் போட்டியிடுவோம்.

இன்னும் 2,3 நாள்களில் தமிழ்ச்செல்வனைச் சந்திக்க மீண்டும் வன்னி வருவேன். கூட்டமைப்புடன் மீண்டும் பேச்சு நடத்தி விடுதலைப் புலிகளின் கருத்தை அறிந்தபின் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வோம் என்றும் சந்திரசேகரன் கூறினார்.


பங்குடைமை
2005 K.S.மோதிலால்
FINE ACCADAMY
K.K.S. Road, Mallakam
திங, வியா. 4.00 -6.00
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி (28649)(36)
திங்கள் ->வெள்ளி -காலை 6.00


# மரண அறிவித்தல்கள்

## வல்லி சிவராசா

கவுந்தில், கரவெட்டி மத்தி, கரவெட்டியை வசிப்பிடமாகக் கொண்ட வல்லி சிவராசா அவர்கள் நேற்று (18.02.2004) புதன்கிழமை அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து அவர்களின் அன்புக் கணவரும் சிவராணி (டென்மார்க்), சிவசங்கர்(டென்மார்க்), சிவதா, சிவாகர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆனந்தராசா (டென்மார்க்), சிவநந்தினி (டென்மார்க்), அருந்தவம் (சீலைன்ஸ் கொம்பிளைக்ஸ் உரிமையாளர்) ஆகியோரின் பாசமிகு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் உடுப்பிட்டியிலுள்ள அவரது மகளின இல்லத்தில் இன்று (19.02.2004) வியாழக்கிழமை நடைபெற்று பூதவுடல் பி.ப. 4.00 மணியளவில் வல்வை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருந்தவம்(மருமகன்)
(சி-33361)(36-12) சீலைன்ஸ் கொம்பிளைக்ஸ் உரிமையாளர் உடுப்பிட்டி.

## செல்லப்பா சின்னத்துரை

தெல்லிப்பழை மாதனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர் செல்லப்பா சின்னத்துரை அவர்கள் நேற்று(18.02.2004)புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விசாலாட்சியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மலேசியாவை வசிப்பிடமாகக்கொண்ட திருமதி கந்தையா - வள்ளிப்பிள்ளையின் அன்புச் சகோதரரும் திருமதி இராமலிங்கம் குணம், சண்முகநாதன், காலஞ்சென்ற சிதம்பரநாதன், திருமதி கிருஷ்ணமூர்த்தி, தனபாக்கியம், காலஞ்சென்ற பரஞ்சோதிநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராமலிங்கம், உமாதேவி, கிருஷ்ணமூர்த்தி, காலஞ்சென்ற நகுலேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் மலேசியாவைப் பிறப்பிடமாகக்கொண்ட செல்வரத்தினம், துரைசிங்கம் காலஞ்சென்ற தனபாலசிங்கம், அன்னபூரணம், சிவபூரணம், ஜெயபாலசிங்கம் ஆகியோரின் மாமனாரும் திருமதி காண்டீபன், திருமதி குகன் பிறேமா, இளங்கோவன், வாமதேவன், விஜயராணி, சந்தானகிருஷ்ணன், உசாந்தினி, மதிசுதன் ஆகியோரின் பேரனும் யதுராஜ், யுவராஜ் ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.02.2004) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக தெல்லிப்பழை கட்டுப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*மாதனை,*
*தெல்லிப்பழை.* (சி-33359)(36-12)
தகவல்:
சு.இராமலிங்கம் (மருமகன்).
(பொலீஸ் பெரியப்பா).

## திருமதி சரஸ்வதி வீரசிங்கம்

புகையிரத வீதி அருகில் மல்லாகத்தைச் சேர்ந்த திருமதி வீரசிங்கம் - சரஸ்வதி அவர்கள் 18.02.2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கத்தின் அன்பு மனைவியும், கருணாம்பிகைபாகன் (கட்டடத்திணைக்களம்), காலஞ்சென்ற மீனாம்பிகை, கமலாம்பிகை, ஞானாம்பிகை (ஜேர்மனி), அம்பிகைபாகன் (மின்சாரசபை - சுன்னாகம்), விமலாம்பிகைபாகன் (சுகாதாரத்திணைக்களம்), ஜெகதாம்பிகைபாகன் (யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மகேஸ்வரி, நடராசா, வனராசசிங்கம், அரசலிங்கம் (ஜேர்மனி), சுசிலாதேவி, யோகராணி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி) ஆகியோரின் மாமியாரும் உதயநிதி - உஷாநந்தினி (சுவிஸ்) , ஜெனாளன், ஜெயந்தன், உஷாபானு, நிஷாந்தினி, சிவகரி (ஜேர்மனி), சிவசுதன் (ஜேர்மனி), மதீசன், கஜேந்திரன், பார்த்தீபன், யாழினி, கஜேந்தினி, ஜெஜனி, தீபா, மஜீவகரிகரன், சுகபாணி, பவன், ஜெனன், சங்கீதன், திவாகரன், யசோதரன், கீர்த்தனா ஆகியோரின் பேர்த்தியும் விதுஷா, தனுஷன் (சுவிஸ்) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (19.02.2004) வியாழக்கிழமை மாலை 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புகையிரத வீதி அருகில்,*
*மல்லாகம்.*
T.P.: 077 6072151 (28665)(36-12)
தகவல்:
நடராசா ஜெனாளன்.

## இராமசாமி பரராஜசிங்கம்

**(சிங்கம் புடைவையக உரிமையாளர், யாழ்ப்பாணம்)**

சங்கானையைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமசாமி பரராஜசிங்கம் நேற்று (18.02.2004) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் இராமசாமி தெய்வானைப்பிள்ளையின் சிரேஷ்ட புத்திரனும் செல்லத்துரை - சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகனும் குணபாக்கிய லட்சுமியின் (குகா) அன்புக் கணவரும் நவமணி, குமாரசிங்கம் (கொழும்பு), குலசிங்கம் (U.K.), பூலோகசிங்கம் (பரிஸ்), துரைசிங்கம் (கொழும்பு), பூபாலசிங்கம் (U.K.), சிவராஜசிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் விஜயலட்சுமி (கனடா), இராஜலட்சுமி (கொழும்பு), குகராஜசிங்கம் (U.K.), ரவிராஜசிங்கம் (U.K.), காலஞ்சென்ற ஜெவிராஜசிங்கம், தர்ஜலட்சுமி (மாதகளை), விஜிதா (கொழும்பு), குலராஜசிங்கம் ஆகியோரின் அன்புத் தந்தையும் சுகுணதாசன் (கனடா), சுதாகரன் (கனடா), பாலஜிதா (கொழும்பு), நிரோஜன் (குவைத்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற தனலட்சுமி, கனகலட்சுமி(மலேசியா), இராமகிருஷ்ணன் (மலேசியா), விவேகானந்தா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுலக்சி, ஜொயினா, பிரிவிஷா, தம்பி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

*170, அரசடி வீதி,*
*கந்தர்மடம்.*
*TP.No: 021 222 6768* (28666)(40-36-12)
தகவல்:
திருமதி கு.பரராஜசிங்கம்.
(மனைவி)

## வட்டர் செல்லத்துரை

அம்மன் கோவில் வீதி, நாவற்குழி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வட்டர் செல்லத்துரை நேற்று புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் இராசநாயகம் (நடராசா), யோகராசா, துரைராசா, பஞ்சாட்சரம், திருச்செல்வம், குணராசா, குணசீலன், மோகன், அருந்தவராசாத்தி, அன்ரன் ஆகியோரின் அன்புத் தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

*நாவற்குழி கிழக்கு,*
*தச்சன்தோப்பு.* (C/33360)(40-12-36)
தகவல்:
செ.இராசநாயகம்(மகன்).

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.02.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.